Registered at the G. P. O. as a Newspaper VOUCHER COPY விலை சதம் 15

# ஈழநாடு

EELA NADU

போன்: 389 National TAMIL DAILY தேசிய தினசரி தபாற்பெட்டி எண்: 49

மலர் 4 யாழ்ப்பாணம் பிலவ பங்குனி 5 ஆம் நாள் ஷவ்வால் 11 (18-3-62) ஞாயிற்றுக்கிழமை இதழ் 36

பட்டுப்பருத்திப் புடவைகளுக்குச் சிறந்த ஸ்தாபனம்

டயருமஸ்

மெயின்வீதி, யாழ்ப்பாணம்.

# ஆசிரியசேவைகமிஷன் நியமிக்க வேண்டும்

## கல்வி அமைச்சரிடம் தமிழாசிரியர்கோரிக்கை

### ஸ்தல ஸ்தாபன சேவைக்கு இருக்கும் கமிஷன் ஆசிரியருக்கு இருத்தலாகாதா?

மட்டக்களப்பு, சனி

ஸ்தலஸ்தாபன சேவைப்பகுதிக்கு ஒரு சேவைக்கமிஷன் இருப்பதுபோன்று ஆசிரியர்களுக்கும் ஒரு ஆசிரியர் சேவைக் கமிஷன் நியமிக்கப்பட்டால், ஆசிரியர்களின் இடமாற்றம்போன்ற பல சிக்கல்களைத் தீர்த்துக்கொள்வது இலகுவாக இருக்குமென அகில இலங்கைத் தமிழ் ஆசிரியர்கள் சங்கம் கல்வி அமைச்சுக்கு அனுப்பியுள்ள மகஜரில் கோரியுள்ளது.

"ஸ்தலஸ்தாபன சேவைப் பகுதியிலுள்ள சிறுதொகையான சேவையாளருக்கென்று ஒரு சேவைக் கமிஷன் இருக்குமானல் 70,000 பேர்களைக் கொண்ட ஆசிரியர்கள் சங்கம் ஒன்றுக்குக் கமிஷன் ஒன்றை ஏன் அமைக்கக்கூடாது?" என்று அந்தமகஜரில் கேட்கப்பட்டுள்ளது.

ஆசிரிய இடமாற்றங்களில் ஏற்படும் சிக்கல்களைச் சுட்டிக்காட்டும் ரீதியில் ஆசிரியர் சங்கம் கல்வி அமைச்சுக்கு இந்த மகஜரை அனுப்பிவைத்துள்ளது. சங்கச்காரியதரிசி திரு. எம். சிவநேசராஜா மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:-

"70,000 ஆசிரியர்களின் இடமாற்றம் சம்பந்தமான பொறுப்புக்களை ஆசிரிய இடமாற்றசபையின் ஒரேயொரு காரியதரிசி மேற்கொண்டு செய்வதாலேயே பல சிக்கல்கள் ஏற்படுகின்றன என்று ஸ்ரீலங்கா ராஜகுரு சங்கமயா கூறியுள்ளது முற்றிலும் உண்மை."

அரசாங்க பாடசாலை ஒன்றின் அதிபரை நியமிக்கும் பொறுப்பு பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தைச் சாரும் என்ற செய்தியைக் கேட்டபின்னரே ஆசிரியர் சங்கங் காரியதரிசி மேற்படி மகஜரைக் கல்வி அமைச்சருக்கு அனுப்பிவைத்தார். இந்த முறை மேற்கொள்ளப்பட்டால் பள்ளிக்கூடங்களுக்கு இறுதிகாலம் ஏற்பட்டுவிடும் என ஆசிரியர்கள் சங்கக் காரியதரிசி குறிப்பிட்டார்.

பெற்றோர்-ஆசிரியர் சங்கம் உடனடியாகவே ஒரு அரசியல் மேடையாக மாறிவிடும் எனவும் பாடசாலை அதிபர் தன்னைத் தேர்ந்தெடுத்த சாரருக்கு பிரதியுபகாரம் செய்யும் வேலைகளில் இறங்கி விடுவார் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இந்தச் சூழ்நிலையில் ஆசிரியர்களுக்கான சேவைக் கமிஷன் ஒன்று நியமிக்கப்பட வேண்டும் எனச் சங்கம் வலியுறுத்தியுள்ளது.

காலஞ்சென்ற பிரதமர் பண்டாரநாயக்காவே ஸ்தலஸ்தாபன சேவைக் கமிஷனைத் தொடக்கி வைத்தார் என்றும், இந்த அரசாங்கம் அவரது கொள்கைகளைத் தொடர்ந்து கடைப்பிடிப்பதானல் அவ்வாறு ஆசிரியர்களுக்கும் ஒரு சேவைக் கமிஷனை நிறுவவேண்டும் என்றும் ஆசிரியர் சங்கக் காரியதரிசி குறிப்பிட்டுள்ளார்.

பெற்றோர்—ஆசிரியர் சங்கம் பாடசாலை அதிபரை நியமிப்பதை அரசாங்க பாடசாலைகளோ அன்றி டைரக்டர் நிருவாகத்திலுள்ள பாடசாலைகளோ விரும்பவில்லை என்பதை காரியதரிசி சுட்டிக்காட்டியுள்ளார்.

---

## தமிழ் நாடகம்

★ ஈழநாடு 18—3—62 ★

'நாடகத் தமிழ்' என்ற சிறப்பு தமிழ் மொழிக்கு மட்டுமே இருந்து வருகின்றது. தமிழில் பேசவும் எழுதவும் கற்றுக் கொண்ட காலத்திலிருந்தே நாடகத் தமிழ் உண்டாகியிருக்கவேண்டுமென்பது அறிஞர்கள் கருத்து. ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தொல்காப்பியம் எனும் நூல் தமிழில் இயற்றப்பெற்றது. அதில் ஓரிடத்தில் 'நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்' என்ற குறிப்புக் காணப்படுவதால் அக்காலத்திலேயே தமிழ் நாடகம் இருந்திருக்க வேண்டுமென தமிழ் நாடகத்தின் தந்தையெனப் போற்றப்படும் பம்மல் சம்பந்த முதலியார் கருதுகின்றார்.

அப்படியானல் அக்காலத்திலுள்ள தமிழ் நாடக நூல்கள் ஏன் இப்போது கிடைப்பதில்லையென்ற கேள்வி எழுவது இயல்பே. பழங்காலத்து நூல்கள் ஓலைகளில் எழுதப்பட்டனவென்றும் ஏடுகளை எவ்வளவு கவனமாகப் பாதுகாத்தாலும் அவை 150 அல்லது 200 ஆண்டுகளுக்கு மேல் நின்று பிடிக்கமாட்டாதென்னவும் ஆராய்ச்சியாளர் கூறியுள்ளனர்.

நாடக இலக்கியங்கள் படித்து மகிழும் இலக்கியங்களல்ல. மேடையில் பார்த்து மகிழும் இலக்கியங்கள். எனவே, நூல் வடிவில் ஒன்றும் கிடைக்காவிட்டாலும் மேடைகளில் நாடகம் ஆயிரக்கணக்கான ஆண்டுகளாகத் தொடர்ந்து நடைபெற்று வந்திருக்கின்றதென்பதை நாடகக் கலைஞர் டி. கே. சண்முகம் போன்றவர்கள் பல சந்தர்ப்பங்களிற் கூறியிருக்கின்றனர்.

முன்னர் வளர்ந்து வந்த தமிழ் நாடகம் இடையில் தளர்ச்சியுற்று இப்போது மீண்டும் வளர்ச்சியுற்று வருகின்றது. சென்ற 75 ஆண்டுகளாக மேடையிடப்பெற்ற நாடகங்கள் பல நூல் வடிவில் உள. இக்கால எழுத்தாளர்களும் நல்ல நாடகங்களை எழுதி வருகின்றனர். மக்களும் தமிழ் நாடகவிருத்தியில் ஆர்வம் காட்டுகின்றனர். சமீபத்தில் யாழ்ப்பாணத்திலே மேடையிடப்பெற்ற 'சிங்ககிரிக் காவலன்' தமிழ் நாடக வளர்ச்சிக்கு உதவுவதுடன் அதிற் சேரும் நிதி தமிழ் நூல்களை வெளியிடவும் உதவுமென்பதை அறிந்து மகிழ்கின்றோம்.

கலைத்துறையில் ஒவ்வொரு மொழிக்கும் தனித்தன்மையும் வரலாற்றுச் சிறப்பும் உண்டு. இவற்றுக்கு ஊறு விளையாத வகையில் நாடகத் தமிழை வளர்ப்பது தமிழ்க் கலைகளுக்கே ஆக்கம் தருவதாகும்.

---

முருங்கன் கொலைவழக்கில் தீர்ப்பு

## இளைஞனுக்கு 7 வருடம் கடுங்காவல்: 2ம் எதிரி விடுதலை

### 1ம் எதிரியின் தகப்பன்மீது நடவடிக்கை எடுக்க கட்டளை

யாழ்ப்பாணம், சனி

முருங்கன் கொலைவழக்கில் முதலாம் எதிரியான 16 வயது இளைஞன் நாகமணி பூபாலசிங்கத்திற்கு 7 வருட கடூழியச் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாம் எதிரியான ஆறுமுகம் விடுதலை செய்யப்பட்டார்.

கடந்த 5 தினங்களாக வடபகுதி அசைஸ் நீதிமன்றத்தில் டாக்டர் எச். டபிள்யு. தம்பையா முன்னிலையில் நடைபெற்ற முருங்கன் கொலைவழக்கில் நேற்று சண்டை நடைபெற்றுக்கொண்டிருக்கும் சமயத்தில் கைமோசக் கொலைக் குற்றத்தைச் செய்ததென்ற ஜூரிமாரின் ஏகமனதான முடிவுக்கிணங்கவே முதலாம் எதிரிக்கு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. இரண்டாம் எதிரி சுற்றவாளியென ஜூரிமார் ஏகமனதாகக்கண்டனர்.

தீர்ப்பளிக்கையில் முதலாம் எதிரியைப் பார்த்து நீதியரசர் பின்வருமாறு கூறினர்:-

"நீ இறந்தவரைத் துரத்திச் செல்ல அவர் இராசையாவின் வீட்டிற்குள் அடைக்கலம் புகுந்தும், விடாது தொடர்ந்து சென்று அவரை கத்தியினல் குத்தியிருக்கிறாய். பின்பும் அவர் வீழ்ந்துகிடந்தசமயத்திலும் கத்தியினல் குத்திக்காயப்படுத்தியிருக்கிறாய். இந்த இரு காயங்களும் மட்டுமே மரணத்தை ஏற்படுத்தப்போதுமானது என்று வைத்திய சாட்சியம் தெரிவிக்கிறது. உனது வயதுக்காகவே ஜூரிமார் கருணை காட்டி உன்னைக் கொலைக் குற்றத்திற்கு குற்றவாளியெனக் காணவில்லை. ஆகவே தான் 7 வருடகடூழியச் சிறைத்தண்டனை விதிக்கிறேன்

ஆனல் சிறையிலே இவரை மற்றவர்களிலிருந்து பிரித்து வைத்து காலத்துக்குக் காலம் அதிகாரிகள் ஒழுக்கநூல்களும் சமயநூல்களும் கற்பித்துத் திருத்தவேண்டியது அவசியம்."

(12ம் பக்கம் பார்க்க)

---

## அமெரிக்காவின் சக்தி வாய்ந்த ஏவு கருவி

புளோரிடா, மார்ச். 17

அமெரிக்க விஞ்ஞானிகள் நேற்று புதியதொரு ரொக்கட்டை (ஏவுகருவி) கேப்கனவரால் தளத்திலிருந்து வானவெளிக்கு அனுப்பிவைத்தனர். 25,00 அமெரிக்க மோட்டார் கார்களின் சக்தியையுடைய இந்த ஏவுகருவி 150 ருத்தல் எடையுள்ளது.

---

## காங்கிரஸ்தலைமைபதவி ஸ்ரீமதி இந்திராகாந்தி இஷ்டமின்மை

புதுடில்லி, மார்ச் 16

காங்கிரஸ் தலைமைப் பொறுப்பை உடனடியாக ஏற்றுக்கொள்ள தம்மால் இயலாது என்று ஸ்ரீமதி இந்திராகாந்தி தெரிவித்துள்ளதாகச் சொல்லப்படுகிறது. வேறு நபரின் பெயர் அறிவிக்கப்பட்டவுடன் ஸ்ரீ சஞ்சீவிரெட்டி தலைமைப் பொறுப்பிலிருந்து விலகவிருக்கிறார்.

வேறு அலுவல்களிருப்பதாலேயே ஸ்ரீமதி இந்திரா காந்தி தலைமைப் பொறுப்பேற்க விரும்பவில்லை என குறிப்பிடப்படுகிறது.

---

## எம். பி. க்கு லீவு

கொழும்பு, வெள்ளி

ஹொரணை எம். பி. திரு. ரத்னயகாவுக்கு ஜனப்பிரதிநிதிகள் சபை 3 மாத லீவு வழங்கியது.

---

## இன்று

மலாயா பிரயாணமாகும் முத்தமிழ்மணி லெ. எஸ். எஸ். மணிபாகவதருக்கு நல்லூர் தேவஸ்தானம் சார்பில், நல்லூர் கந்தசுவாமி கோவில் சண்முக தீர்த்த மண்டபத்தில் மாலை 7-30 க்கு பிரியாவிடை நடைபெறும். பிற்பகல் 3 மணிக்கு வண்ணை வைத்தீசுவரன் ஆலயத்திலிருந்து ஊர்வலம் ஆரம்பமாகும்.

---

அரசாங்க சேவையாளர்

## இளைப்பாறுவதை அரசாங்கம் மறுக்கலாம்

### திறைசேரி அதிகாரிக்கு புதிய அதிகாரம்

கொழும்பு, சனி

அரசாங்க ஊழியர்கள் இளைப்பாறும் காலம் வந்து இளைப்பாறும்போது அவர்களின் சேவை அரசாங்கத்துக்குத் தேவை எனக்காணப்பட்டால் அவர்கள் அவ்வாறு இளைப்பாற அனுமதிக்கப்படமாட்டார்கள்.

நிதி மந்திரி திரு. பீலிக்ஸ் டயஸ் பண்டாரநாயக்காவின் ஆலோசனைப்படியே அரசாங்கம் மேற்கண்டவாறு தீர்மானித்துள்ளது. இவ்வாறு ஒழுங்குசெய்வதாக இருந்தால் அரசாங்கசேவை ஊழியரின் பென்ஷன் விதியில் மாற்றங்களைச் செய்யவேண்டியிருக்கும்.

அரசாங்கசேவையில் கடமையாற்றும் ஒருவர் இளைப்பாறும் காலம் வந்ததும் அவரது சேவை தேவையென திறைசேரி அதிகாரி கருதுவாரானல் அவருக்கு இளைப்பாற அனுமதி அளிக்காது விடலாம் என அரசாங்கம் திறைசேரி அதிகாரிக்கு அதிகாரம் அளித்துள்ளது.

அரசாங்கத்தின் இந்தப் புதிய தீர்மானம் 1961-ம் ஆண்டு மே 4-ம் திகதியிலிருந்து அமுலுக்கு வருகிறது.

# உங்கள் இராசி பலன்

சோதிட ஆசான் செ. தெல்லியூர் எழுதுவது

பிலவ ஆண்டு பங்குனி மாதம் 5-ந் தேதி ஞாயிற்றுக்கிழமை (18-3-62) முதல் பங்குனி மாதம் 11-ந் தேதி சனிக்கிழமை (24-3-62) வரை உள்ள பலன்கள்.

பிலவ ஆண்டு பங்குனித் திங்கள் 5ந் திகதி ஞாயிற்றுக்கிழமை (18-3-62) காலை 7-41 வரை துவாதசி. பின் திரயோதசி. பகல் 11-57 வரை ஆயிலியம். பின்னர் மகம், மரண யோகம், பிரதோஷ விரதம், வழமையான கருமங்கள் செய்க, தெய்வ வழிபாடு உகந்தது.

### மேட இராசி

அச்சுவினி, பரணி, கார்த்(திகை 1-ம் பாதம் வரை.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பொதுவாக குடும்ப சுகம், சந்தோஷம், பொருள் வரவு, சொத்துகளால் ஆதாயம், கமத்தொழில் சிறப்பு, பொருள் வரவு உத்தியோகசிறப்பு, மதிப்புயர்ச்சி, பொருள் சேர்க்கை, பெண்களுக்கு சந்தோஷகரமான வாழ்க்கை, சுபிட்சநிலை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் மாதம் 18, 19, 22, 23, 24 சுபதினங்களாகும்.

★

### இடபஇராசி

(கார்த்திகை பின் முக்கால் ரோகிணி, மிருகசீரிடம் முன் னரை முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் பொதுவாக நற்பலன்கள் கூடுதலாக இருக்கும். குடும்பச்சிறப்பு, பொருள் வரவு, உத்தியோக மேன்மை, சகோதரரால் உதவி, சமூகச் சிறப்பு, கமத் தொழில் நன்மை கல்வி வித்தைச் சிறப்பு முதலியனவும், பெண்களுக்கு குடும்ப சந்தோஷமும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் மாதம் 4, 16, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### மிதுன இராசி

(மிருகசீரிடம் 3, 4, திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் உடல்நலக்குறைவு, பிதுருவழி உதவி, பொருள் வரவு, தொழிற் சிறப்பு, நண்பராலும் முதியோரால் ஆதரவு, அரசாங்க உதவி, வித்தைச் சிறப்பு, மதிப்புயர்தல். உத்தியோகத்தில் நன்மை ஆகியனவும் பெண்களுக்குப் பொருள்வரவு, குடும்பச்சிறப்பும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் மாதம் 15, 16, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### கடக இராசி

(புனர்பூசம் 4-ம் பாதம், பூசம் ஆயிலியம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்ப சுகக் குறைவு, உடல்நலக் குறைவு, நம்பி ஏமாற்றமடைதல், தாயாதிகளால் தகராறுகள் ஏற்படுதல், பிதாவழி உதவி, கல்வியில் கஷ்டமும் பணமுடையும் பெண்களுக்கு ஆரோக்கிய யின்மையும் கணவருக்கு கஷ்ட பலன்களும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் மாதம் 15, 16, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### சிங்க இராசி

(மகம், பூரம், உத்தரம் 1-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்பத்தில் கஷ்டங்களும் அவற்றை உடனுக்குடன் சமாளிக்கும் திறனும், அலைச்சலும், பணவிஷயத்தில் எதிர்பாராததடைகளும், வியாபாரத்தில் மந்த நிலைமையும் பின் அவற்றைத் தன் முயற்சியால் சமாளித்தலும், உத்தியோகத்தருக்கு நற்பலன்களும் கல்வியாளருக்கு உத்தம பலன்களும் பெண்களுக்கு குடும்பச் சிறப்பு, பொருள் வரவு முதலினவும் காணப்படுகின்றன. இவ்விராசியாளருக்கு மார்ச் மாதம் 15, 17ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### கன்னி இராசி

(உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2, பாதம்முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்பத்தில் சந்தோஷமும் ஆரோக்கிய நிலைகளும் செலவுகள் கட்டுக்கடங்கியிருத்தலும் மதிப்பும் செய்தொழிலில் வெற்றிகளும் வியாபாரிகளுக்கு வருவாய் அதிகரிப்பும் நன்மைப் பேறுகளும், மாணவருக்கு வித்தைச் சிறப்பும் பெண்களுக்கு குடும்பத்தில் நன்மைகளும் பொருள்வரவும் ஆடம்பரச் செலவுகளும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச்மாதம் 15, 17, 18 சுபதினங்களாகும்.

★

### துலா இராசி

(சித்திரை 3, 4, சுவாதி, விசாகம் 1, 2, 3-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் செய்தொழில் வெற்றி, பொருள்வரவு, சமூக மதிப்பு, குடும்பத்தில் இடையிடை கஷ்டம், பணச்செலவு, சகோதரரால் தொல்லைகள், வியாபாரத்தில் கடும்உழைப்பு, உத்தியோகத்தருக்கு உழைப்புக்கு ஏற்ற ஊதியமின்மை, விருப்பக்குறைவு, கல்வியில் மந்த நிலைமை, பெண்களுக்கு குடும்பச் சிறப்பு, மகிழ்ச்சிநிலை ஆதியன காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 15, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### விருச்சிக இராசி

(விசாகம் 4-ம் பாதம், அனுஷம், கேட்டை முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் கடன் தொல்லைகள் சகோதர கஷ்டம், செய்தொழில் தடை, உடல் நலக் குறைவு, மாணவருக்கு வித்தைச் சிறப்பும், வர்த்தகருக்கு தொழிலில் மந்த நிலைமையும் முயற்சிக்கு ஏற்ற ஊதியமின்மையும் பெண்களுக்கு குடும்பத்தில் கஷ்டங்களும் வைத்தியச் செலவுகளும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 14, 17, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### தனு இராசி

(மூலம், பூராடம், உத்தராடம் 1-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்பத்தில் நன்மைகளும் முயற்சிகளில் வெற்றிகளும் பொருள் தாமதித்து வருதலும் உடல்நலம் குறைந்து உடனுக்குடன் அபிவிருத்தி அடைதலும் கல்விச் சிறப்பும் உத்தியோகத்தருக்கு தொழிலில் சமநிலைமையும் உழைப்புக்கு மதிப்பும், வர்த்தகருக்கு தாமதமாகவே பலன் கிடைத்தலும் பெண்களுக்கு அதிக பிரயாசையால் மத்திம பலனும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 15, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### மகர இராசி

(உத்தராடம் 2, 3, 4 திருவோணம், அவிட்டம் 1, 2-ம் பாதம் முடிய)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்ப சந்தோஷம் இல்லறச் சிறப்பு, செய்தொழில் வெற்றி, பொருள்வரவு, இடையிட தேக நலம் பாதிக்கப்படுதல், வர்த்தகத்தில் கஷ்டமும் பாடுபடற்கேற்ப பலன் கிடையாமையும் மாணவருக்கு கல்வியில் மத்திம நிலையும் உத்தியோகத்தருக்கு தொழில் நிலயங்களில் கஷ்டமும் சச்சரவும் பெண்களுக்கு முயற்சி வெற்றியும், களத்திர புத்திர சுகமும் பொருள் வரவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் மாதம் 15, 17ந் தேதிகள் சுபதினங்களாகும்.

★

### கும்ப இராசி

(அவிட்டம் 3, 4, சதயம், பூரட்டாதி 1, 2, 3-ம் பாதம் முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் குடும்பசுகக்குறைவு, பணமுடை, கடன்தொல்லை, நம்பி ஏமாற்றமடைதல், தொழிற்தடை, வீண் பிரயாணக்கஷ்டம், கமத்தொழில் நன்மை, வித்தைலாபம், உத்தியோகச் சிறப்பும் அதிகாரிகள் உதவியும், பெண்களுக்கு குடும்ப கௌரவம், சிறப்பு, பொருள் வரவு, நற்பலன்கள் நடத்தல் ஆகியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 15ந் தேதி சுபதினமாகும்.

★

### மீன இராசி

(பூரட்டாதி 4-ம்பாதம், உத்தரட்டாதி, ரேவதி முடிய.)

இவ்விராசியாளருக்கு இவ் வாரத்தில் முயற்சித் தடை. குடும்பத்தில் செலவு அதிகரித்தல், வெளியூர் பிரயாணத்தால் அலைச்சல், பணமுடை, மனத்தாங்கல்கள் ஏற்படல், வர்த்தகத்துறையில் நம்பி ஏமாறல், மந்த நிலைமை, பணக்கஷ்டம், உத்தியோகத்துறையில் செய்தொழில் அலைச்சல், அதிகாரிகள கஷ்டம் தருகல், ஊக்கக் குறைவு, பெண்களுக்கு ஏமாறம், அலைச்சல், குடும்பசுகக் குறைவு ஆகியனவும் காணப்படுகின்றன. இவர்களுக்கு மார்ச் 15, 16, 18ந் தேதிகள் சுபதினங்களாகும்.

---

# உணவும் நோயும்

**தவறான உணவு வகைகளை உட்கொள்வதாலும், உணவுச் சத்து போதிய அளவு இல்லாதிருப்பதாலும் பலவித நோய்கள் ஏற்படுகின்றன வென்பதை இக்கட்டுரை விளக்குகின்றது.**

உட்கொள்ளும் உணவு எல்லாமே ஜீரணமாகிவிடுவதில்லை, சத்துள்ள பகுதி இரத்தத்தில் கலந்து சக்கைப் பகுதி மலமாக வெளியேற்றப்படுகின்றன. ஜீரணமாகாத பொருளில் நுண்ணிய பகுதிகள் இரத்த ஓட்டத்தில் கலந்து இரைப்பைக்குள்ளும் போய் கழிவுப்பொருள்களுடன் வெளி வருகிறது என்பதை பிரபல ஜெர்மன் நிபுணர் டாக்டர் வோல்கீமர் கண்டுபிடித்திருக்கிறார். கீல் வாயு நோய் ஏற்பட இது காரணமாக இருக்கலாம் என்று கூறப்படுகிறது.

உடல்கூறு சாஸ்திரத் துறையில் சமீபத்தில் கண்டுபிடிக்கப்பட்ட புது விவரங்களிலிருந்து வைத்தியத் துறையில் புதுமுறைகள் உண்டாக வழி ஏற்பட்டுள்ளன. மனிதர்கள் பிராணிகள் இரைப்பைகளின் பக்கச் சுவர்கள், ஜீரணமாகாத மிக நுண்ணிய உணவுப்பொருளையும் உள்ளே அனுமதிக்கிறது என்கிற உண்மையை மேற்கு ஜெர்மன் பிரபல டாக்டரும் உடல்கூறு சாஸ்திர நிபுணருமான டாக்டர் வோல்கிமர் நீண்டகால ஆராய்ச்சியின்மூலம் கண்டுபிடித்திருக்கிறார்.

உணவுப் பொருளை உட்கொண்டால் அது பலவகை ரஸங்களால் கரைக்கப்பட்டு கரைந்த பகுதி இரத்தத்துடனும் கரையாத பகுதி சிறுகுடலுக்கும் தள்ளப்படும் என்பதுதான் இதுவரை எல்லாருக்கும் தெரிந்திருந்த செய்தி. ஜீரணமாகாத உணவில் நுண்ணிய பாகம் இரைப்பைகுள் செல்லக்கூடியது என்பது பற்றி யாரும் நினைத்துக்கூடப் பார்க்கவில்லை.

வோல்கீமர், முதலில் பன்றிகள், ஆடுகள், நாய்கள் இவைகளைக் கொண்டு தன் ஆராய்ச்சிகளைச் செய்தார். பின்னர் தாங்களாகவே வலுவில் பரிசோதனைக்குட்பட்ட மனிதர்களிடமும் சோதனைகளை நடத்தினர். உருளைக் கிழங்கு, சோளம் இவைகளிலுள்ள மாச்சத்துப் பொருளையும் ரொட்டி தயாரிக்க உபயோகிக்கப்படும் "ஈஸ்ட்" என்ற பொருளையும் தண்ணீரிலும், பாலிலும் கலந்து அவர் கொடுத்து ஆராய்ந்தார். இதன்மூலம் அவர் கண்டுபிடித்த முடிவுகள் பிரமிக்க வைப்பதாக இருந்தன. கோடிக் கணக்கான மாச்சத்து நுண்ணிய பாகங்களில் ஒன்று அல்லது இரண்டு இரைப்பைக்குள் நுழைந்து விடுகிறது என்பதே இவர் கண்டு பிடித்த விஷயம். இந்நுண்ணிய பொருள் இரைப்பையிலும் அதற்குப் பிற்பாடும் எவ்வித மாற்றத்தையும் அடைவதில்லை. இது முடிவில் இருமலின்போது கபத்துடனே அல்லது வெளிப்படும் சிறுநீருடனே வெளியேறிவிடுகிறது.

எப்படி நன்றாக வேலைசெய்யும் இயந்திரத்தினுள் மணல் சேர்ந்து விட்டால் கெடுதி ஏற்படுமோ அதேபோல் உடலிலுள்ள இரத்த ஓட்டத்தில் ஜீரணமாகாத உணவுப்பொருள் அணுக்கள் சேர்ந்தால் ஆபத்துகள் ஏற்படலாம். ஒருவேளை அஜீரணக் கோளாறுகள் பல ஏற்படுவதற்கு இது காரணமாக இருக்கலாம். கீல் வாயு போன்ற நோய்கள் ஏற்பட இதுதான் காரணமாகவும் இருக்கலாம்.

போஷாக்குக் குறைவாக உள்ளவர்கள் விஷயத்தில் ஜீரணமாகாத உணவுப்பொருளின் நுண்ணிய பாகங்கள் அதிகமாக இரத்தத்தில் கலப்பதாக இருக்கலாம் என்பதையும் வோல்கிமர் கண்டுபிடித்திருக்கிறார்.

தவறான உணவுகளை உட்கொள்வது, உணவுச் சத்துகள் போதிய அளவில் இல்லாமலிருப்பது இவை காரணமாக பலவித நோய்கள் ஏற்பட இடமுண்டாகிறது என்பது இப்போது தெரியவருகிறது.

---

## நோய் கண்ட செடிக்கு இலை வழியே 'இன்செக்ஷன்'

செடிகளின் வேர்கள் கெட்டுப் போனாலும் நோய்வாய்ப் பட்டாலும், இலையில் உள்ள நரம்பு வழியாக அவற்றுக்கு ரசாயன உரங்களை "இன்செக்ஷன்" செய்து பிழைக்க வைக்கலாம் என்று தெரிகிறது. அமெரிக்காவில் கார்னல் பல்கலைக்கழக விவசாயக்கல்லூரியில் இவ்வாறு ஆராய்ந்து கண்டுபிடித்திருக்கிறார்கள்.

கல்லூரிப் பேராசிரியர் ஜேம்ஸ் டபிள்யு. பூட்வி என்பவரும் கல்லூரியில் ஆராய்ச்சி செய்து படிக்கும் மார்ட்டின் எம். மேயர் என்னும் மாணவரும் சேர்ந்து, சாமந்திச்செடியிலும் இன்னொருவகைச் செடியிலும் ஆராய்ச்சி நடத்தினர்கள அவற்றின் இலைவழியாகத் தகுந்த அளவில் உரச்சத்துக்களைச் செலுத்தினால் அவை நன்கு வளர்கின்றன என்று அவர்கள் கண்டார்கள்; ஆனால் அந்த வளர்ச்சி, ஒரு நோயும் இல்லாத செடிகள் மண்ணோடு கலந்து வைத்த உரச்சத்துக்களை உறிஞ்சி வளரும் அளவு இல்லை.

மண்ணில் உப்புக்கள் அதிகமாக இருந்தாலும், தண்ணீர் வடிய வழி இல்லாமல் அதிகம் கட்டி நின்றாலும் பல செடிகளின் வேர்கள் கெட்டுப் போகும். அத்தகைய செடிகளைக் காப்பாற்றத் தங்கள் ஆராய்ச்சி வழிகாட்டும் என்று பேராசிரியரும் மாணவரும் கருதுகிறார்கள்.

---


## ஈழநாடு

### தேசிய தினசரி

### சந்தா விபரம்

ஈழநாடு தினசரி (பக்கங்கள் 8) பிரதி சதம் 10
ஈழநாடு வாரப்பதிப்பு (பக்கங்கள் 12) பிரதி சதம் 15

விற்பனையாளர் மூலம்.

முற்பணம் கட்டுபவர்களுக்கு தபால் அல்லது ஆள்மூலம் வசதிபோல். (தினப்பதிப்பு)

| | |
|---|---|
| ஒரு வருடம்: | ரூபா 33-00 |
| 6 மாதம்: | ரூபா 17-00 |
| 3 மாதம்: | ரூபா 9-00 |

மூன்று மாதத்துக்குக் குறைந்த சந்தாதாரர்களாகச் சேர விரும்புவோர் சமீபத்திலுள்ள ஏஜண்டுகளிடம் சந்தாவைச் செலுத்தும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

வாரப் பதிப்பு உட்பட

| | |
|---|---|
| ஒரு வருடத்துக்கு | ரூபா 40-00 |
| 6 மாதத்துக்கு | ரூபா 21-00 |
| 3 மாதத்துக்கு | ரூபா 11-00 |

அந்த ஊரில் 'கலியாணத்தரகர்' என்று குறிப்பிடுவது கந்தையாண்ணையைத்தான். 'கந்தையாண்ணை' என்றால் தெரியாதவரே இல்லை. எத்தனையோ விவாகங்களை இவர் ஒப்பேற்றி வைத்திருக்கிறார்.

# 'கந்தையாண்ணை'

— 'செங்கை ஆழியான்' —

சிறுகதை

கந்தையாண்ணைக்குக் காலையில் எழுந்ததில் இருந்து ஒரே குதூகலம்; காலைக் கடன்களை முடிக்க வளவுக்குள் போகும் போதும், முகம் கழுவக் கிணற்றடிக்குப் போகும் போதும் ஏதோ சிந்தனை செய்த படியே போய் வந்தார்; அவர் முகத்திலே சிந்தனையினூடே என்றுமில்லாத மகிழ்ச்சி தாண்டவமாடியது. தேநீர் குடிக்கும் போது மனைவியைப் பார்த்து ஆழ்ந்த ஒரு வெற்றிப் புன்னகை புரிந்தார்; மனைவிக்கு இது மிகவும் அதிசயமாகக் கூட இருந்தது.

கந்தையர் தன்னுடைய மனைவியைப் பார்த்துச் சிரித்து எவ்வளவோ ஆண்டுகள் கழிந்து விட்டன; கலியாணமும் செய்து நான்கு குழந்தைகளுக்கு — (இறந்தவையோடு எட்டு) — தகப்பனான பின்பு கூடக் கந்தையர் தன்னைப் பார்த்து இப்படிச்சிரித்ததில்லை என்பது அவளுக்கு நன்கு தெரியும்.

கந்தையரின் மூத்த மகன் பதினெட்டு வயதிலேயே யாரோ ஒருத்தியைக் காதலித்துக் கலியாணமும் செய்து கொள்ளப் போவதாகத் துணிந்து தகப்பனிடம் சொன்னான்; கந்தையருக்கு என்றுமில்லாத கோபம் வந்து விட்டது. 'முப்பத்தியாறு வயதிலே தான் செய்திருக்க நேற்றுப் பிறந்த இந்தப் பொடியன் பதினெட்டு வயதிலே 'லவ்' பண்ணிக் கலியாணம் செய்வதா?, என்பது தான் அவருக்குக் கோபத்தை மூட்டியது. பையனைப் பிடித்துக் கண்ட பாட்டிற்குப் 'பளார்,பளார்' என்று அறைந்தார். பையன் அசையவில்லை—சிலை போல நின்றான். கந்தையரின் கைதான் வலித்தது.

உமக்கு இப்பவே கலியாணமும் தேவைப் படுகிறது பொறுக்கிப் பயலே....! என்று விளக்குமாற்றாலேயே பையனை வெளுத்து வாங்கிவிட்டார்; தடுக்க வந்த மனைவிக்கும் எக்கச் சக்கமான உதை.

"அறுதலி!... நீ அவனுக்குக் கொடுத்த செல்லமடி...!"

அந்த அடியோடு பையன் வீட்டை விட்டே ஓடிவிட்டான்; கூடவே கந்தையாண்ணையின் மகிழ்ச்சியும் ஓடி விட்டது; பையன் ஓடியதற்கு மனைவிதான் காரணம் என்பது அவரின் எண்ணம் 'மனிசி' என்ன செய்வாள்? 'காவாலிப் பயல் பதினெட்டு வயதிலே கலியாணம் செய்ய விரும்பியதற்கு......?'

கந்தையாண்ணையின் இரண்டாவது மகன் கொழும்பிலே 'கிளரிக்கல்' வேலை பார்க்கிறான்; இரண்டாவது மகனென்றால் அவருக்கு உயிர்.

"இதிலே பாரும்! என்ரை பிள்ளையளுக்கே இரண்டாமவன் திறந்தவன்! நல்ல குணசாலி! அவனுக்குப் பேரும் சற்குணம் தான்!... என்ரை சொல்லை, நான் கீறின கோட்டைக் கடக்க மாட்டான்!... அவனுக்கு நல்ல சாதி சனத்திலே, அழகான பெண்ணைக, குணம்குறியோடே, நல்ல சீதனத்தோடை, இந்த ஊரே 'இவன் கந்தையன்ரை வீட்டுக் கலியாணத்தைப் பார்' எண்டு சொல்லத்தக்கதாகச் செய்யப் போறன்..." என்று எல்லோருக்கும் கூறத் தவறமாட்டார்.

இன்று கந்தையர் அபூர்வமாக மனைவியைப் பார்த்துச் சிரித்ததும் அவளுக்கு மகிழ்ச்சியாகவும், அதிசயமாகவும் இருந்தது; பயத்தோடு பதிலிறகு ஒரு சிரிப்புச் சிரித்து வைத்தாள்.

கந்தையர் அதை ஒன்றும் கவனிக்கவில்லை; 'விறுவிறெ'ன்று 'தேத்தண்ணியை' வயிற்றிற்குள் ஊற்றிக் கொண்டு பழைய 'டொக்கடாச்' சைக்கிளையும் எடுத்துக் கொண்டு புறப்பட்டார். அந்த நேரம் பார்த்துத்தான் அவரது கடைசி மகளும் "ஐயா எங்கை! போறேர்?..." என்று கேட்டு வைத்தாள்.

கந்தையரின் முகத்திலேயிருந்த மலர்ச்சி எங்கோ கணப்பொழுதில் ஓடிவிட்டது; சைக்கிளை வேலியோடு சாத்தினார்; கறையான் தின்ற பழம் வேலி; சைக்கிளின் பாரத்தைத் தாங்க முடியாமல் பட்ட கதியால்கள் 'படபட'வென்று முறியச் சைக்கிளும் சாய்ந்தது; கந்தையரின் ஆத்திரம் மேலும் கூடிவிட்டது.

மகளைப் பிடித்து முதுகிலே வெறுங் கையால் இரண்டு அறைகள் அறைந்தார்; பேயடித்தது போலப் பையன் 'வீல்' என்று கத்தினான்.

"மூதேசி! சனியன்கள்! கிரகங்கள் எனக்கெண்டு வந்து பிறந்துதுகள்!... வெளியிலே வெளிக்கிட, 'எங்கை போறாய் எண்டு ஒரு கேள்வி?' இனி நிண்டு அவைக்குப் பதில் சொல்லலன்...! இண்டைக்குப் போற காரியம் எங்கை சரிவரப் போகுது...!"

வெகு வேகமாகப் படலையைத் திறந்துகொண்டு, ரோட்டிலே ஏறினார்; காலையில் இருந்த மகிழ்ச்சி எங்கே மறைந்து விட்டது.

அந்த ஊரில் 'கலியாணத் தரகர்' என்று குறிப்பிடுவது, கந்தையாண்ணையைத் தான்; 'கந்தையாண்ணை' என்றால் தெரியாதவரே இல்லை. எத்தனையோ விவாகங்களை இவர் ஒப்பேற்றி வைத்திருக்கிறார்: விசயத்தை முடிப்பதில் மிகவும் சமர்த்தர்; கலியாணத்தை முடித்து வைத்துத் தரகுப் பணத்தைக் கறப்பதில் மிகவும் கெட்டிக்காரர்.

சைக்கிளில் ஏறி உட்கார்ந்த தரகர் கந்தையாண்ணையின் மனம் அவர் வசமில்லை! 'எப்படியாவது இக்கலியாணத்தை முடித்து விடவேண்டும்! ஒரு விதமாக ஒப்பேற்றிவிட்டால் மாப்பிளையை வீட்டாரிலை ஒரு ஆயிரமும், பொம்பிளை வீட்டாரிலை ஒரு ஐந்நூறும் கறந்துவிடலாம்' என்று எண்ணியபடி, சைக்கிளை ஒரு மிதி மிதித்து ஐயனார் கோயில் திருப்பத்தில் ஒரு திருப்புத் திருப்பினார்.

எதிரே ஒரு கார் மிக வேகமாய்ப் பாய்ந்து வந்தது; திடுக்கிட்டுப்போன கந்தையரின் கைகள், சைக்கிளை ரோட்டுக் கானுக்குள்ளே இறக்க, இறங்கிய வேகத்தில், பிறேக் இல்லாத அவரது சைக்கிள் தெறிகெட்ட குதிரைபோலப் பாய்ந்தது: எதிரே வீதியிலிருந்த சிலயார்கள் தூரத்தில் இருந்த, ஐயனார் கோயில் பாழடைந்த கேணியைக் கண்டதும், அவருக்குத் திக்கென்றது. கேணியைச் சைக்கில் நெருங்கிவிட்டது. கால்களிரண்டையும் 'வரயரிலே' வைத்துத் தேய்த்து நிற்பாட்ட முயன்று முடியாமற் போகவே, சைக்கிளிலிருந்து கீழே குதித்தார்.

சைக்கிள் கேணிக் கட்டிலே போய் இடித்துவிட்டு புரண்டது; கந்தையர் ரோட்டுக் கானில் புரண்டு கிடந்தார்; நல்ல அடி, யாரோ இரண்டு மூன்று பேர் தூக்கிவிட்டார்கள்.

"பாவி மனிசன், விடிய முன்னம் 'கொட்டிலிற்குப்' போட்டு வந்தான் போலிருக்கு!..." எனத் தூக்கியவர்களில் ஒருவர் முணுமுணுத்தார்

நல்லூரிலுள்ள பொன்னம்மா வீட்டிறகுக் கந்தையர் வரும் போது பத்துமணியாகிவிட்டது; தரகரைக் கண்டதும் பொன்னம்மாவின் முகம் மலர்ந்தது.

"வாருங்கோ, கந்தையாண்ணை! நான் சொன்ன விஷயமாய் பார்த்தியளா...!"

"ஓம்...நீர் சொன்ன விஜயமாய்த்தான் நாலைஞ்சு நாளாய் அலையிறேன்! ஒரே களைப்பு... நல்லா நித்திரைகூடக் கொள்ளவில்லை! இண்டைக்குக் கூடக் காலமை...பாரும்..."

"அதெல்லாம் இருக்கட்டும், கந்தையாண்ணை! போன விஜயம் எப்படியெண்டு சொல்லாமல்...?"

"ஏன் அவசரப்படுகிறீர்? இந்தத் தரகு கந்தையா ஒரு விசயத்திலே மனம் வைச்சு ஈடுபட்டால் அதை நிறைவேற்றாமல் வருவானா?... அதெல்லாம பழந்தான்! கொஞ்சம் கோப்பித்தண்ணி கொண்டு வரச் சொல்லும்...!"

பொன்னம்மாவிற்குக் காரியம் பழந்தான் என்றதும், முகமெல்லாம் பல்லாகிவிட்டது. மூத்த மகளைக் கூப்பிட்டுக் கோப்பி கொண்டுவர உத்தரவிட்டாள்; மூத்த மகளுக்குத் தரகரைக் கண்டதும் விஷயம் விளங்கிவிட்டது — 'தனக்குக் கலியாணப் பேச்சு நடக்கிறது!' என்று. அதனால், பெரிய மூக்குப் பேணியில் முட்டிவழியக் கோப்பியைக் கொண்டு வந்து தரகர் முன் வைத்தாள்.

"கந்தையாண்ணை! மாப்பிளை எப்படி!... என்ன செய்யிறார்! எத்தனை படித்திருக்கிறார்...? சீதனம் எவ்வளவாம்?... நல்ல பொடியனே?... நல்ல சாதி சனமே?... சொத்துப்பத்து ஏதாவது இருக்கே...?" என்று கேள்விகளைப் பொன்னம்மா அடுக்கினாள்.

கந்தையர் இத்தகைய கேள்விகளுக்குப் பதில் சொல்லிப் பழகியவர்; "பொடியன்; சீதனத்தைப்பற்றி ஒன்றும் கவலைப்படவில்லை! அந்த ஒன்றரைப் பரப்புக் காணியை ஈடு மீண்டு விடுகிறாராம்! அதை விரும்பினால் சீதனமாத் தரட்டாம்...!"

பொன்னம்மாவிற்குப் பெரிய பாரம் இறங்கியது போலவிருந்தது.

"பையன் எப்படிக் கந்தையாண்ணை?..."

"பையன் தங்கப் பவுண் போல! அவ்வளவு அழகு! நல்லாப் படிச்சிருக்கிறான்! நல்லா இங்கிலீசு எல்லாம் எழுதுவான்! நல்லாப் புத்தகங்களெல்லாம் வாசிப்பான்! 'லோங்கும் போடுவான்!'

கதவிற்கு அப்பால் நின்று இவற்றையெல்லாம் கேட்டுக் கொண்டிருந்த பொன்னம்மாவின் மூத்த பெண் பூரித்துப் போனாள்: 'அழகாயிருக்கிறாராம்! 'லோங்சு' கூடப் போடுகிறாராமே?'

"மாப்பிளை என்ன வேலை...?"

தரகர் மெதுவாகச்சிரித்தார்.

"இதென்ன கேள்வி கேட்கிறீர்? பொடியனுக்கு ஓட்டுமடத்திலே நாலு வீடுவளவு இருக்கு! வல்லை வெளியிலே நாற்பத்து மூன்றரை ஏக்கர் நிலம் வேறிருக்கு! பாங்கிலே லட்சக்கணக்கான பணம் இருக்கு! வீட்டிலே பொடியனுக்கு மூண்டு கார்! இந்தப் பெரிய கடையிலே இரண்டு கடை அவனுக்குத்தான்! இதெல்லாமிருக்கேக்கை உத்தியோகம் என்னத்திற்கு...?"

உத்தியோகம் இல்லை என்றதும் பொன்னம்மாவிற்கு ஒரு மாதிரித்தான் இருந்தது.

"பொடியன்ரை நடத்தை எப்படி! குடி...வெறி...அப்படி ஏதாவது...?"

"சீச்சீ! பொடியனை அப்படியெல்லாம் எண்ணக்கூடாது! தங்கக்கம்பி! நல்ல சாதி சனத்திலே பிறந்தவன்! வெத்திலைக் காம்பைக் கூடக் கடிக்கமாட்டான்......!"

"அப்பசரி, கந்தையாண்ணை! இதை எப்படியாவது முற்றாக்கி விடுங்கள்! இண்டாயிரத்துக்கு நகைபோடுறன்! அந்த ஒண்டரைப் பரப்பையும் கொடுக்கிறன்! கெதியிலே ஊர்ச் சனம் கல்லுக்குத்த முன்னம் நாளை வைப்பம்...!"

தரகர் கந்தையர் அடுத்து ஒரு பிரதானமான கேள்வியைப் போட்டார்.

"அப்ப, நீர் எனக்கு ஒரு ஐந்நூறு தந்திடவேணும்...?"

"என்ன கந்தையாண்ணை! எங்களிட்டையும் அப்படியா கேக்கிறது! கலியாணத்தை முடித்து வையுங்கள்! நீங்கள் கேட்கிறதைத் தாறன்!..."

தரகருக்கு மிகவும் மகிழ்ச்சி; அவரின் கடைசி மகள், 'எங்கே போறே' என்று புறப்படும் போது கேட்டது, 'எங்கை விசயம் சரிவராதோ' என்று எண்ண வைத்தது; சைக்கிலால் விழுந்த அடி கூட மாறி விட்டது.

"ஆனா, நீர் ஒன்று கவனிக்க வேண்டும்? பிறகு கந்தையன் இப்படிச் செய்துவைத்தானே எண்டு குறை சொல்லக் கூடாது!" என்றார் தரகர்.

பொன்னம்மாவிற்குப் 'பகீர்' என்றது; கதவிற்குப் பின்னால் நின்று இவற்றைக் கேட்டுக் கொண்டு நின்ற மூத்தமகளுக்கு இடிவிழுந்தது போல விருந்தது.

"என்ன கந்தையண்ணை அப்படி ஒரு போடு போடுகிறாய்?... பொடியனிலே ஏதாவது குறையிருக்கே......?"

"அப்படிப் பிரமாதமாய் ஒண்டுமில்லை! கொஞ்சம் கொன்னை! திக்கித்திக்கித்தான் கதைப்பன்! மற்றப்படி ஒரு குறையுமில்லை! நீர் நாலுகுமரை அடுக்காக இருத்திவைத்திருக்கிறீர்! காணாவேறு ஈடு! நல்ல சொத்துள்ள மாப்பிள்ளை! ஏதோ உங்கடை அதிர்ஷ்டம் எண்டுதான் கூறவேண்டும்...!"

"அவ்வளவு கொன்னையிலையே......?"

"போங்காணும்! கூடாதெண்டு உம்மோளுக்குச் செய்துவைக்க எனக்கென்ன பைத்தியமே?

(9-ம் பக்கம் பார்க்க)

ஆடவர்களுக்கு தேவையான ★ ஷேட்டிங்ஸ் ★ வேஷ்டிகள் ★ துவாய்கள் போன்ற

கைத்தறிப் பிடவைகளுக்கு

" ஹான்ட்லூம்ஸ் "

HANDLOOMS

தலைமை ஸ்தாபனம்: நெ. 7, செட்டியார் தெரு, கொழும்பு.

47, மெயின் வீதி, (பறங்கித் தெரு) யாழ்ப்பாணம்.

கிளை ஸ்தாபனம்: நெ. 69, கொழும்புத் தெரு, கண்டி.

WA\HMS 4

**கன்னங்களிலிருந்து கண்ணீர் வடிய எங்கள் இருவரையும் முத்தமிட்டு வழியனுப்பியபோது எங்களைக் கடவுளின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் ஒப்படைத்துவிட்டு வீட்டில் இருந்தார் எங்கள் அம்மா.**

# சென் ஜோசெப்ஸ் கல்லூரிப் படிப்பும் கொழும்பு வாழ்க்கையும்

## பயணச் சாப்பாடு: றோயல் கல்லூரி பிரவேசப் பரீட்சை: அரியதொரு பாடம்: கணிதப் பாடங்களில் நூற்றுக்குநூறு புள்ளி: வண. பிதாவின் உறைப்பான 'உதை'

—பேராசிரியர் செ. சுந்தரலிங்கம்—

### ஈழப்பாட்டனின் கடிதங்கள்: 7

"ஹறீன் வாசா"
லிங்கம் தோட்டம்,
வவுனியா, 11-3-1962.

எனது அருமையான ஹறீன்,

யாழ்ப்பாணநகரிலுள்ள சென் ஜோன்ஸ் கல்லூரியிலிருந்து அண்ணர் நாகலிங்கமும், நானும், கொழும்பு சென் ஜோசெப்ஸ் கல்லூரிக்குச் சென்றோம். அப்போதான் யாழ்ப்பாணமிருந்து கொழும்புவரை முதன் முதலாக நாங்கள் புகையிரதத்தில் பிரயாணம் செய்தோம். மருதானைப் புகையிரத நிலையத்தைப் போய்ச் சேர 16 மணித்தியாலங்கள் சென்றன.

எங்கள் அம்மா அன்பு நிறைந்த சிரத்தையோடு நல்ல பதமான ஊர் அரிசிச்சோறும், வாய்க்கு ருசியிக்க கோழிக்கறியும் தயாரித்துப் பயணச்சாப்பாடு ஒழுங்குசெய்து தந்தா. பிரயாணக்களைப்பும், அலுப்பும் தோன்றாதிருக்க சிறந்த சிற்றுண்டி வகைகளையும் செய்து தந்தார். ஒருபெரிய பனைஓலைப் பெட்டியுள் கிட்டத்தட்ட 200 கோழிமுட்டைகளைச் சேமித்து உமிபோட்டுப் பக்குவமாக வைத்துத்தந்தார். நாம் வீட்டு நினைவையும், பிரிவாற்றாமையையும் மறந்திருப்பதற்கு அவைகள் கொழும்பில் உதவியாக இருக்கும் என்பது அவரின் எண்ணம். அந்த நாட்களில் எங்கள் கிராமமாகிய உரும்பிராயில் ஒரு கோழிமுட்டையின் விலை ஒரு சதத்திலும் குறைவானதாகும்.

கன்னங்களிலிருந்தும் கண்ணீர் வடிய எங்களிருவரையும் முத்தமிட்டு வழியனுப்பியபோது எங்களை கடவுளின் பாதுகாப்புக்கும் பராமரிப்புக்கும் ஒப்படைத்துவிட்டு வீட்டிலிருந்தா எங்கள் அம்மா. வாழ்க்கையில் முதன்முதலாக அன்றுதான் நாம் எமது அம்மாவை விட்டு ஒரு சில காலம் பிரிந்து செல்ல நேர்ந்தது.

மூத்தண்ணர் பஞ்சலிங்கம் இரண்டு வருடங்களுக்கு முன்னதாகவே சென் ஜோசப்ஸ் கல்லூரியில் ஒரு மாணவனாக இருந்தார். எமக்கு ஓர்வித பரீட்சை ஒன்று நடத்தப்படும் என்றும், அதிலிருந்து எந்த வகுப்பில் நாம் சேரும் தராதரம் உடையவரென்று அறிந்துகொள்ளப்படும் என்றும், அப்பரீட்சைக்கு லத்தீன் பாடம் பிரதானமானது என்றும் அவருக்கு முன்னேற்கனவே தெரியும்.

ஒரு மாசமாக லத்தீன் பாடத்தை ஊன்றிப் படிக்கும் வண்ணம் நான் கட்டாயப்படுத்தப்பட்டேன். குறிப்பிட்ட திகதியில் நாகலிங்கமும், நானும் பரீட்சையெடுக்கச் சென்றோம். ஒரு ஜெர்மன் கத்தோலிக்க சுவாமியார் எங்களுக்கு லத்தீனிலும், ஆங்கிலத்திலும் கேள்வித்தாள்கள் தந்தார். அவர் பெயர் வண. சுவாமி ஹெய்ம்புச்சர் என்பதாகும். நாங்கள் இருவரும் ஒரே கேள்விக்குப் பதில் எழுதினோம். ஒருகேள்வியே தரப்பட்டன. சோதனை முடிந்ததும் பதில் தாள்கள் உடனடியாகவே திருத்தப்பட்டன. எனது தமையனரை தேட்போமில் அதாவது, எட்டாந் தரத்திற்குச் சமமான வகுப்பில் சேர்ப்பதாகவும், என்னையும் அந்தவகுப்பிலேயே மீண்டும் சோதித்துப்பார்க்கும் நிரந்தரமற்ற நிலைபரத்தில் சேர்ப்பதாகவும் அறிவிக்கப்பட்டோம். பின்னர், நாங்கள் தங்கியிருந்த வீட்டுக்குச்சென்று மூத்தண்ணருக்கு நடந்த சம்பவங்கள் முழுவதையும் சொன்னோம்.

மூத்தவரும், இளையவருமான இரண்டு சகோதரர்களும் ஒரே வகுப்பிலிருந்து படித்தல் ஒரு போதும் முறையல்ல என்று அபிப்பிராயம் தெரிவிக்கப்பட்டது. மீண்டும் சோதித்துப் பார்த்து நிரந்தரமாக்கும் கட்டுப் பாட்டுக்கமைய நான் சென் ஜோசெப்ஸ் கல்லூரியில் சேர்ந்து கெட்டித்தனமாகப் படித்து முன்னேறவேண்டுமென்றும், நாகலிங்கம் றோயல் கல்லூரியில் பிரவேசம் எடுக்க வேண்டுமென்றும் தீர்மானிக்கப்பட்டது. றோயல் கல்லூரியில் பிரவேசப்பரீட்சைக்குரிய முக்கிய பாடங்கள் கணிதசாஸ்திரமும், ஆங்கிலமும் ஆகும். லத்தீன் மொழிபற்றி அங்கு அவ்வளவு பிரதானமில்லை. நாகலிங்கத்தை றோயல் கல்லூரியில் தேட்போமில் சேர்த்தார்கள். இவ்வாறு அண்ணரும், நானும் இருவேறு கல்லூரிகளில் ஒரேவகுப்பில் சேர்ந்து எமது மத்திய மேற்பிரிவுக் கல்வியை கொழும்பில் ஆரம்பித்தோம். அதாவது, அந்த நாளில் மிகவும் சிறந்த அரசாங்க கல்லூரியில் அண்ணரும், மிகவும் சிறந்த கத்தோலிக்க கல்லூரியில் நானும் படித்தோம்.

நாகலிங்கம் படிப்பில் விடாப்பிடியாக கவனமாகப் படித்து றோயல் கல்லூரியில் முன்னேறிக்கொண்டுசென்றார். 'கவர்ணர் ஸ்கொலஷிப்' சன்மானத்தையும், 'டீ சொய்சா விஞ்ஞானப்பரிசை'யும் அவர் அங்கு பெற்றார். இப்பொழுதும் கல்லூரியில் தொங்கவிடப்பட்டுள்ள பரிசெடுத்தோர் பெயர்வரிசைப் பலகையில் அவர் பெயர் குறிக்கப்பட்டிருப்பதை நீங்கள் காணலாம்.

றோயல் கல்லூரியில் எவ்வளவு கவனமாகப்படிப்பித்தார்கள், என்ன மாதிரி ஆயத்தங்களையெல்லாம் சேர்த்தொழுங்கு பண்ணிமாணவர்களுக்கு வசதியேற்படுத்திக் கொடுத்தார்கள் என்பதைக்காணும் போதும், சென் ஜோசெபஸ் கல்லூரியில் படிப்பித்தல் முறை இருந்தமாதிரியை ஒப்பிட்டுப் பார்த்தபோதும் நான் பிரமித்துப்போனேன். ஒரு உதாரணம்:

றோயல் கல்லூரியில் கணித சாஸ்திரம் (மதெமற்றிக்ஸ்) படிப்பித்தவர் திரு. உவாக்கர் என்னும் ஆங்கிலேய பட்டதாரி ஆவார். அவரின் பாடத்திட்டப்படி, கணிதசாஸ்திரபாடமெடுத்த ஒவ்வொரு மாணவனும், ஒவ்வொரு விதமான கணக்கைப் பற்றியும், உரிய கணிதப் புத்தகத்திலிருந்து, குறிப்பிட்ட அதிகாரத்தில் ஒன்றைவிட்டொரு கணக்கைச் செய்துமுடிக்கவேண்டும். என்னைப் பொறுத்தமட்டில், அவ்விதம் விடாப்பிடியான வேலை முறை ஒன்றும் இருக்கவுமில்லை; நான் செய்து கஷ்டப்பட்டுப் படிக்கவுமில்லை எனது அண்ணர் நாகலிங்கம் கணிதப்புத்தகத்திலுள்ள குறிப்பிட்ட உதாரணங்களையெல்லாம் கவனமாகச் செய்து ஓயாது ஊன்றிப் படித்துக்கொண்டேயிருப்பார். அப்போது நான் சதா விளையாடிப் பொழுதைப்போக்கிக் கொண்டேயிருப்பேன். சோதனைக்கு இரண்டுமூன்று மாசங்கள் தானிருக்கும். அவருடைய கணக்குகள் செய்த அப்பியாசக் கொப்பியை வாங்கி அவற்றை ஆராய்வாகப் பார்த்துப்படித்துப்பயனடைவது மட்டும் தான் என்னுடைய படிப்பு வேலையாக இருந்தது. இதன் பலனாக அவரும் நானும் சோதனை எடுத்தபோதெல்லாம் அண்ணர் "அனர்ஸ்" என்னும் விசேட சித்திக்கௌரவம் பெற்றபோதிலும், அவரிலும் பார்க்க நான் தான் திறமாக அனுகூலம் அடைவேன். சரிவரவே சோதனை எடுப்போம். டிஸ்ரிங்ஷன், பொதுச் சோதனையில் முதன்மைக் கௌரவநிலை என்பவற்றைப் பெற்று என் வகுப்பில் முதலாம் ஆளாகவும் வந்துவிடுவேன். சீமைக் கேம்பிரிட்ஜ் சர்வகலாசாலையால் நடத்தப்படும் கேம்பிறிட்ஜ் ஜூனியர் லோக்கல் சோதனை முதன்முதலாகவும், ஒரேதரமாகவும் எடுத்தபோது நான அதற்குரிய எல்லைவயதுக்குட்பட்ட வயதுடையவனகவே இருந்தேன். என்னுடன் அதே சோதனையை எடுத்த பலருள் பின் குறிப்பிடப் படுவோரும் இருந்தனர். என். ஈ. வீரசூரியா - அவர் இப்போது பிரபல்யம் வாய்ந்த ஒரு இலங்கைப் பிரஜை மட்டுமல்லாது, திறமைவாய்ந்த ஒரு இராணி அப்புக்காத்தும் ஆவர்; யூ. டீ. ஆர். கஸ்பர்ஸ் - அவர் இலங்கைச் சர்வகலாசாலையில் எனது சகபாடியாக இருந்து எனக்குப் பின்னர். எனது இடத்தில் கணிதப்பேராசிரியராக கடமையாற்றியவர்; எல்மா மக் - நான் இந்தியன் சிவில் சேவையில் சேர்ந்தவருடமே இவரும் சேர்ந்தார். பின்னர், சென்னையில் உயர்தரநீதிமன்றத்தின் நீதியரசராகப் பதவியேற்றம் பெற்று கடமை செய்து பின் ஓய்வெடுத்துக் கொண்டார்; ஜே. எல். சி. றொட்றிகோ - இவர் இலங்கைச் சர்வகலாசாலையில் லத்தீன், கிரேக்கம் முதலிய "கிளசிக்ஸ்" (பழமை இலக்கியத் துறை) பேராசிரியராகப் பதவி பெற்றார். அதற்கு முன்னர் - "சிலோன் மோணிங் லீடர்" என்னும் அன்றைய புகழ் வாய்ந்த ஆங்கிலப்பத்திரிகையின் ஆசிரியராக, தற்போது, செனட்டராக இருக்கும் டொறிக் டீ சூசாவின் தகப்பனர் ஆர்மன் டீ சூசாவுக்குப்பின்னர் கடமையாற்றியவருள் ஒருவராவர்

அநாமதேய "அடோனிஸ்" என்னும் புனை பெயரில் எழுதும் பிரசித்தம் வாய்ந்த பத்திரிகை உலக எழுத்தாளர். அத்துடன் பெருமைக்குரிய சில்லறை எழுத்தாளரும் ஆவர்; மாணிக்கம் சரவணமுத்து — இவர் இரண்டாம் உலக மகா யுத்தத்தின்போது, மலாயாவில், மிகவும் பிரதானமானதும், மெச்சத் தக்கதுமான செயல்களைச் செய்து புகழீட்டியவர். தற்போது, இந்தோனேசியா—மலாயா ஆகிய இரு நாடுகளுக்கும் இலங்கைப்பிரதிநிதியாக நியமனம் பெற்றுக் கடமைபுரிகிறார்; காலஞ்சென்ற, ஏ. எம். கே. குமாரசுவாமி — இவர்தான் இலங்கைச் சர்வகலாசாலையின் திறமை மிக்க முதலாவது றிஜிஸ்ரார் (பதிவுப் பொறுப்பாளர்) ஆவர்.

அந்த ஜூனியர் லோக்கல் பரீட்சையில் தனிக்கணித சாஸ்திரம் (பியூர் மதெமற்றிக்ஸ்), சம்பந்தகணித சாஸ்திரம் (அப்பிளைட் மதெமற்றிக்ஸ்), இரசாயன சாஸ்திரம் (கெமிஸ்திரி) ஆகிய பாடங்களில் டிஸ்ரிங்ஷன்ஸ் எனப்படும் திறமையான சித்தியைப் பெற்றேன். இங்கிலாந்துக்கு வெளியே, பிரித்தானிய சாம்ராஜ்யம் முழுவதிலும் நான் ஒருவன் மட்டுமே அந்தச் சோதனையில் இரசாயன சாஸ்திரப் பாடத்தில் (கெமிஸ்திரியில்) அந்த வருடம் டிஸ்ரிங்ஷன்ஸ் பெற்றேன். இலங்கையில் அந்தப் பரீட்சையில் பெற்ற சித்தித் திறமைக்கேற்ப எனக்கு ஐந்தாம் இடம் கிடைத்தது. எல்மா மக் எனக்கு முன்னும் மாணிக்கம் சரவணமுத்து எனக்குப் பின்னுமான நிலையில் இருந்தனர். எனது ஞாபகம் சரியானதானல், என். ஈ. வீரசூரியாவே ஆறு அல்லது ஏழு டிஸ்ரிங்ஷன்ஸ்களை எடுத்து முழுச்சோதனையிலும் இலங்கையில் முதலாவதாகத் தேறினர். அவர் "ஆட்ஸ்" (கலைத் துறைப்) பாடங்களைப் பயின்ற ஒரு மாணவன் ஆவார். அந்தச் சோதனையை அவர் மூன்றும் முறையாக எடுத்திருந்தார். அவர் சுகாதாரமும், சரீர சாஸ்திரமும் என்ற பாடத்தை ஒரே நாளில் மட்டும் படித்து மறுநாள் சோதனையில் "டிஸ்ரிங்ஷன்ஸ்" புள்ளிகளும் பெற்றார். அவரிடமிருந்து இந்த அனுபவத்தை நானும் கற்றறிந்துகொண்டேன். இங்கிலாந்தில் சர்வகலாசாலைகளில் படித்தபோது நானும் அந்த முறையைப் பின்பற்றிப் பலனும் பெற்றேன்.

என். ஈ. வீரசூரியா தவிர்ந்த ஏனைய ஐவரும் அரசாங்க சர்வகலாசாலை ஸ்கொலஷிப்புகளைப் பெற்று இங்கிலாந்துக்குச் சர்வகலாசாலைப் படிப்புக்குச் சென்றனர், இலண்டன் சர்வகலாசாலையின் மத்திய பிரிவுப்(இண்டர்மீடியேற்) பரீட்சை இலங்கையில் நடத்தப்பட்டபோது என். ஈ. வீரசூரியா சுகவீனமாகக் கிடந்தார். அதனல் அந்தச் சோதனையை அவரால் எடுக்க முடியவில்லை. அதில் சித்தியடைந்தோருக்குத் திறமைக்கேற்பச் சர்வ கலாசாலை ஸ்கொலஷிப்புகளை வழங்கினார்கள். அவர் இந்தச் சோதனைக்குத் தோற்றியிருப்பின் ஸ்கொலஷிப்பினைப் பெற்றிருப்பார். அவ்வாறு பெற்றுக்கொள்ளத் தவறியதும் அவருக்கு அதிர்ஷ்டமாகவே முடிந்தது. பின்னளில் அவர் பிரபல்யம் அடைந்ததோடு ஸ்கொலஷிப் பெற்ற மற்றும் ஐந்து பேருடைய உழைப்பையும் சேர்த்துப் பார்த்தால், அத்தொகையிலும் கூடுதலான ரூபா சதங்களை வருட வருமானமாக அவர் பெற்றார் எனப் பெருமையாகப் பேசிக்கொள்ளப்பட்டது.

நாங்கள் ஐவரும் இங்கிலாந்தில் ஒரே காலத்தவர்களாய் இருந்து படித்துத் தேறினோம். எங்கள் ஐவரைப் பற்றியும் தனித்தனி சில உருசியான சம்பவங்களும், விபரங்களும் பற்றி இன்னுமோர் தபாலில் எழுதுவேன்.

இப்பொழுது, மறுபடியும் எனது சென் ஜோசெப்ஸ் கல்லூரிப் படிப்புப்பற்றிய விபரங்களைச் சொல்ல உங்களை அழைத்துச் செல்ல விரும்புகிறேன்.

என்னை "தேட்போம் — ஏ" பிரிவில் மீட்டும் சோதித்துப் பார்த்துத் தகுதியெனின் தொடர்ந்து அனுமதிக்கும் பக்குவத்தில் சேர்த்தனர் என்பதைமுன்னரே கூறினேன். இதனல் நான் லத்தீன் பாடத்தை விசேட கவனத்தோடு தொடர்ந்து படித்துத் திறமைகாட்ட வேண்டியிருந்தது. என்னை அந்த வகுப்பிலே நிரந்தரமாகப் படிக்கவிட்டதற்கு இன்னுமோர் சந்தர்ப்பம் உதவி செய்தது. எங்கள் கல்லூரியில் கிழமை தோறும் பாடங்களுக்குப் புள்ளிகளும், வகுப்பில் நிலைகளும் தெரிவிப்பார்கள். எங்கள் வகுப்பறையில் உள்ள விளம்பரப் பலகையில் ஒவ்வொரு திங்கட்கிழமையும் விபரங்கள் எழுதப்பட்டிருக்கும். அதிலே வகுப்பிலுள்ள எல்லோருடைய பெயரும் அவரவர் புள்ளிகளுக்கேற்ப, கூடிய திறமையுடையவர் முதலாய் ஒழுங்குபடுத்தப்பட்டு பெயருக்கு எதிரே புள்ளிகளும் போடப்பட்டுக் காண்பிக்கப்பட்டிருக்கும். நான் கல்லூரியில் சேர்ந்த முதலாம் கிழமையின் முடிவிலேயே மூன்றும் ஆளாகத் தோற்றினேன். இரண்டாம் கிழமை முடிவில் இரண்டாம் ஆளாகவும், மூன்றும் கிழமை முடிவில் முதலாம் ஆளாகவும் வந்துவிட்டேன். என்னைப்பிரவேசப் பரீட்சையில் சோதித்த ஜெர்மன் கத்தோலிக்க சுவாமி உபாத்தியாயர் இதைக்கண்டு அதிசயித்தார். இது எப்படி நிகழ்ந்தது? நான் கல்லூரியில் சேர்ந்த முதல் நாளன்றே இதற்குரிய ஆரம்ப அறிகுறிகள் இருந்தன. திரு. பீற்றர் பெரேரா என்பவர் எங்கள் வகுப்புக்குக்

(10-ம் பக்கம் பார்க்க)

# புதிய மலேசியா கூட்டாட்சி நாடு

— வ. மகாதேவன் —

தென் கிழக்கு ஆசியாவில் 31-8-1963 இல் மலேசியா கூட்டாட்சி நாடு என அழைக்கபடும் ஒரு புதிய நாடு உருவாகலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. மலாயா, சிங்கப்பூர், புறூனி, சரவாக் சபா (அல்லது வட போர்னியோ) ஆகிய ஐந்தும் இதன் அங்கத்துவ நாடுகளாக இருப்பதற்கு முடிவு செய்துள்ளன. புறூனி, சரவாக், சபா ஆகிய மூன்றும் உலகிலே மூன்ருவது பெரிய தீவாகிய போர்னியோவின் வட பாகத்திலும் வட மேற்குப் பாகத்திலும் அமைந்திருக்கின்றன. போர்னியோவின் ஏனைய பகுதிகள் இந்தோனேசியக் குடியரசைச் சேர்ந்த பகுதிகளாகும்.

மலாயா என்ற கூட்டாட்சி (சமஷ்டி) நாடு இலங்கையைப் போல் பிரிட்டிஷ்காமன்வெல்த்தில் அங்கம் வகிக்கும் டொமினியன் நாடாகும். மலாயா குடாநாட்டின் தெற்கு நுனியை அடுத்திருக்கும் தீவாகிய சிங்கப்பூர் உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுயாட்சி பெற்றிருக்கும் பிரித்தானிய குடியேற்ற நாடாகும். போர்னியோவில் புறூனி பிரித்தானிய பாதுகாப்பு நாடுகளில் ஒன்ருகும். சரவாக்கும் வட போர்னியோ (சபா) வும் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாகும்.

## அங்கத்துவ நாடுகள்

ஐந்து அங்கத்துவ நாடுகளின் விபரங்கள் வருமாறு:-

1. மலாயா:- பதினொரு மாகாணங்களைக்கொண்ட முடியாட்சியுள்ள கூட்டாட்சி நாடு. 31-8-1957 இல் சுதந்திரம் பெற்றது. விஸ்தீரணம் 50, 690சதுரமைல்; சனத்தொகை 69,15,000. இதில் ஏறக்குறைய 40 சதவீதத்தினர் சீனர்கள். தலைநகர் — கோலாலம்பூர்.

2. சிங்கப்பூர்:- 1-6-1959 இல் உள்நாட்டு விவகாரங்களில் பூரண சுயாட்சி பெற்றது விஸ்தீரணம் 224 சதுரமைல்; சனத்தொகை 16,11,900 இதில் 50 சத வீதத்திற்கு அதிகமானோர் சீனர்கள். தலைநகர்—சிங்கப்பூர் (நகரம்); ஒரு மலாயர் தேசாதிபதியாகக் கடமையாற்றுகிருர். சட்ட சபைக்குப் பொறுப்புள்ள பிரதம மந்திரியும் மந்திரி சபையும் நாட்டை நிர்வகிக்கின்றன.

3. புறூனி :- போர்னியோவின் வடமேற்குப் பாகத்திலுள்ள பிரித்தானிய பாதுகாப்பு நாடாகும். ஒரு மலாயராகிய சுல்தான் நாட்டை நிர்வகித்து வருகிருர். விஸ்தீரணம் 2,226 சதுரமைல். சனத்தொகை 83,869. தலைநகர் புறூனி நகரம்.

4. சரவாக்:- போர்னியோவின் வடமேற்குப் பாகத்திலுள்ள பிரித்தானிய குடியேற்ற நாடு. பிரிட்டிஷ் தேசாதிபதி நிர்வகித்து வருகிருர் விஸ்தீரணம் 47,500 சதுரமைல், சனத்தொகை 7,44,391. இவர்களுள் சீனர் 2,29,097. மலாயர் 1,29,397. தலைநகர்—குச்சிங்.

5. சபா அல்லது வட போர்னியோ:பிரித்தானிய குடியேற்ற நாடு. பிரிட்டிஷ் தேசாதிபதி நிர்வகித்து வருகிருர். விஸ்தீரணம் 29,388சதுரமைல். சனத்தொகை சுமார் 4,29,465. இவர்களுள் சீனர் 1,06,496. சுதேசிகள் 2,81,417 ஐரோப்பியர் 2,335. தலைநகர்—ஜெஸில்டன்.

## கூட்டாட்சி அமைப்பின் நோக்கம்

தென்கிழக்கு ஆசியாவில் கொம்யூனிஸ்ட் ஆக்கிரமிப்பினுல் ஏற்படக்கூடியஆபத்தைத் தடுத்து நிறுத்துவதற்காகவே இந்த ஐந்து நாடுகளும் மலேசியா கூட்டாட்சி நாட்டை அமைப்பதற்கு உடன்பட்டுள்ளன. மலேசியா கூட்டாட்சி பற்றிய யோசனையை சுமார் ஒன்பது மாதங்களுக்கு முன்பு முதன் முதலாக மலாயாவின் பிரதம மந்திரியாகிய ஐனுப் துங்கு அப்துல் ரஹ்மான் வெளியிட்டார்: கூட்டாட்சி நாடாகவும் அயல் நாடாகவும் விளங்கும் மலாயாவுடன் நெருங்கிய தொடர்பை ஏற்படுத்துவதற்கு காத்திருந்த சிங்கப்பூர் அரசாங்கம் இந்த யோசனையை உடனே வரவேற்றுக் கருத்து தெரிவித்தது.

## ஆலோசனைச் சபை

கடந்த ஆகஸ்ட் மாதத்தில் சிங்கப்பூரில் காமன்வெல்த் பார்லிமென்ட் சங்கங்களின் மகாநாடு நடைபெற்றது. இம் மகாநாட்டில் போர்னியோவைச் சேர்ந்த பிராந்தியங்களின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். மலேசியா கூட்டாட்சி நாடு அமைக்கப்படவிருப்பது வரவேற்கப்பட்டு "மலேசியா ஒற்றுமை ஆலோசனைச்சபை ஒன்று" தெரிவு செய்யப்பட்டது.

23-8-61 இல் மலாயாப் பிரதம மந்திரி, ஐனுப் துங்கு அப்துல் ரஹ்மானும், சிங்கப்பூர் பிரதம மந்திரி, திரு. லீ. குவான் யூவும் தமது நாடுகள் கூட்டாட்சி அமைப்பில் சேர்வதற்குரிய நிபந்தனைகளை ஒரு கூட்டறிக்கையில் வெளியிட்டனர். சிங்கப்பூரின் பாதுகாப்பும் வெளிநாட்டு விவகாரமும் கூட்டாட்சி அரசாங்கத்தின் பொறுப்பிலிருக்கும் என்றும், கல்வி, தொழில் போன்ற விவகாரங்களை நிர்வகிக்கும் பொறுப்பு சிங்கப்பூர் அரசாங்கத்திற்கு இருக்கும் என்றும் இதில் காணப்பட்டது.

## ஆதரவு

பிரித்தானிய பிரதமர், திரு. ஹரல்ட் மாக்மிலன் தாம் மலேசியா கூட்டாட்சி யோசனையை ஆதரிப்பதாக மலாயா பிரதமருக்கு செய்தியொன்று அனுப்பிவைத்தார். மலாயாவின் மத்திய பார்லிமெண்ட், பெரும்பான்மை மேலதிக வாக்குகளால் கூட்டாட்சி யோசனையை அங்கீகரித்தது. வட போர்னியோவிலுள்ள பிரதானிகளும் புறூனியின் சுல்தானும் கூட்டாட்சித் திட்டத்துக்குத் தமது ஆதரவைத் தெரிவித்தனர்.

16-11-61 இல் வெளியிடப்பட்ட ஒரு வெள்ளை அறிக்கையில் சிங்கப்பூர் கூட்டாட்சி அமைப்பில் சேர்வதுபற்றி ஏற்பட்டுள்ள உடன்பாடுகள் பிரசுரிக்கப்பட்டன. மலாயாப் பிரதமர் லண்டன் மாநகருக்குச் சென்று பிரித்தானிய பிரதமருடன் பேச்சு வார்த்தைகள் நடத்தினர். மலேசிய கூட்டாட்சி நிறுவப்பட்ட பின்னரும் சிங்கப்பூரிலுள்ள பிரித்தானிய தளத்தை பிரித்தானிய அரசாங்கம் தொடர்ந்தும் வைத்திருக்கலாம் என்றும், சரவாக், வடபோர்னியோ ஆகிய பகுதிகளிலுள்ள மக்களின் அபிப்பிராயத்தைத்திரட்டுவதற்கு ஒரு விசாரணைச் சபையை போர்னியோவிற்கு அனுப்புவதென்றும் இரு பிரதம மந்திரிகளும உடன்பட்டனர்.

## விசாரணைச் சபை

இங்கிலாந்து வங்கியின்முன்னை கவர்னராகிய கொபோல்ட் பிரபுவின் தலைமையில் ஒரு விசாரணைச்சபை போர்னியோவுக்குச் சென்றிருக்கிறது. இந்தச்சபை சரவாக்குக்கும் வடபோர்னியோவுக்கும் மாத்திரம் விஜயம் செய்து மக்களின் அபிப்பிராயங்களைத் திரட்டி அறிக்கையை வெளியிடும் எனத் தெரிகிறது. புறூனியின் சுல்தான் தமது நாட்டு மக்களின் அபிப்பிராயங்களைத் திரட்டி அறிக்கை சமர்ப்பிக்குமாறு பணித்து ஒரு புறம்பான விசாரணைச்சபையை நியமித்துள்ளார். இந்த விசாரணைச் சபைகளின் அறிக்கைகள் வெளிவந்ததும் மலேசியா கூட்டாட்சி அமைப்பின் விபரங்கள் தெரியவரும் என எதிர்பார்க்கப்படுகிறது.

## ஆலோசனைச் சபையின் சிபார்சுகள்

மலேசியா கூட்டாட்சி ஆலோசனைச் சபை பின்வரும் யோசனைகளை "கொபோல்ட் விசாரணைச் சபைக்கு" ஒரு மகஜரில் தெரிவித்திருக்கிறது:—

1. இப்போதுள்ள மலாயா கூட்டாட்சி நாட்டில் சுல்தான்மாரின் ஆட்சியிலிருக்கும் ஒன்பது மாகாணங்களைப்போல் புறூனையும் மலேசியா கூட்டாட்சி அமைப்பில் சேர்க்கப்படவேண்டும்.


2. புறூனி சுல்தானும், மலாயாவிலுள்ள சுல்தான்மாரைப் போல் மலேசியாவின் மாமன்னர் தெரிவில் கலந்துகொள்வதற்கு தகுதியுடையவராக்கப்படவேண்டும்.

3. இப்போது மலாயாவைச் சேர்ந்த மலாக்கா, பினங் ஆகிய மாகாணங்களுக்கு தேசாதிபதிகள் நியமனம் செய்யப்படுவதைபோல் சரவாக், வடபோர்னியோ ஆகியனவற்றிற்கும் நியமிக்கப்படவேண்டும். இஸ்லாம் தேசிய மதமாக இருக்கவேண்டும் ஆனல் ஏனைய மதத்தினருக்கும சகல உரிமைகளும வழங்கப்படவேண்டும்.

5. மலாய் மொழி தேசிய மொழியாக்கப்பட வேண்டும் ஆனல் ஏனைய மொழிகளுக்கு உரிமைகளும் பாதுகாப்புகளும் அளிக்கப்படவேண்டும்.

6. பிரஜா உரிமை பற்றி உறுப்பு நாடுகள் சில இடைக்கால உடன்படிக்கைகளைச் செய்துகொள்ளவேண்டும்.

இப்போதுள்ள மலாயா கூட்டாட்சி அமைப்பைத் தழுவிக் கூறப்பட்டிருக்கும் இந்த யோசனைகளை அடிப்படையாகக் கொண்டு மலேசியா கூட்டாட்சி நாடு நிறுவப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

பெல்ஜியன்

முள்ளுக் கம்பி

12½ & 14 அளவு

ஒவ்வொரு கன அங்குலத்துக்கும் 45 தொன் வீத அளவுக்கு இதை முள்ளுக்கம்பி நீட்டி இழுக்கக் கூடியது.

லாபமான விலைக்குக் கிடைக்கும் எமது முள்ளுக்கம்பி சகல விதமான வேலியடைப்புக்கும் உகந்தது.

கிடைக்குமிடம்:

கூ. மொ. வி. தாபனம் கடினப்பொருள் இலாகா

40, மக்கலம் வீதி, கொழும்பு-10.

கூ. மொ. வி. தாபனத்துசில்லறைக் கடைகள் எல்லாவற்றிலும் கிடைக்கும.

CAS/RW/222


# பிரதேச கலைமன்றத்துக்கு கலைப்புலவர் ஆற்றிய பணி

— எம். ஸ்ரீகாந்தா —

[பிரதேசக் கலைமன்றத்துக்குக் கலைப்புலவர் ஆற்றிய பணிகளை முன்னுள் யாழ்ப்பாண அரசாங்க அதிபர் திரு. எம். ஸ்ரீகாந்தா இக்கட்டுரையிற் குறிப்பிட்டுள்ளார். இக்கட்டுரை கலைப்புலவர் அனுபந்தத்துக்கென எழுதப் பெற்றது.]

பிள்ளைப் பராயந்தொடக்கம் நெருங்கிப் பழகிய ஒருவரைப் பற்றிச் சுருக்கமாக எழுதுவதென்பது மிகவும் கஷ்டமான காரியம். கலைப்புலவர் அவர்கள் ஓர் ஆசிரியராகக் கடமையாற்றி வந்தபோதிலும் தத்துவசாஸ்திரம், சமயசாஸ்திரம், கவின்கலைகள் ஆகியவற்றில்ஆழ்ந்த அறிவுபடைத்தவராக விளங்கினர். இத்தகைய அறிவு அவர் எழுதிய நூல்களிற் பிரதிபலிப்பதைக் காணலாம். இவருடைய நூல்களைத் தாய்நாடும் சேய்நாடும் ஒருங்கு சேர்ந்து பாராட்டிப் புகழ்மாலை சூட்டின. உள்ளூர்க்கவின் கலைகளுக்குப் புத்துயிர் அளித்தவர் திரு. நவரத்தினம் அவர்கள். பிரதேசகலைமன்றத்தின் காரியதரிசியாகக் கடமையாற்றி அம் மன்றத்துக்கு அழியாப்புகழை ஈட்டிக்கொடுத்தவர் கலைப்புலவர். பிரதேச கலைமன்றம் பல ஊர்களில் ஆரம்பிக்கப் பெற்ற போதிலும் அவை திருப்திகரமாகச் செயலாற்றவில்லை. ஆனல் யாழ்ப்பாணப் பிரதேச கலைமன்றம் இவற்றிற்கெல்லாம் விதிவிலக்காகத்திகழ்ந்து கலாசாரப் பகுதிஅதிபரின் பாராட்டுதலை ஈட்டியது. இதற்கு மூல காரணம் கலைமன்றக்காரியதரிசியே என அதிபர் அவர்கள் வாயாரப் புகழ்ந்து பாராட்டியிருக்கிருர்கள். கலைப்புலவர் அவர்கள் "கலைவிழா ஒன்றினை ஒழுங்குசெய்து ஒவ்வொரு துறையிலும் தகுந்தவர் என யாவராலும் அங்கீகரிக்கப் பெற்ற கலைநூல்களைத் தேர்ந்தெடுத்து, தங்கப்பதக்கமும் வழங்கி, பொன்னுடை போர்த்திக் கௌரவித்தார்கள். இதனலும் பிரதேச கலைமன்றம் சிறந்ததொண்டாற்றி மக்களின் பாராட்டுதலைப் பெற்றது.

விழாக்கள் ஒழுங்கு செய்வதில் கலைப்புலவருக்கு இருந்த திறமையை யாழ்ப்பாணத்தில் வெற்றிகரமாக நடந்தேறிய தமிழ் விழா நன்கு எடுத்துக் காட்டியது. கல்கி ஆசிரியர் திரு. கிருஷ்ணமூர்த்தியே கலைப் புலவரின் அபார சக்தியைத் தமிழ்விழா ஒழுங்கினை நேரே கண்டு பாராட்டியுள்ளார். தம்முடன் சேர்ந்து உழைப்பவர்களிடமிருந்து சிறந்த தொண்டினைப் பெற்றுக் கொள்வதில் கலைப்புலவர் ஒரு சமர்த்தர். கலைத்தொழிலில் ஈடுபட்டவர்கள் தம் திறமையைக் காட்டுமாறு ஊக்கிவிடுவதிலும் கலைப் புலவர் ஒரு சமர்த்தர்.

யாழ்ப்பாணத்திலே ஓவியப் பாடசாலை ஒன்றை நிறுவிச் செவ்வனே நடாத்தும் முழுப் பொறுப்பினையும் கலைப்புலவர் கையேற்றுக் கொண்டார். இந்த ஓவியப்பாடசாலை கலைப் புலவரின் அயரா உழைப்புக்கு ஓர் உன்னத சான்றுக மிளிர்கின்றது.

கலைப்புலவர் அநேக நூல்களை ஆங்கிலத்திலும் தமிழிலும் எழுதியுள்ளார்கள். அவர்கள் அண்மையில் இந்து சமயத்தைப்பற்றி எழுதிய நூல் வெளிவர முன்னர்; அவரை நாம் இழக்க நேர்ந்தது எங்கள் தவக்குறைவேயாகும். சைவசமயத்தில் அவருக்கிருந்த ஆழ்ந்த அறிவையும் பற்றினையும் ஆர்வத்தையும் யாவரும் நன்கறிவர். இக்கால இளைஞரிடையே சமயப்பற்று போதிய அளவு வேரூன்றவில்லையே யெனக் கவலை கொண்டிருந்தார்.

கலைப்புலவர் அவர்களுடன் நன்கு பழகிய நாங்களும் அவர்களுடைய கலைத்திறனைப் பாராட்டவிரும்பும் நாங்களும் அவருக்குச் செய்யக்கூடிய கைம்மாறு யாதெனில் அவர் தம் உயிரெனப் போற்றி வளர்த்தகலைகளை மேன்மேலும் விருத்திசெய்து வருவதேயாகும். இத்துறையில் யாமெல்லோரும் ஒருங்கு முயல்வோமாக.

# நெல் முளைவிட சலவைக் காரம்!

நெல்லின் உமியிலிருந்து 'மிககல்ஸன்' என்னும் அமெரிக்க நிபுணர் ஆறுவகை ரசாயனப் பொருள்களைப் பிரித்து எடுத்திருக்கிருர். அவை ஆறும் நெல் முளைவிடாதபடி தடுத்து வைக்கும் ஆற்றல் உள்ளவையாகும். ஆனல் அவை தண்ணீரில் கரைந்து விடக் கூடியவை. நிலத்தில் போதிய ஈரப்பதம் சேரும்வரை நெல்லை முளைவிடாதபடி காப்பாற்றுவதே இந்த ஆறும் இருப்பதற்குக் காரணம் என்கிருர் மிக்கல்ஸன். நல்லமழை பெய்தலும் நிலத்தில் போதிய ஈரப்பதம் ஏற்பட்டுவிடும், நெல் முளைக்கும்.

ஆனல் இப்பொழுது அதிகமாக நெல் விளைவிக்கவேண்டி, கலிபோர்னியா விவசாயிகள் மிக்கல்ஸனின் ஆலோசனைப்படி "ஸோடியம் ஹைப்போ குளோரைட்" என்ற சலவைக்காரம் கரைந்த தண்ணீரில் நெல் விதைகளை ஊறவைத்து விரைவில் முளை விடும்படி செய்கிருர்கள்.

# உலகமேடை

டி. எம். எம்.

## சீன-இந்திய உறவு

இந்தியப் பார்லிமெண்டின் கடைசிக் கூட்டத்தில் ராஷ்டிரபதி டாக்டர் ராஜேந்திர பிரஸாத் உரை நிகழ்த்துகையில், ஆக்கிரமிப்புப் பிரதேசத்திலிருந்து சீன வெளியேறும் வரை திபேத் சம்பந்தமான ஒப்பந்தத்தைப் புதுப்பிப்பது பற்றி இந்தியா பேச்சு வார்த்தை நடத்தாது எனக்



கூறியிருக்கிறார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாக இந்தியாவுக்கும் சீனவுக்குமிடையே நிலவிவந்த தொடர்புடன் ராஷ்டிரபதியின் இந்த வாசகத்தை ஒப்பிடும்போது வேதனையாய் இருக்கிறது. மதம், கலாச்சாரம் ஆகிய விஷயங்களில் தொன்மையான தொடர்பு கொண்டிருந்த இரு பெரும் நாடுகளின் பிரச்சினையில் "ஆக்கிரமிப்பு" என்ற அம்சம் புகுந்திருப்பது அதைவிட வேதனையளிக்கும் விஷயமாகும்.

ஆசியாவின் இருபெரும் நாடுகளுக்கிடையே நிலவும் இந்த மனக்கசப்பு இப்படியே நீடிக்குமா அல்லது அது தற்காலிகமானது தானு? இதனுல் எவருக்கும் நன்மையுண்டா? இருநாடுகளுக்கு மட்டுமன்றி, முழு ஆசியாவுக்குமே இது தீமையை விளைவிக்கும். பாண்டுங் மகாநாட்டுக்கு முன் சீனவுடன் நேசம் பாராட்டிய ஆசியநாடுகள், இப்போது அதன் நோக்கத்தைச் சந்தேகிப்பது வாஸ்தவமே. சீனவின் நடவடிக்கை ஒருதலைப்பட்சமான ஆக்கிரமிப்பு என்பதில் நியாயபுத்தியுள்ள எவருக்கும் சந்தேகம் இருக்க முடியாது. எனவே எந்தக் கட்சியில் நியாயம் இருக்கிறதென ஆராய வேண்டிய அவசியமே இங்கு எழவில்லை.

கிழக்கு மேற்கு நாடுகளுக்கிடையே நிலவிய கெடுபிடிப் போரில் ஐரோப்பா ஈடுபடுத்தப்பட்டது போதாதென்று, தனது நடவடிக்கையின் மூலம் சீன, ஆசியாவில் கெடுபிடிப் போரை புகுத்தியிருக்கிறது. சீனவும் இந்தியாவும் வளர்ச்சி பெற்றுவரும்நாடுகள் இன்னும் அவைகள் பின்தங்கிய நிலையிலேயே இருக்கின்றன. வருங்காலத்தில் இரண்டும் வல்லரசுகளாக உருவெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை. இந்த நிலையில் இவ்விதக் கெடுபிடிப் போரைப் புகுத்துவானேன்?

ஜனநாயக முறையில் இந்தியாவில் ஏற்பட்டுவரும் பொருளாதார முன்னேற்றம் சீனவுக்குப் பிடிக்காததே அதற்கான காரணங்களில் ஒன்று என்பதில் சந்தேகமில்லை. ஜனநாயக முறையில் இந்தியா நடத்தும் பொருளாதாரப்புரட்சி வெற்றி பெறுமானல், ஆசியாவில் சீன செல்வாக்கு குறையும் கம்யூனிஸ அமைப்பிலேயே மக்களின் வாழ்க்கைத்தரத்தை உயர்த்தமுடியும் என, ஆசியாவின் ஏழைமக்களுக்கு உணர்த்திக்காட்ட சீனமுயன்று வந்துள்ளது. இந்த வழியில் அந்நாடு பெருமளவில் முன்னேற்றம் அடைந்திருக்கிறது என்பதிலும் சந்தேகமில்லை ஆனல் ஜனநாயகரீதியிலும், (மக்களின் சுதந்திரம் பாதிக்கப்படாமலே) பொருளாதார அபிவிருத்தி சாத்தியம் என்பதை இந்தியா உணர்த்திவருகிறது.

இதற்கு மறைமுகமாக முட்டுக்கட்டையிடுவதே சீனவின் நோக்கமாகும். அபிவிருத்தித் திட்டங்களிலிருந்து இந்தியாவின் கவனத்தை வேறுதிசையில் அதாவது பாதுகாப்பு விஷயத்தில் திருப்புவதே அதன் நோக்கம். ஆனல் பின்னல் நடந்த விளைவுகள் நிலைமையை சீனவுக்குப் பாதகமாக மாற்றிவிட்டதெனலாம்.

சீனவின் ஆக்கிரமிப்பு சர்வதேச கம்யூனிஸ வளர்ச்சிக்கு முட்டுக்கட்டையைப் போட்டிருக்கிறது என்றும் சொல்லலாம். உதாரணமாக, சீன ஆக்கிரமிப்புக்குப்பின் இந்தி



யாவில் கம்யூனிஸ்டுகளின் நிலை பலவீனமடைந்திருக்கிறது. கம்யூனிஸ்ட் கட்சிக்குள்ளேயே இவ்விஷயத்தில் பிளவு ஏற்பட்டுள்ளது. கேரளத்தில் ஆட்சியிலிருந்த கம்யூனிஸ்டுகள் பிறகு நடைபெற்ற தேர்தலில் தோல்வியடைந்திருக்கிருர்கள்.

இதர ஆசியநாடுகளிலும் சீனவுக்கெதிரான மனப்பான்மை வளர்ந்துள்ளது என்பதில் சந்தேகமில்லை. பாண்டுங் நாடுகளிடையே சீனவுக்குச் செல்வாக்குக் குறைந்திருக்கிறது. பஞ்சசீலக் கொள்கையின் கர்த்தா நாடுகளில் ஒன்று, ஒருதலைப்பட்சமான ஆக்கிரமிப்பில் ஈடுபட்டதின் விளைவே இது.

சர்வதேச அரங்கில் சீன இப்போது தனியாக விடப்பட்டிருக்கிறதெனலாம். சித்தாந்தக் கொள்கையில் ரஷ்யாவுக்கும் அந்நாட்டுக்கும் ஏற்பட்டுள்ள அபிப்பிராயபேதம் இந்தத் தனிமையை மேலும் விசாலப் படுத்தியுள்ளது. இந்தியாவுடனுள்ள தகராறில் கிழக்கு ஐரோப்பியநாடுகள் சீனவுக்கு பகிரங்கமாக ஆதரவளிக்காதது நிச்சயம் பீகிங்கைப் பலவீனப்படுத்தியுள்ளது.

மேலும் கம்யூனிஸ தலைமைப் போட்டியில் தன்னை மிஞ்ச சீனவுக்கு ரஷ்யா ஒருபோதும் இடம் கொடுக்காது என்பதும் இங்கு முக்கிய விஷயம்.

சீனவின் மகத்தான ஆள்பலம் ரஷ்யாவுக்கு ஒரு எச்சரிக்கையாக அமைந்திருக்கிறது. பல்வேறு கோணங்களிலுமிருந்து பார்க்கும்போது ஆசியாவைப் பொறுத்தவரை ரஷ்யாவின் தற்போதைய போக்கு சிந்தனசக்தி நிறைந்ததாகக் காணப்படுகிறது எனலாம். நடுநிலைமை நாடுகளிடையே ரஷ்யாவின் செல்வாக்கையும் சீனவின் செல்வாக்கையும் ஒப்பிட்டுப்பார்த்தால் இதன் உண்மை தெரியவரும். நடுநிலைமை நாடுகளை வசப்படுத்தும் முயற்சியில் கிழக்குமேற்கு நாடுகளுக்கிடையே நிலவும் கெடுபிடிப்போர், சீனவை மறைமுகமாகப் பாதிக்கிறதென்பதில் சந்தேகமில்லை. இந்தியா போன்ற நாடுகளுக்கு பெரும் அளவான ரஷ்யப் பொருளாதார உதவியை அலட்சியம் செய்வதற்கில்லை. பொருளாதார ரீதியிலும், தொழில் நுட்ப ரீதியிலும் பின்தங்கிய நாடுகளுக்கு ரஷ்யாவால் உதவியளிக்கமுடியுமே தவிர, சீனவுக்கு அவ்வாறு செய்யமுடியாது. ஏனெனில் சீனவும் ஒரு பின்தங்கிய நாடு என்பதே இதற்கான காரணமாகும். மேலும் அனுபவரீதியில் ரஷ்யா முதிர்ச்சிபெற்ற நாடாகும். சீனப்புரட்சியோ இன்னும் ஸ்திரம் பெறவில்லை என்பதை அதன் ஆக்கிரமிப்பிலிருந்தே அறியலாம்.

மற்ருெரு முக்கிய விஷயமும் இங்கு குறிப்பிடத்தக்கது. நடுநிலைமைக் கொள்கை நாளுக்கு நாள் பலம் பெற்று வருவதே அந்த விஷயமாகும். குறிப்பாக, ஆசியாவிலும் ஆபிரிக்காவிலும் கம்யூனிஸ விஸ்தரிப்புக்கு அது ஒரு தடையாய் இருக்கிறது எனலாம். காலனி எதிர்ப்பிலும், கம்யூனிஸ எதிர்ப்பிலும் அங்கீகரிக்கப்பட்ட ஒரு சக்தியாக இப்போது அது உருவெடுத்து வருகிறது. சமீபத்தில் விடுதலைபெற்றுவரும் ஆபிரிக்க நாடுகள் நடுநிலைமைக் கவசத்தையே அணியவிரும்புகின்றன. எனவே ஆசிய நாடுகள், கம்யூனிஸ முறையில்தான் வாழ்க்கைத்தரத்தை உயர்த்த முடியும் என்ற சீனவின் நோக்கத்தை ஏற்கவில்லை. மேலும் சீனவின் சில பகுதிகளில் போதிய உணவின்றி மக்கள் கஷ்டமடைகிருர்கள் என்றும் கூறப்படுகிறது. இவையெல்லாம் அந்நாட்டின் கையைப் பலப்படுத்துவதாய் இல்லை.

சமாதான முறையில் ஆக்கிரமிப்பு பகுதிகளை மீட்கமுயற்சி செய்யப்படும் என்றும், அவசியமானல் சீனமீது பலாத்காரம் உபயோகிக்கப்படும் என்றும் இந்தியப் பிரதமரும், பாதுகாப்பு மந்திரியும் கூறியிருக்கின்றனர். பலாத்காரத்திற்கு அவசியம் ஏற்படுமா இல்லையா என்பதைப்பற்றி இப்போதே சொல்லமுடியாது. கோவா நடவடிக்கையைப் பார்த்தபின் அந்த நடவடிக்கை சாத்தியமற்றதென்றும் ஒதுக்கிவிடுவதற்கில்லை. மேலும், இந்தியப் பொதுத்தேர்தல் முடிவு இவ்விஷயத்தில் ஏதாவதுசெய்ய வேண்டும் என்பதை சீனவுக்கு உணர்த்தத்தவறினல் அது துரதிருஷ்டமேயாகும். சீன ஆக்கிரமிப்புக்குப் பின்பும் மக்களின் பெரும்பான்மை ஆதரவுடன் நேரு அரசாங்கம் பதவிக்கு வந்திருக்கிறதென்ற உண்மை சீனவுக்குத்தெரிந்திருக்கும். எனவே எல்லைப் பிரச்சினை பற்றியும், இருதேசஉறவு பற்றியும் அது தீவிரமாக



ஆலோசிக்க வேண்டியதருணம் இப்போது வந்திருக்கிறது.

இரு நாடுகளுக்கும் சிறிய எல்லைத் தாவா விஷயமாக போர் நடக்கும் என்ற பேச்சுக்கே இடமில்லை. அப்படி நடந்தால் சீன வெற்றிபெறும் என்று அதன் ஆள்பலத்தைக் கொண்டு தீர்மானித்துவிடவும் முடியாது. ஏனெனில் ராணுவ ரீதியில், சில அம்சங்களில் சீனவைவிட இந்தியாவும், மற்றும் சில அம்சங்களில் இந்தியாவைவிட சீனவும் பலம் வாய்ந்தவையாய் இருப்பதே அதற்குக் காரணம்.

## ஸ்ரீமதி கென்னடி

அமெரிக்க ஜனதிபதியின் பிரபல்யம் வாய்ந்த மனைவியான ஸ்ரீமதி ஜேக்கலின் கென்னடியின் இந்திய விஜயம் இருநாட்டு நல்லுறவுக்கு மேலும் வழிவகுக்கும். இந்திய அமெரிக்க உறவு பல வருடங்களாக வளர்ச்சி பெற்றுவந்த போதிலும் சிற்சில சமயங்களில் அபசகுனம் போல் ஏதோ ஒன்று நேரிட்டு அதைக் கெடுத்து விடுவதுண்டு. ஆயினும் இருநாட்டு அடிப்படை உறவுக்கு எப்போதுமே குந்தகம் நேரிட்டதில்லை. பிரதமர் நேரு மூன்று தடவைகள் அமெரிக்காவுக்கு விஜயம் செய்தார். அவர் விஜயம் செய்வதற்கு முன்போ பின்போ ஒவ்வொரு தடவையும் இருநாடுகளுக்கு மிடையேயும் தப்பபிப்பிராயம் ஏற்பட்டிருந்தது ஒரு விந்தையான விஷயம். ஜனதிபதி கென்னடியின் காலத்தில் இருநாட்டுஉறவு மேலும் அபிவிருத்தியடைந்தது இங்கு குறிப்பிடத் தக்க அம்சமாகும். ஏனெனில் பல சர்வதேசப்பிரச்சினைகளில் இரு நாடுகளின் கண்ணேட்டமும் ஒத்திருந்ததே இதற்குக் காரணம். இந்த உறவும் கோவா நடவடிக்கை சமயத்தில் ஓரளவு மோசமடைந்தது. கென்னடி நிர்வாகம் இந்திய நடவடிக்கையைக் கண்டித்ததைத் தொடர்ந்து யு. எஸ் இந்திய உறவில் தர்ம சங்கடமான நிலைமை ஏற்பட்டது. ஆனல் கென்னடி தூரதிருஷ்டியுடன் தமது தவறை உடனடியாகத் திருத்திக் கொண்டார். உலக அபிப்பிராயத்தை மதித்து இந்த விஷயத்தை அமெரிக்கா கைவிட்டுவிட்டது. முன்னைய அழைப்பின் படி ஸ்ரீமதி கென்னடி இந்தியா வந்திருப்பது, ஜனதிபதிகென்னடியின் இந்திய விஜயத்துக்கு ஒரு முன்னேடியாக இருக்கும் என்பது தவருகாது.

## உச்சிமகாநாடு

ஜெனீவா ஆயுதப் பரிகரண மகாநாடு பற்றி இம்முறை பல தலைவர்கள் நம்பிக்கை தெரிவித்திருக்கிருர்கள். உடன்பாடு ஏற்படும் எந்த விஷயத்தையும் துரிதமாக அமுல் நடத்த அமெரிக்கா தயாராய் இருப்பதாக ஜனதிபதி கென்னடி கூறியுள்ளார். திரு. மாக்மில்லன், திரு. நேரு ஆகியோரும் ஓரளவு நம்பிக்கை தெரிவித்திருக்கின்றனர்.

மகாநாட்டின் சாதனையைப் பொறுத்து ஜூன் மாத வாக்கில் உச்சி மகாநாடு நடைபெறுமெனத் தெரிகிறது. இந்தியா, இம் மகாநாட்டுக்கு பலமான தூதுகோஷ்டியை அனுப்பியதற்குக் காரணம் மகாநாடு பற்றி ஓரளவு நம்பிக்கை தென்படுவதே என பிரதமர் நேரு கூறியிருக்கிருர். திரைமறைவில் ராஜதந்திர நடவடிக்கைகளை மேற் கொள்வதற்கேற்ப உயர்தர தூதுகோஷ்டி அங்கிருந்து அனுப்பப்பட்டுள்ளது. முன்பு நடைபெற்ற ஒவ்வொரு உச்சி மகாநாட்டுக்குப் பின்பும் புதிய புதிய நெருக்கடிகள்



தோன்றினவே ஒழிய உருப்படியான பலன் ஏற்படவில்லை. ஆயுதப் பரிகரணச் சுவற்றைத் தாண்டி உச்சிமகாநாடு சென்று, அதையும் தாண்டிய பின்பே சரக்கின் தரம் தெரியும்!

# ‘புஷ்பக விமானம்’ விலை ரூ. 22 ஆயிரம்தான்!

## தென்னாட்டு பெங்களூரில் தயாராகின்றன

## நெய்வேலி பொட்டல் காடு நவீன தொழில்நகரமாக மாறுகின்றது

### பிரமாண்டமான பெரம்பூர் தொழிற்சாலையில் ரயில் வண்டிகள் உற்பத்தி

**தெற்கு வளர்கிறது. மிக ஆச்சரியமாக வளர்கிறது. இந்தியா சுதந்திரம் பெற்ற 13 வருட காலத்தில் தமிழ் நாட்டிலே சென்னையில் ரயில் வண்டிகளும், பெங்களூரில் விமானங்களும் உற்பத்தி செய்யப்படுகின்றன. நெய்வேலி பொட்டல் காடு பெரிய தொழில் நகரமாகி வருகின்றது. பல்லாயிரக்கணக்கானவருக்கு வேலை கிடைக்கின்றது. இனி கள்ளத்தோணிகள், இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்குச் செல்லுமென்றார், இதைக் கண்ட என் சிங்களத் தோழர்கள்!**

ஆறு குருடர்கள் யானையைப் பார்த்த கதை உங்களுக்குத் தெரியும். ஒருவர் யானையின் காலைத் தடவிப் பார்த்தார். யானை உரல் போன்றது என்றார். மற்றொருவர் தும்பிக்கையைத் தடவிப் பார்த்துவிட்டு, யானை உலக்கை போன்றதுதான் என்றார். காதைத் தடவியவர், அது சுளகு போன்றதென்றார். வாலைத் தடவிப்பார்த்தவர் விளக்குமாறு போன்றதென்றாராம். இதுபோல இந்தியாவைப் பார்க்க, இலங்கையிலிருந்து சென்ற 6 பத்திரிகைக்காரர்களாகிய நாங்கள் மூன்றுவாரகாலம் ஒரு சில இடங்களைப் பார்த்தோம். இதைப் பார்த்துவிட்டு, இந்தியா அனைத்தையும் பார்த்துவிட்டதாக நினைத்து, எழுதினால் அது யானையைப்பற்றி கூறிய குருடர்கள் கதைபோலவே முடியும். நாங்கள் இந்தியாவில் பார்க்க முடிந்ததைவிட பார்க்காமல் விட்டதுதான் மிக அதிகம். பார்த்ததும்கூட மேலெழுந்தவாரியான கண்ணோட்டம்தான். நுணுகி ஆராய நேரமில்லை. “ஜெட் பிளேன்” வேகத்தில் பறந்துகொண்டுதான் பார்க்க முடிந்தது.

ஆமாம் ‘ஜெட் விமானம்’! இந்தியாவிலே அதுவும் தென்னாட்டிலே அந்த விமானங்கள் ஏராளமாகச் செய்யப்படுவதை நேரில் கண்டோம். நம்ப முடிகிறதா? பெங்களூரிலே ஹிந்துஸ்தான் ஏர்கிராப்ட் பாக்டரிக்கு அழைத்துச் சென்றனர். தனியார் ஆரம்பித்த இத்தொழிற்சாலை சென்ற யுத்தகாலத்தில் அரசாங்க நிர்வாகத்துக்கு மாறி பெரிதும் அபிவிருத்தி அடைந்துள்ளது. இதை ஸ்தாபித்தவர்களின் உருவப்படங்கள் வாசல் முகப்பிலிருந்து பெருமையுடன் நம்மை வரவேற்கின்றன. இராணுவக் காவல் எல்லாம் பலம். பர்மிட் வாங்கிக்கொண்டே உள்ளே செல்ல வேண்டும். பல பகுதிகளையும் பார்த்துக்கொண்டே சென்றோம். தொழிலாளர் மிக சுறுசுறுப்பாக தங்கள் கடமையை கவனித்துக் கொண்டிருந்தனர். “இதுதான் “புஷ்பக” விமானம். இதன் விலை ரூபாய் 22 ஆயிரம்தான். இதற்கு ஏராளமான ஆர்டர்கள் கிடைக்கின்றன” என்றார் வழிகாட்டிய அதிகாரி. 22 ஆயிரத்துக்கு ஒரு விமானமா? ஒரு பெரிய கார்கூட இதைவிட அதிக விலையாயிற்றே! கார் வாங்குவதற்குப் பதில் இந்த விமானத்தையே வாங்கிவிடலாமே? என்றார் என் கொழும்பு நண்பர் ஒருவர் வியப்புடனே. இவ்விமானத்தில் இருவர் செல்லலாம். புராணங்களிலே “புஷ்பக” விமானத்தைப்பற்றி படித்திருக்கிறோம். அவை எப்படியிருந்தனவோ தெரியாது. ஆனால் இன்றைய “புஷ்பக” விமானங்கள் பெங்களூரில்—தென்னாட்டில்—செய்யப்படுவதை நேரில் கண்டோம். சீக்கிரத்தில் அவ்விமானங்கள் இலங்கைக்கும்கூட பறந்து வந்துவிடக்கூடும்.

* * *

அடுத்தபடியாக “சூபர் ஸானிக் பாம்பர்ஸ்” என்ற ஜெட் வெடிகுண்டு விமானங்களும் அங்கேயே கட்டப்பட்டு வருவதைக் காட்டினர். ஒரு முக்கிய இஞ்சின் பகுதியைத் தவிர, மற்றவை எல்லாம் இந்தியாவிலேயே செய்கிறார்களாம். இஞ்சினியர்களனைவரும் இந்தியரே! நவீன பாரதம் தன் சுதந்திரத்தைக் காத்துக்கொள்ள எப்படி முஸ்தீபு செய்துவருகிறதென்பதைக் கண்டேன். இந்தியாவிடம் வாலாட்டி சுலபமாக யாரும் தப்பமுடியாது. ஆனால்ஒரே ஒரு வருத்தம். இந்த வெடிகுண்டு விமானங்களுக்கு ஆகும் பணத்தை, சாதாரண விமானங்கள் கட்ட பயன்படுத்தினால் விமான யாத்திரை மிகமலிவாகி, சாதா

**கே. பி. ஹரன்**

ரண மக்களும் விமானத்தில் பறக்கக்கூடுமே. அந்தக்காலம் எப்போது வருமோ? என்று தோன்றியது.

சென்னையிலே பத்திரிகைக்காரர் சங்கம் எங்களை வரவேற்றபோது, இலங்கையைப் பார்க்கவேண்டுமென்று அவர்களில் பலரும் மிக ஆவல் காட்டினர். சிலநூறு மைல் தூரத்திலுள்ள இலங்கைக்கும் அவர்கள் வரமுடியாதிருப்பது மிக துரதிருஷ்டம். இருதேசப் பத்திரிகைக்காரர்களும் அடிக்கடி நேரில்சென்று பார்த்தால் நல்லெண்ணமும் நல்லுறவும் வளரவும் இருதேச நட்பும் ஒத்துழைப்பும் பலப்படவும் எவ்வளவு உதவியாக இருக்கும்! விமானப் பிரயாணம் பத்திரிகைக்காரர்களுக்காவது, இலவசமாக இருக்க வேண்டும். இந்திய அரசாங்கம் அழைத்துச்செல்லாவிட்டால் நாங்களும் எப்படிச் சென்று இவற்றையெல்லாம் பார்த்திருக்க முடியும்? எதிர்காலத்தில் விமான யாத்திரை இப்பகுதியில் பெரிதும் அபிவிருத்தியாகுமென்ற நம்பிக்கை இத்தொழிற்சாலையைக் கண்டதும் எனக்கு ஏற்பட்டது.

இங்கு தினசரி எவ்வளவு விமானங்கள் செய்யப்படுகின்றன என்று கேட்கிறீர்களா? அதெல்லாம் இராணுவ ரகசியம். அதைத் தெரிவிக்க அங்குள்ள அதிகாரிகளுக்கும் அதிகாரமில்லை. பெரிய அதிகாரி சிற்றுண்டி அளித்து உபசரித்தார். தெற்கு பிரமாதமாக வளர்வதுடன், பறக்கவும்கூட தயாராகிவிட்டதைக் கண்டோம்.

* * *

தமிழ் நாட்டிலே பெரம்பூரிலுள்ள “இன்டகிரல் கோச் பாக்டரி” என்ற ரயில்வே வண்டிகள் தயாரிக்கும் தொழிற்சாலை, நெய்வேலி பழுப்பு நிலக்கரிச் சுரங்கம் இவற்றைப் பார்த்தோம். இவ்விவரங்களை எழுதுவதென்றால் ஒரு புத்தகங்களாகும்! பெரம்பூரை 30 வருடங்களுக்கு முன் பார்த்தது! இப்போது அது அடையாளமே தெரியாமல் வளர்ந்திருக்கிறது. “கட்டைவண்டி யுகம் மாறி இது சைக்கிள் யுகம்” என்று சொன்னார் பிரதமர் நேருஜி. பெரம்பூருக்குச் செல்லுகையில், இதை நேரில் கண்டேன். பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் தங்கள் சைக்கிள்களை தொழிற்சாலை முன் தனி இடத்தில் வைத்துள்ளனர். அதைப்பார்த்தாலே பெரிய சைக்கிள் தொழிற்சாலையோ என்று நினைக்கும்படி இருந்தது.

உள்ளே சென்றோம். முதலில் மாதிரிப் படத்தையும், தொழிற்சாலை ஆரம்பித்தவிதம் நடப்பு, உற்பத்தி எல்லாம் விளக்கினார் கே. சந்தானம் என்ற அதிகாரி. இதைக்கட்ட உதவிய ஜெர்மன் நிபுணர்கள் யாரும் இப்போது இல்லை என்றும் இந்தியரே எல்லாவற்றையும் பார்த்துக்கொள்ளுவதாகப் பெருமையுடன் கூறினார். அதிகாரி. பெரிய பெரிய இரும்புத் தகடுகள் வந்து இறங்குகின்றன. அமெரிக்காவிலிருந்து இவை வருகின்றனவாம். உள்ளே செல்லச் செல்ல கணக்கற்ற பட்டறைகளில் மிக சுறுசுறுப்பாக மின்சார சக்திகொண்டு வேலை நடக்கிறது. இந்தியாவின் பல பகுதிகளிலுள்ள தொழிற்சாலைகளிலிருந்து, சக்கரம் முதலியவை வருகின்றன. இரும்புத் தகடு, பொதுவாக ரயில்வண்டியாக உருவாகிறது. ரயில் யாத்திரையை பத்திரமாகவும் சுகமாகவும் ஆக்கவேண்டுமென்ற நோக்கத்துடனேயே தாங்கள் இவ்வண்டிகளைச் செய்வதாகக் கூறினார் அதிகாரி. முதலாளி—தொழிலாளி உறவுகள் மேலாக உள்ளனவாம். தொழிலாளர் குடியிருக்க ஏராளமான வீடுகள் கட்டப்பட்டுள்ளன. எந்தக் குறையையும் பேசித் தீர்த்துக்கொள்ள வசதிகளுள்ளன. வாலிபர்களைத் தெரிவுசெய்து, சிலமாதகாலம் பயிற்சி அளித்து, பின்னர் அவர்களைத் தொழிலாளராகச் சேர்த்துக் கொள்ளுகிறார்கள். இந்தப் பயிற்சிபெற்றதொழிலாளருக்கு வேலைப் பஞ்சமில்லை. தொழிலாளர் உற்சாகத்துடன் மிக சுறுசுறுப்பாகக் காணப்பட்டனர். இந்தியாவுக்குத் தேவையான ரயில் வண்டிகளை இந்தியாவிலேயே உற்பத்திசெய்கின்றனர். இதனால் பணம் வெளியேறாததுடன், பலருக்கு வேலை கிடைக்க முடிகிறது. பெங்களூர் முதலிய வேறுசில இடங்களிலும் இவ்விததொழிற்சாலைகளுள்ளனவாம். மிக சிக்கனமாக இவை கட்டப்படுகின்றன. நடந்து நடந்து கால்கூட வலி எடுத்துவிட்டது. சிற்றுண்டி சாப்பிடத் தகுதிபெற்றுவிட்டுவிட்டீர்கள் என்று அதிகாரி சிரித்துக்கொண்டே கூறினார். முடிவில் பெரிய அறைக்கு வந்தோம். நிர்வாக அதிகாரிகள் அங்குதான் கூடி ஆலோசிப்பார்களாம். பெரிய பெரிய “ஷீல்டுகள்,” “கப்புகள்” எல்லாம் கண்ணாடி அலமாரியில் வைத்திருந்தனர். அங்குள்ள தொழிலாளர் விளையாட்டுப் போட்டிகளில் வென்றவை இவை என்று பெருமையுடன் கூறினார் அதிகாரி.

ஏதாவது யோசனை கூறுங்கள் என்றார் பண்புடன் அந்த அதிகாரி. என்ன சொல்லுவது? ரயிலில் எல்லாம் ஒரே வகுப்பாக மாறி, மூன்றும் வகுப்புப் பிரயாணிக்கும் மெல்லிய மெத்தை ஆசனமாவது கிடைத்தால் நல்லதென்றேன். எதிர்காலத்தில் இது கைகூடலாம்! இதுவரை அந்த அதிகாரி இலங்கைக்கு வந்ததில்லையாம். அவரை சீக்கிரம் வந்து இந்தமாதிரித் தொழிற்சாலையை இலங்கையிலும் கட்ட உதவும்படி கூறிவிட்டு விடைபெற்றோம்.

* * *

பிறகு நெய்வேலி. சிதம்பரத்துக்குப்பக்கத்திலே வடலூரை ஒட்டி இருக்கும் இந்த இடத்தில், சுவாமி சுத்தானந்தரைப் பார்க்க பலவருடங்களுக்கு முன் சென்றேன். அப்போது இது ஒரே பொட்டல்காடு. ஆனால் இப்போது இது ஒரு தனி நகரம். பலபல புதிய வீடுகள் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ளன. பல்லாயிரக்கணக்கான தொழிலாளர் வேலை செய்கின்றனர். பழுப்பு நிலக்கரி பூமிக்கடியில் ஏராளமாக இருப்பதைக் கண்டுபிடித்து அதை எடுத்து மின்சார உற்பத்தி செய்து பலபல பாரிய கைத்தொழில்களையும் ஆரம்பிக்கத் திட்டமபோட்டுள்ளனர்.

இங்கு பூமிக்கடியில் பல நீர்ச்சுனைகளுண்டு. சுமார் 400 அல்லது 700 அடிவரை தோண்டி, பாதாள குழாய்வைத்து சுனைகளிலிருந்து இரவுபகலாகக் கொட்டும் தண்ணீரைக் கொண்டு, பெருவாரியான நிலங்களில் சாகுபடி செய்கிறார்கள். இந்தத் தண்ணீர்தான் இச்சுரங்கவேலைகளுக்கு பெரிய முட்டுக்கட்டையாக இருந்து வந்தது. பழுப்பு நிலக்கரிக்கு அடியிலே தண்ணீர் அதிகமுள்ளது. நிலக்கரியை சற்றே அகற்றினால், அடியிலுள்ள தண்ணீர் பீறிட்டுக்கொண்டு வெளியேவந்து சுரங்கமனைத்தையும் வெள்ளக் காடாக்கிவிடக்கூடிய ஆபத்து ஏற்பட்டது. பலகோடிரூபாய் செலவு செய்தபின், இக்கத்திட்டமே சரிவருமா? என்று சந்தேகமேற்பட்டதாம். ஆனால், எந்தத் தண்ணீர் ஒரு பிரச்னையாக இருந்ததோ, அதைக் கொண்டே நீர்சக்தி மின்சாரம் உற்பத்திசெய்ய ஒழுங்கு செய்துவருகின்றனர். இரவு பகலாகப் பலபல இஞ்சின்கள். தண்ணீரைவெளிப்படுத்துகின்றன. வெளிப்படும் தண்ணீர் ஒரு ஆறுபோல ஓடுகிறது. தண்ணீர் இறைப்பதை சற்றே நிறுத்தினால் சுரங்கமெல்லாம் ஜலத்தில் மூழ்கிவிடுமாம். அங்கேயே மின்சார சக்தியை உற்பத்திசெய்ய புதியஏற்பாடுகள் நடக்கின்றன. அச்சக்தி மீண்டும் வெளியிலிருந்து பெற்றும், தண்ணீரை அச்சக்தி மூலம் வெளிப்படுத்தும வேலை நடந்து வருகிறது.

பூமியைத் தோண்டி மண்ணை மலை மலையாகக் கொட்டியுள்ளனர். சிவப்பு, வெள்ளை மலைகளைத் தாண்டி, ஜீப்பிலேயே சுரங்க அடிப்பக்கம் சென்றோம். திறந்த வெளியிலே உள்ளது இச்சுரங்கம். ஆரம்பநிலை தானே. பிரமாண்டமான டிராக்டர்கள் வேலை செய்கின்றன. முதலில் 3000 டன் பழுப்புற்ற நிலக்கரி மட்டும் எடுத்து, அதனைப் பரிசீலனை செய்ய கிழக்கு ஜெர்மனிக்கு அனுப்பியுள்ளனராம். ‘லிக்னைட்’ எனும் அந்த நிலக்கரியை கையில் எடுத்துப் பார்த்தேன். அதில் மரத்துண்டுகளும் காணப்பட்டன. முற்காலத்தில் காடாக் கிடந்த மரங்கள் தான், பூமியில் புதைபட்டு நிலக்கரியாகியுள்ளது நன்றாகத் தெரிந்தது.

மேம்படுத்தும் காலம் விரைந்து வருகிறதென்பதைக் கண்டோம். இங்கு எல்லாம் மெஷின்கள் மயம் தான். பெரிய பெரிய மெஷின்கள் கொண்டு சிக்கனமாக இச்சுரங்க வேலையை நடத்த திட்டம் போட்டுள்ளனர். இன்

(12ம் பக்கம் பார்க்க)

## பூஜ்யம் தபால்

அறிஞர் அண்ணாதுரை
தி. மு. க. ஸ்தாபகர்,
சென்னை.

அன்பரே!

டில்லி ராஜ்யசபைக்குத் தாங்கள் போட்டியின்றி தெரிவு செய்யப்பட்டதற்காக தங்களிற்கு எனது ‘டபிள்’ பாராட்டுகள்.

சென்னை அசெம்பிளி தேர்தலில் தாங்கள் வெற்றி பெறாததும் திடுக்கிட்டு ஏமாற்றமடைந்தவரில் யானுமொருவன். தங்களைப் போன்ற ஒருவர் ‘திராவிட நாடு’ வேண்டுமென்று கேட்டுக் கொண்டே இருந்தால் தான், தங்களைக் காட்டி, தமிழ் நாட்டு அபிவிருத்திக்கு அதிக பணம் ஒதுக்கி, புதிய தொழிற்சாலைகளை அமைக்க வேண்டுமென்று, முதல் மந்திரி காமராசரும், நேருஜியாரிடமும் டில்லி தேவதைகளிடமும் வற்புறுத்திக் கேட்டுப் பெறமுடியும்.

சென்னையிலின்றிபுதுடில்லிக்கு இப்போது தாங்கள் செல்வது பழம் நழுவிப் பாலில் விழுந்தது போலாயிற்று. இனி தாங்கள் புதுடில்லிக்குச் சென்று திராவிடநாடு வேண்டுமென்று கேட்டு வந்தால், புதுடில்லிக்காரர் தங்களை மறவாமல் தமிழ் நாட்டின் பால் அதிக கவனம் செலுத்தி, அபிவிருத்திக்கு அதிக வழியேற்படலாம்.

இதே சமயம் தாங்களும் வடநாடு சென்று அங்குள்ள மக்களுடன் பழகி, புதிய விஷயங்களைத் தெரிந்து கொள்ளவும் தங்கள் புகழ் வடக்கேயும் பரவவும் இனி அதிக வாய்ப்புக் கிடைக்கும். தப்பெண்ணங்கள் பலவும் நீங்கக் கூடும்.

வட நாட்டில் பல தமிழர் குடும்பத்துடன் சென்று பல தொழில்கள் செய்து வாழுகின்றனர். தாங்கள் எழுப்பும் ‘திராவிட நாடு’ கோஷம் காரணமாக அவர்கள் தங்களது வேலைகளை இழந்து தமிழ் நாட்டுக்குத் திரும்ப நேரிடுமோ என்று அஞ்சுவதாக அறிகிறேன். தாங்கள் டில்லிக்குச் செல்லுவதால், நிலைமையை நேரில் அறிந்து, அவர்களுக்கு ஆறுதல் கூறி எவ்வித தீங்கும் ஏற்படாமல் பார்த்துக் கொள்வீர்களென்று நம்புகிறேன்.

இப்படிக்கு
பூஜ்யம்.

குறிப்பு,

தமிழ் நாட்டிலே தங்கள் கட்சிக்கு அதிக வெற்றி ஏற்பட்டுள்ளதைக் கண்டு இங்கு எங்கள் இலங்கையிலே சில வட்டாரங்களுக்கு ஒருவித பீதி வந்துள்ளதாக அறிகிறேன். திராவிட நாடு கிளர்ச்சி அங்கே பலப்பட்டால், இங்கும்பிரிவினை சக்திகள் பலப்படுமோ என்ற பீதியே அது. இதன் பயனாக இங்கு தேசிய ஒற்றுமையைப் பலப்படுத்த, மொழி முதலிய பிரச்சினைகளில் விட்டுக்கொடுத்து ஒரு சமரசம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டுமென்றபுதுஉணர்ச்சியும்ஏற்பட்டுள்ளதாகச் சொல்லப்படுகிறது. இது உண்மையாயின், தங்கள் கட்சியின் வெற்றியால், இலங்கையிலே எங்கள் உள்நாட்டுப் பிரச்சினையும் தீர்ந்து எங்கள் நாடு முன்னேறவும் மறைமுகமாக உதவி செய்யுமென்று நம்புகிறேன்.

“பூ”

# மகளிர் மன்றம்

# ஷண்ணம்மா மகாராணி

## வாளேந்தி வீரத்துடன் பிரிட்டிஷாரை எதிர்த்த முதல் இந்தியப் பெண்மணி

கிட்டூர் ஷண்ணம்மா ராணி பற்றிக் கேள்விப்பட்டிருக்கிறீர்களா? பிரிட்டிஷ் ஆட்சிக்கு எதிராக முதல்முதல் போராடிய பெண்மணி ஷண்ணம்மா ராணியே. கிட்டூர் மைசூரில் உள்ள சரித்திரப்பிரசித்திமிக்க நகரம். இந்த கிட்டூர் நகரிலேயே ஷண்ணம்மா ராணியார் பிறந்தார். ஷண்ணம்மா ராணியார் காலத்தில் கிட்டூர் நகரம் அதிகம் பிரசித்தி பெற்றது. ஜான்ஸி ராணியான லக்ஷ்மி பாய் அவர்களுக்கு முன்னரே பிரிட்டிஷ் ஆதிக்கத்துக்கு எதிராகப் போராடியவர் ஷண்ணம்மா ராணியே. ஷண்ணம்மா கிட்டூர் கடைசிமன்னர் மால்சராஜாவின் இரண்டாவது மனைவி. மால்சராஜாவின் முதல் மனைவியின் பிள்ளைகளை ஷண்ணம்மா தன் குழந்தைகள் போலப் பார்த்து வந்தார்.

1818-ல் கிட்டூரை சிவலிங்க ருத்ர சார்ஜா ஆண்டகாலத்தில் சித்தூர் பிரிட்டனுக்கு வருடாந்தம் 1,75,000 ரூபாய் செலுத்தும் என ஒப்பந்தம் செய்யப்பட்டிருந்தது. கிட்டூர் அரசர்கள் இந்தத் தொகையை ஒரு காலத்திலும் செலுத்தவில்லை. கிட்டூருக்கும் பிரிட்டிஷாருக்குமிடையே சுமார் ஆறுவருடங்களாக இதுபற்றித் தகராறுகள் நடைபெற்றுவந்தன. பிரிட்டிஷ் ஆதிக்கத்தைக் கிட்டூரில் நிலைநாட்ட தாக்கெறி என்னும் பிரிட்டிஷ் மனிதர் பெருமுயற்சி செய்தார். 1824-ல் கிட்டூர் மன்னர் சிவலிங்க ருத்ர சார்ஜா இறந்துவிட்ட செய்தி தாக்கெறிக்கு எட்டியது. கிட்டூர்ராஜா பாலசாகேப் என்னும் பெயருடைய பையன் ஒருவனை வளர்த்துவந்தார்.

சிவலிங்கருத்ரசார்ஜா இறந்ததும் தாக்கெறி தன்முயற்சிகளில் இறங்கினன். நாட்டைப் பரிபாலிப்பதற்கு பிரிட்டிஷ் சார்பில் ஒன்றும், ஷண்ணம்மா சார்பில் ஒன்றுமாக இரு அதிகார சபைகள் வேண்டும்என தாக்கெறி, ஷண்ணம்மா ராணிக்கு செய்தி அனுப்பினர். இது ஷண்ணம்மாவுக்கு வியப்பையூட்டியது. கிட்டூரின் மீது படையெடுக்கத் தாக்கெறி ஏற்கெனவே ஒழுங்கு செய்திருந்தார். அரண்மனைப் பெண்களை விளக்கம் தருமாறு கேட்டிருந்தார். பெண்கள் மறுத்தார்கள். நிலைமையின் நெருக்கடியை ஷண்ணம்மா உணர்ந்திருந்தார். எனவே கிட்டூர் நகர் விவகாரங்களின் பொறுப்பைத் தாம் மேற்கொண்டார். எந்த நிலைமையையும் எதிர்நோக்கத் தயாராய் இருக்கும்படி மக்களுக்குச் சட்டமிட்டார். குருசித்தப்பா என்பவர் நாட்டின் படைத்தலைவராக்கப்பட்டார். கோட்டையைத் தாக்கெறி தாக்கிய போது கோட்டையின் வாயில் புறத்தில் நின்றுகொண்டு ஷண்ணம்மா மக்களைத் திரட்டினர். நாரியைச் சுற்றி ஒரு தங்கப் பட்டி கட்டிக்கொண்டு அதில் வாள் ஒன்று தொங்கவிட்டபடி விருப்புடன் தோற்றமளித்த ஷண்ணம்மா தனது நாட்டு மக்களுக்கு ஊக்கத்தையும் உற்சாகத்தையும் கடமையில் ஆர்வத்தையும் ஏற்படுத்தினர்.

கோட்டையின் வாசல்கள் உடைக்கப்பட்டு பிரிட்டிஷ் படை உள்ளே சென்றபோது குருசித்தப்பாவின் படைவீரர் பிரிட்டிஷாரை எதிர்நோக்கினர். தாக்கெறிஉள்ளே நுழைந்ததும் இருசாராருக்குமிடையே பெரும் கலகம் ஏற்பட்டது. தாக்கெறி சுட்டுக்கொலைசெய்யப் பட்டார். பிரிட்டிஷ்படை அங்கு முறியடிக்கப்பட்டது. ஷண்ணம்மா முன்னிலையில் கொண்டுவரப்பட்ட பிரிட்டிஷ் கைதிகளை ஷண்ணம்மா மரியாதையுடன் உபசரித்தார்.

ஒரு பெண்ணின் தலைமையில் நிறுவப்பட்ட கிட்டூர் படையினல் தோல்வியுற்ற பிரிட்டிஷ் படையினருக்கும் பெரும் புகைச்சலாக இருந்தது. தாம் இழந்த புகழைத் திரும்பவும் நிலைநாட்ட முற்பட்டார்கள். அதற்காகப் பெரும் ஒழுங்குகளைச் செய்தார்கள். கோட்டையைச் சுற்றி 200 துப்பாக்கிகளைத் தாங்கினர்கள். நவம்பர் 3-ம் திகதி சண்டை தொடங்கவிருந்தது. ஷண்ணம்மாவும் தனது படைகளைத்திரட்டினர். நவம்பர் 3-ம் திகதியன்று கிட்டூரில் பெரும்போர் நடந்தது. இரவு பகலாகப் பிரிட்டிஷ் படை துப்பாக்கிப் பிரயோகம் செய்தது. ஷண்ணம்மா நம்பிக்கை வைத்த சில மனிதர்கள் ஷண்ணம்மாவுக்குத் துரோகம் செய்துவிட்டார்கள். பகைவர்களுக்குச் சில தகவல்களைத் தெரிவித்துவிட்டார்கள். தனது மக்களின் துரோகச்செயலால் ஷண்ணம்மா தோல்வியுற்றர். பிரிட்டிஷாருக்குத்தமதுவெற்றி புலனாகியது. 1824 டிசம்பர் 3-ம் திகதியன்று பிரிட்டிஷார் கோட்டையைத்தாக்கி வெற்றி பெற்றனர். கிட்டூர் மக்கள் டலர் மாண்டனர். ஷண்ணம்மா கைது செய்யப்பட்டார்.

தனது இறுதி நாட்களை தனிமையாக சிறையில் கழித்த ஷண்ணம்மாவின் தியாகத்தையும் தேசப்பற்றையும் போற்றுதிருக்கமுடியுமா? இந்திய மக்களுக்கு பிரிட்டிஷாரின் ஆதிக்கத்திலிருந்து சுதந்திரம் பெற்றுக் கொடுக்க முதன் முதல் முயன்ற இந்தியப் பெண்மணி கிட்டூர் ஷண்ணம்மாவே. அவரது முயற்சியில் அவர் தோல்விகண்டார் எனினும் அவர் வீரப்போராடிய பெண்மணியே. தனது தாய்நாட்டுக்காகப் போராடிய ஷண்ணம்மா ராணியை மறந்து விடமுடியாது.

# "கனவு பலித்ததம்மா"

"கௌரி"

சாந்தம் சமையலறையில் வெங்காயம் உரித்துக் கொண்டிருந்தாள். அவளின் கைகள் தான் வெங்காயம் உரித்தன. "கனவு பலித்ததம்மா" என்னும் வரிகளை அவளது வாய் முணு முணுத்துப் பாடிக் கொண்டிருந்தது. அந்தப் பாட்டின் வரிகள் அவளது கற்பனையை 15 வருடங்களுக்கு முன்னர் கொண்டு போய்ச் சேர்த்தன.

'கனவு பலித்ததம்மா' "என்ன விந்தை, கனவு பலித்ததம்மா என்று இன்று பாடுகின்றேனே. நான் இளமையில் எத்தனை கனவுகள் கண்டேன். அவையெல்லாம் எவ்வாறு போயின. சீச்சீ... இன்று சமையலறையிலிருந்து வெங்காயம் உரிக்கிறேனே". என்றாள் சாந்தா.

என்ன காரணமோ தெரியவில்லை. தன்னைப் 15 வயதுப் பெண்ணாகவே நினைத்துக் கொண்டு தனது பழைய கனவுகளையெல்லாம் அப்படியே ஒரு கனம் நினைத்துப் பார்த்தாள்.

பதினைந்து ஆண்டுகளுக்கு முன்பு சாந்தா கண்ட கனவுகளுக்கு அளவில்லை. "எப்படியாவது நான் ஒரு டாக்டராக வேண்டும். பல்கலைக்கழகம் புகுந்து பட்டம் பெறவேண்டும். டாக்டர்கள் அணியும் கோர்ட்டையும் அணிந்து, கழுத்தில் 'ஸ்டெதஸ் கோப்'பும் மாட்டிக் கொண்டு ஆஸ்பத்திரி வார்டுகளில் விறுநடை போட வேண்டும். திறமான டாக்டர் என்று பெயரெடுக்க வேண்டும். கார் செலுத்திச் செல்ல வேண்டும். கல்யாணம் செய்து கொள்ளும்படி அப்பாஅம்மா கேட்கும் போது 'சீ... அதெல்லாம் நமக்கென்னத்துக்கு, நான் தானே சுதந்திரப் பறவையாக இருக்கிறேனே' என்று வீரமாகக் கூறவேண்டும்".

இவ்வாறெல்லாம் 15 வயதுப் பெண்ணாக இருந்தபோது சாந்தா கற்பனைக் கனவுகள் கண்டாள்.

'ஸ்டெதஸ் கோப்'புடன் ஆஸ்பத்திரியில் நிற்க வேண்டிய சாந்தா சமையலறையில் வெங்காயம் உரித்து நின்றாள். அவளது நினைவு தனது பழைய கற்பனையைச் சுற்றியிருந்தது. லேடி டாக்டராக வேண்டும் என்று தான் முன்னர் கண்ட கனவுகளை நினைத்த போது அவளுக்கு ஏக்கமாக விருந்தது.

பாட்டின் மெட்டை முணுமுணுத்துக் கொண்டு தன்னையறியாமல் சிரித்தாள்.

"என்னம்மா சிரிக்கிறாய்? மிட்டாய் வாங்கக் காசு கொடும்மா" என்று சாந்தாவின் சிறிய குமாரன் அருகில் வந்து குரல் கொடுத்தான். சாந்தாவின் பழைய நினைவுகள் மறைந்தோடின. குழந்தையைப் பார்த்ததும் சாந்தாவுக்குப் பொத்தென்று சிரிப்பு வந்தது. ஒன்றும் விளங்காத குழந்தை அகன்ற விழிகளுடன் சாந்தாவைப் பார்த்து நின்றான். சேயின் பார்வையில் தாயுள்ளம் கனிந்தது. வெங்காயம் உரித்த கையைத் துடைத்தது பாதி துடைக்காதது பாதியாகக் குழந்தையை வாரி அணைத்துக் கொண்டாள். "கனவு பலித்திருந்தால் உன்னைக் கண்டிருப்பேனடா" என்று செல்லமாகக் கூறியது அவள் வாய்.

## பாரதி காணும் வீரப்பெண்

உலக வாழ்க்கையின் நுட்பங்கள் தேரவும்,
ஓது பற்பல நூல்வகை கற்கவும்,
இலகு சீரடை நாற்றிசை நாடுகள்
யாவுஞ் சென்றுபுதுமை கொணர்ந்திங்கே
திலக வாணுதலார் எங்கள் பாரத
தேச மோங்க உழைத்திடல் வேண்டுமாம்;
விலகி வீட்டிலோர் பொந்தில் வளர்வதை
வீரப் பெண்கள் விரைவில் ஒழிப்பராம்.

அழகு மேடை

# கூந்தல் அலங்காரம்

"ஐறீன் ரஞ்சிதம்"

கூந்தலைப் பற்றிச் சென்ற அழகு மேடையில் கூறியிருந்தேன் அல்லவா. கூந்தல் அடர்த்தியாக வளர்வதற்கு உபயோகிக்கக்கூடிய தைலம் ஒன்றைச் சரிக்கட்டும் முறையை இன்று தருவதாகவும் கூறியிருந்தேன். இதோ அந்த முறையைத் தருகிறேன். அத்தோடு வயதுக்கேற்ற கூந்தல் அலங்காரம் செய்வதுபற்றியும் சிறிது கூறுகிறேன்.

### மருதோன்றித் தைலம்

மருதோன்றித் துளிர்களைச் சிறிதுஎடுத்துக்கொள்ளுங்கள். காம்பை நீக்கிவிட்டுத் துளிரை நன்ருக அரைக்க வேண்டும். அரைத்த பின்னர் சிறுசிறு வில்லைகளாக அரைத்த கூட்டைத் தட்டிக்கொள்ள வேண்டும். நல்லெண்ணெயை நன்ருகக் கொதிக்க வைத்து, அது கொதித்துக் கொண்டிருக்கும் சமயத்திலேயே தட்டிய வில்லைகளைப் போட்டுப் பொரியவிட வேண்டும். அப்போது எண்ணெய்நிறம் மாறிவரும். வில்லைகள் கரைந்துபோகாதவண்ணம் பார்த்துக்கொள்ளவேண்டும். எண்ணெய் ஆறியதும் வில்லைகளை அகற்றிவிட்டு எண்ணெயை வடித்துப் போத்தலில் விட்டு வைக்கவும். ஒரு கிழமை சென்றபின் எடுத்துப் பாவிக்கலாம்.

### வயதுக்கேற்ற சிகையலங்காரம்

வயதுக்கேற்ற அலங்காரம் செய்துகொள்வது அடக்கமும் ஒழுக்கமும் நிறைந்த பெண்கள் பண்பு. உடைகளைப்பொறுத்தவரையும், சிகையலங்காரத்தைப் பொறுத்தவரையும் பெண்கள் தத்தம் வயதுக்கேற்ப அலங்காரஞ் செய்து கொள்வது அழகல்லவா?

அன்றொருநாள் எனது நண்பி 'அதோ பாரடி' என்று விழுந்தடித்து எதையோ காட்டிவிட்டு விழுந்து விழுந்து சிரித்தாள். யாராவது என் நண்பியைப்பார்த்துச் சிரிக்கப் போகிறார்கள் என்று அவளைச் சுரண்டிக்கொடுத்து சிரிப்பதைத் தடுத்தேன். அவள் எனக்கு வேடிக்கையாகச் சுட்டிக்காட்டியது ஒரு மூதாட்டியைத்தான். அந்த மூதாட்டியின் கூந்தல் நல்ல வெள்ளிக் கம்பிபோல் நரைத்திருந்தது ஆனல் அவரது கொண்டை மாத்திரம் நல்ல கருகரு வென்றிருந்தது. அதுமட்டுமல்லாமல் தலைக்கு மிஞ்சிய அளவுக்குப் பெரிதாகவும் அந்த அம்மாள் கொண்டை கட்டியிருந்தாள். அதுதான் என்னுடைய நண்பிக்குப் பெரும் வேடிக்கையாகவிருந்தது வயதுவந்த மூதாட்டிகள் மூதாட்டிக்கோலத்திலேயே இருக்காவிட்டால் அவர்களது அழகு கெட்டுப்போய்விடப் போகிறதா? அவளுக்கு இயற்கையாகவே உள்ள நரைக் கூந்தலுடன் ஒரு கோடாலி முடிச்சுப் போட்டிருந்தால் எத்தனையோ அழகாகவிருந்திருக்கும். 'வயோதிபத்தை மறைக்க வேஷம்போட்டவள்' என்று ஏனையோர் கேலிசெய்வதற்கும் இடமிருந்திருக்காது.

வயதுக்கேற்ற சிகையலங்காரம் அழகைக் கொடுப்பதோடு கௌரவத்தையும்கூடக் கொடுக்கிறது வயது முதிர்ந்த பெண்கள் இளம்பெண்கள் செய்துகொள்ளும் ரீதியில் தலையலங்காரங்களைச் செய்து கொள்ளக்கூடாது.

ஒருசில வளர்ந்த தமிழ்ப் பெண்கள் மேலைநாட்டவரைப்போலக் கட்டையாகத் தலைமயிரை வெட்டிக்கொள்ளுகிறார்கள். சுகாதாரத்தையும் சௌகரியத்தையும் பொறுத்தவரை இது நல்லதாக விருந்தாலும் தமிழ்ப் பண்பாட்டிற்கு இது பெரிதும் முரண்பட்டதாகும்.

ஆகக் கூடியது 10—11 வயது வரைதான் பெண்பிள்ளைகளுக்குக் கட்டையாகக் கூந்தலை வெட்டிவிடுதல் நல்லது. அதற்கு மேற்பட்ட வயதுடைய தமிழ்ப் பிள்ளைகள் தமிழ் முறையில் உடை அணிவதாகவிருந்தால் அதற்கேற்ப தலைமயிரும் நீளமாக வளர்க்கப்படல் வேண்டும். தமிழ்ப் பண்பாட்டின்படி பாவாடை தாவணி அணியும் பெண்பிள்ளைகள் தமது முடியை நீளமாகப் பின்னித் தொங்கவிடும்போது தன் அழகு மிகவிருக்கும். ஒருசில "நாகரிக" தமிழ்ப்பெண்கள் நன்ருக வயதுவந்தபின்னரும் குட்டையாக மயிரை வெட்டிவிடுவதைப் பார்க்கும் போது அவர்கள் எமது பண்பாட்டிற்கே இழுக்குத் தேடுகிறார்கள் எனத் தோன்றுகிறது.

# சில்லறை

— கலிங்கன் —

"யாழ்ப்பாண மாநகர சபைப் பக்கம் போனீர்களா? ஒரே பள்ளமும் திட்டியும்தான். "எங்களுக்கெதுக்கு அந்த வேலைகளெல்லாம். எங்களுடைய வேலைகளே தலைக்குமேலே இருக்கு. அதுகளையெல்லாம் போய்ப் பார்த்துக்கொள்ள எங்களுக்கு எங்கே நேரமிருக்கிறது? சபையிலே நாளும் நடக்கும் அதைப் பற்றியெல்லாம் நாம் அக்கறைப்படுத்த முடியுமா?"

அரசியல் அறிவில்லாத நான் நண்பர் நாகலிங்கத்தின் கேள்விக்கு இப்படி பதிலளித்தேன்.

'அட அதில்லையப்பா, யாழ்ப்பாண மாநகரசபை மண்டபத்துச்குப் பக்கத்தே—இடது பக்கத்தே செல்லும் வீதியைப் பற்றித்தான் சொல்கிறேன். ஒரே மேடும்பள்ளமும்தான். இதை உணராத மக்கள் ஏதோ தமது வட்டார வீதிகளைத் திருத்தவில்லை என்று குறைகூறுகிறார்கள். நிதிநெருக்கடி மாநகரசபைக்குப் பக்கத்தே இருக்கிற வீதியைக் கூட திருத்த முடியாத நிலையிலிருக்கிறது என்பதை இவர்கள் உணர்கிறார்களா?" நாகலிங்கம் விளக்கம் தந்தார்.

"எங்கள் மாநகரசபையைப் பற்றி அவ்வளவு குறைவாக எண்ணிவிடாதே. எவ்வளவு திட்டமெல்லாம் தீட்டி பேச்சு வார்த்தைகள் நடக்குது நீ என்னமோ நெருக்கடி அப்படி இப்படியென்று சொல்லிக் கொண்டிருக்கிறாய். அது ஒரு வேளை மராமத்திலாகாவின் வீதியாக இருக்கும்" அதுதான் அப்படி......" விட்டுக்கொடுக்காமல் கூறினேன்.

"யாழ்ப்பாணத்திலுள்ள இ. போ. ச. பஸ் நிலையம் மட்டும் நகரசபையினுடையதா. அதை ஓரளவு சீராக வைத்திருக்கிறதே இதையும், வெளியூரிலிருந்துவருபவர்கள் பார்த்துக் குறை கூறாதவாறு வைப்பதற்கு அக்கறை காட்டினாலென்ன?" நாகலிங்கம் விடுவதாகவில்லை.

"நகரசபை அங்கத்தவர்கள் வாசல் பக்கமாகவே வந்து வந்தவழியே போய்விடுவதால் ஒருவேளை பார்த்திருக்காமலிருக்கலாம். இல்லாவிட்டால் எல்லா வீதிகளையும்விட நல்லதாக அதைப்போடத் திட்டம் போட்டிருக்கலாம். அதுக்கொருகாலம் வராமலாபோகும்" இப்படி சமாதானம்கூறி நாகலிங்கத்தை அனுப்பிவைத்தேன்.

* * *

உலகத்துப் பிரச்சினைகளையெல்லாம் மறந்திருக்க சினிமா உண்மையில் நன்றாக உதவுகிறது. இந்த நோக்கத்துடன் வீட்டுக்கு அருகிலிருக்கும் தியேட்டருக்கு அவசரமாகச் சென்றேன்.

முன்னெல்லாம் சினிமாவில் நல்ல காட்சிகள் வந்தால்தான் கைதட்டுவார்கள். இப்பொழுது அப்படியல்ல விரும்பிய பொழுது துவங்கிவிடுவார்கள். சிலவேளைகளில் இது 'பைலா' வாகவும் மாறி படம்பார்ப்பவர்களுக்கு 'புத்துயிர்' அளிக்கிறது. இதனால் படம்பார்க்கச் செல்பவர்கள் படம்பார்ப்பதோடு 'பைலா' இசையையும் அனுபவித்துவரும் வாய்ப்பை அடைகிறார்கள்.

இந்தக் கைதட்டல் இன்டேர்வலுக்குப் பிறகு 'சிலைடுகள்' காட்டப்படும் போதுதான் உச்ச நிலையை அடைகிறது. சோடாவைக் குடித்து புகையைப் பிடித்தபின், ஒரு புது சக்தி இந்த ரசிகர்களிடையே தோன்றுவது இயற்கைதானே.

நான் சென்றிருந்த சமயம் "பொலிடோலுக்கான" விளம்பரத்தைப் போட்டிருந்தார்கள். அப்பப்பா, கைதட்டல் கொட்டகையின் கூரையைப் பிய்த்திருக்கும். அதற்குமுன் சிலைட்டை "ஒப்பரேட்டர்" எடுத்துவிட்டார்.

"இடுக்கண் வருங்கால் நகுக" இப்படி வள்ளுவர் குறளில் கூறியதாக ஞாபகம். இதனால்தான் நச்சுத்திராவகத்தைக்கண்டு நம்மவர்கள் கைதட்டிச் சிரித்து மகிழ்கிறார்களோ?

# ஊமைக்கும் முடவனுக்கும் இசை மூலம் சிகிச்சை

**தாழ்வுணர்ச்சி காரணமாக ஊனமுற்றோரில் பலர் ஒதுங்கிவாழ்கிறார்கள். உள்ளக்கிளர்ச்சியூட்டி அவர்களைக் குணப்படுத்திவிட முடியும். திரு. லயான் இசை மூலம் பல நன்மைகளைச் செய்யமுடியுமென்று கருதுகிறார்.**

சிகிச்சை முறைகள் பல. அவற்றில் இசை மூலம் சிகிச்சையளிப்பதும் ஒன்று என்கிறார் இசைவாணர் திரு. ஹெர்பர்ட் லயான். இசைச் சிகிச்சை மூலம் முடவனுக்கு நடக்கவும் சக்தியும் ஊமைக்குப் பேசும் ஆற்றலும் வழங்கமுடியும்.

ஊனமுற்றோரில் பலர் தாழ்வுணர்ச்சி காரணமாக ஒதுங்கி வாழ்கிறார்கள். உள்ளக்கிளர்ச்சியூட்டி அவர்களைக் குணப்படுத்திவிடமுடியும்.

லண்டனுக்கு அருகே திரு. லயான் என்பவரும் அவருடைய தொண்டர்களும் சுமார் 60 நோயாளிகளுக்கு சிகிச்சையளித்து வருகிறார்கள். நோயாளிகளில் பலர் குழந்தைகள், சிலர் ஊனமுற்றவர்கள், சிலர் காச நோயாளிகள், சிலர் நரம்புக் கோளாறுகளால் வருந்துவோர், இவர்கள் அனைவரும் பல்வேறு சிகிச்சைமுறைகளைப் பெற்று பலனடையாதவர்கள்,

நோயாளியின் உளப்பாங்கு, குறை, தாபம் முதலியவற்றை ஆராய்ந்த பிறகு ஆற்றலைக் குவிப்பதற்கான முயற்சியைக் கடைப்பிடிக்கவேண்டும். உள்ளம் விழிப்படைந்து விட்டால் நோயைத் தீர்ப்பது எளிது என்கிறார் திரு. லயான். அவருக்கு வெற்றி தேடித்தந்த ஓர் நிகழ்ச்சியைக் குறிப்பிடுவோம். பாரிச வாயுவினால் வருந்தும் ஊமைப்பெண் ஒருத்தி சிகிச்சை தொடங்கிச் சில நாட்களில், தனக்கு வயலின் கற்றுக்கொள்ளும் விருப்பமிருப்பதாக, சைகை மூலம் தெரிவித்தாள். அவளுக்கு கைகளும்வழங்கவில்லை, பாடிக்களிக்க வாயும் இல்லை. ஆயினும் திரு. லயான் அவளுடைய குறிப்பறிந்து பாடத்தைத் தொடங்கினார். ஒரு சில நாட்களுக்குள் அவளுக்கு வில்லைப் பிடிக்கும் திறமை ஏற்பட்டது. அவள் வயலின் மீது வில்லை ஓட்டும்போது, சிலம்பம் விளையாடுவது போல இருந்தது.

திரு. லயான் அவளுக்கு ஊக்கமூட்டினார். மாதங்கள் செல்லச்செல்ல, அவளுடைய உடலில் வியப்புறு முறையில் மாறுதல்கள் ஏற்பட்டன. அவள் வயலினை இசைக்கக்கற்றுக் கொண்டாள். இசை பயிலும் போது அவளுடைய வாய் முணுமுணுத்தது. ஓராண்டுக்குள் கேட்போர் மகிழும் முறையில் வயலினை இசைக்கப் பயிற்சிபெற்றுவிட்டாள்.

ஒருநாள் திரு. லயானும் அவளும் 'வயலின் டுயட்' வாசித்தார்கள். அவளுடைய தொண்டை ஒலிக்கத்தொடங்கிற்று. திரு. லயான் அவளுக்கு முறையாக இசைப்பயிற்சி தர ஏற்பாடுசெய்தார். நாளாவட்டத்தில் அவளுக்கு பேசும்ஆற்றலும் ஏற்பட்டது. அவள் இப்போது பியானோ வாத்தியப் பயிற்சி பெறுகிறாள்.

உறுப்புக்கள் வழங்காமல் தவிக்கும் நோயாளிகளுக்கு தாளவாத்தியங்களைத் தந்து பழக்கவேண்டும் என்கிறார் திரு. லயான். வாத்தியத்தைத் தட்டவேண்டும் என்ற விருப்பம் ஏற்படும்போது நரம்புகள் ஊக்கமடைகின்றன. தொடர்ந்து முயலும்போது வெற்றி கிடைக்கிறது. நமக்கு ஓர் விபத்தில் கிடைத்த அனுபவம் இந்தக் கருத்துக்கு வித்திட்டது என்று திரு. லயான் கூறுகிறார். விபத்தில் சிக்கியபோது அவருடைய கை விரல்களில் இரத்தம் கட்டிக் கொண்டது. சிகிச்சை முடிந்த பிறகும் அவரால் விரல்களை அசைக்கமுடியவில்லை. ஆஸ்பத்திரியிலிருந்த போது, அவர் மற்றநோயாளிகளைக் கூர்ந்து கவனித்தார். தம்முடைய வருத்தத்தை எண்ணிப் பார்த்தார். உள்ளத்தில் உறுதி ஏற்பட்டால் விரலை இயக்கும் நரம்புகளைத்தூண்ட முடியும் என்ற முடிவுக்கு வந்தார். இந்த முடிவு அவரது விரல்களைக் குணப்படுத்தின.

# நடமாடும் கலைமாடம்
## புதுமையான புகைவண்டி

மலைவளம் நிறைந்த கென்டக்கி என்னும் அமெரிக்க மாநிலத்தில் புதுமையான புகையிரத வண்டியொன்று போய்க்கொண்டிருக்கிறது. சின்னஞ்சிறு ஊர்களில் வாழ்பவர்களுக்கும், அரியபெரிய கலைப் பொருள்களை காட்டவேண்டுமென்பதே இதன் நோக்கம். கலைப் பொருள்களை படைக்கும் திறனைக் கற்பிக்கவும் அந்தப் புகையிரத வண்டியில் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். இது போன்ற புகையிரத வண்டியொன்றை இதற்கு முன் எவரும் கண்டதாகத் தெரியவில்லை.

சிவப்பு, வெள்ளை, நீலம் ஆகிய வர்ணங்களில் கண்களைப் பறிக்கும்படி அழகாகத் திட்டப்பட்ட இரண்டு பெரிய பெட்டிகள் உள்ள புகையிரதவண்டி இது. கலை எழிலும், கைத்தொழிலும் ஒருங்கே அமையப் பெற்றதாகும். வர்ண ஓவியங்கள், சிற்பங்கள், மரவேலைப்பாடுகள், உலோக வேலைப்பாடுகள், மட்பாண்டங்கள், கைத்தறித்துணிகள் முதலிய கைவினைப் பொருள்களெல்லாம் ஒரு பெட்டியில் உள்ளன. அதை நடமாடும் கலைமாடம் என்றும் சொல்லலாம். அடுத்த பெட்டியில் கலைப் பயிற்சிக்கும், கைவினைப் பொருள்கள் படைக்க வேண்டிய தளவாடங்கள் இருக்கின்றன. செதுக்கு வேலை, மட்பாண்டம் வனைதல், முதலிய கலைத் தொழில்களுக்கு வேண்டிய மின்விசைக் கருவிகளும், ஒரு தறியும், மட்பாண்டங்களுக்கு நிறம் பூசுவதற்கு வேண்டிய தூசி நுழையாத் தனி அறையொன்று, மட்பாண்டங்களைச் சுட்டெடுக்க ஒரு சூளையும் இப் பெட்டியில் இருக்கின்றன. கலைகளையும், கலைத்தொழிலையும் பற்றிய 600 நூல்கள் உள்ள நூல் நிலையம் ஒன்றும் இப்பெட்டியில் இருக்கிறது. இப்பெட்டியை கைவினை தொழிற்சாலை எனலாம்.

### ஓராண்டு திட்டம்

காட்சியில் வைக்கப்பட்டுள்ள கலைப்பொருள்கள் நாட்டின் பல பாகங்களிலுமுள்ள நூதன சாலைகளிலிருந்து இரவல் பெற்றவை. காலகதியில் காட்சிப் பொருள்களும் மாற்றப்படும். கடந்த ஆண்டு அக்டோபர் மாதத்தில் இப் புதுமை வண்டி புறப்பட்டது. கென்டக்கி மாநிலம் முழுவதும் இது ஓராண்டுவரை சுற்றிவரும்.

"சிறந்த கலைப் படைப்புக்களை விரும்பும் மக்களுக்குக் காட்டவேண்டும்; கைவினைப் பொருள்களைப் படைப்பவர்களுக்கு அவர்கள் திறமையை வளர்க்க வழிகாட்ட வேண்டும்; இத்தொழிலில் புதிதாய் இறங்குபவர்களுக்கு நிபுணர்களைக் கொண்டுவந்து காட்டுவதுடன், இயலுமானால் அவர்களுக்குப் பயிற்சியும் அளிக்க வேண்டும். இதுவே எங்கள் நோக்கம்" என்கிறார் இத் திட்டத்தின் டைரக்டர் ஜோன் டில்லலோ.

### தோன்றிய கதை

புகையிரத இலாகா அதிபர்களும், கென்டக்கி மாநில தலைவர்களும், மாநிலம் முழுவதுமுள்ள தொழில் அதிபர்களும், ஆசிரியர்களும், கைவினைஞர்களும் சேர்ந்து இப் புதுமை வண்டியை உருவாக்கியிருக்கிறார்கள்.

கென்டாக்கி மாநிலத்தில் லூயிவில் என்னும் நகரில் மினிஷ் என்னும் ஒரு வைத்தியர் இருக்கிறார். அவர் மனைவி புகழ் பெற்ற சிற்பி, மட்பாண்ட கலைப் பொருள்கள் படைப்பதில் பெயர் பெற்றவர். கென்டக்கி மாநிலத்துக் கலைஞர் சங்கத்தில் உறுப்பினர். இவர் தமது மாநிலத்தில் கலைத்தொழிலும், கைவினைத் தொழிலும் பரவ வேண்டும் என்று விரும்பினார். இவரது இந்த எண்ணம் தான் புகைவண்டியாக உருவெடுத்தது. இதன் விளைவாக நாட்டுப்புற மக்களுக்கு வருமானம் பெருக வழி பிறக்கும்; பல ஊர்களில் சிறிய தொழில்கள் பெருகும் என்று எதிர்பார்க்கிறார்கள். புகைவண்டியில் ஓராண்டு சுற்றுப் பிரயாணம் முடிவதற்குள் பத்து லட்சம் பேர் இதைக் கண்டு பயனடைந்திருப்பர் என எதிர்பார்க்கப்படுகிறது.

# 'கந்தையாண்ணே'

(3ம் பக்கத் தொடர்ச்சி)

நானும் பிள்ளையளை வைச்சிருக்கிறவன். பாவம் ... பழியெல்லே...?"

கதவிற்குப் பின்னால் நின்று கேட்டுக் கொண்டிருந்தவளுக்கு மனதை என்னவோ செய்தது; அங்கு பிச்சைக்கு வருகிற ஒருவன், திக்கித்திக்கி, "அ... அ... அம்மா! பி... பி... பிச்சை!" என்று கேட்பது நினைவுவந்தது; துக்கம் தொண்டையை அடைத்தது.

தரகரும் பொன்னம்மாவும் பேசி ஒரு முடிவிற்கு வந்தார்கள்; சொத்துள்ள பணக்கார மாப்பிள்ளையை இழக்கப் பொன்னம்மா என்ன பைத்தியமா? கந்தையாண்ணை விடைபெற்றுச்சென்றார், விஷயத்தை ஒப்பேற்றிவிட்டேன் என்ற மகிழ்வோடு.

பொன்னம்மாவின் மூத்த மகள் எவ்வளவோ பிடிவாதமாக மறுத்தும், தாய் கேட்கவில்லை.

"மாடுபோல வளர்ந்திருக்கிறாய்? ... வயது இருபத்தாறுவாற தையோடே முடியுது! வந்த மாப்பிள்ளையைக் கொன்னை என்டதற்காகக் கலியாணம் செய்ய மறுக்கிறாயே? . . . நீ அவனைக் கலியாணம் செய்தால் தங்கச்சிமாருக்குதவ முடியுமடி . . .!"

கலியாணமும் வெகுவிரைவில் நடந்துமுடிந்தது; கலியாணம் முடிந்த கையோடு, தாலி பெண்ணின் கழுத்தில் ஏறினதுமே தனது சைக்கிளை எடுத்துக் கொண்டு கந்தையாண்ணை புறப்பட்டு விட்டார்; மாப்பிள்ளை வீட்டார் கொடுத்த ஆயிரமும், பெண் வீட்டார் கொடுத்த ஐந்நூறும் மடியில் கனத்தன.

அவர் வாழ்க்கையில் எந்த மாப்பிள்ளை வீட்டாரும் இவ்வளவு தரகுப்பணம் கொடுத்ததில்லை; ஆனால் இந்த மாப்பிள்ளை வீட்டார் ஆயிரத்தை அள்ளிக்கொடுத்தனர், பின்னே சும்மாவா . . .?

'இவனுக்கு யார் பெண் கொடுப்பார்கள் . . .?'

'ஊமையைக் கொன்னையென்று கூறிக் கலியாணம் செய்துவைக்க வேறுயாராலே முடியும் . . .?'

மடியிலே கனத்த பணம் பாவப்பணமாகக் கந்தையாண்ணைக்குக் கனக்கவில்லை. படலையைத் தள்ளித்திறந்துகொண்டு மகிழ்ச்சியோடு உள்ளே வந்தவர், திகைத்துப்போய் நின்றார்; மூலையிலே தலையில் கை வைத்தபடி அவருடையமனைவி ஒப்பாரி வைத்துக்கொண்டிருந்தாள்.

"என்னத்துக்கு ஒப்பாரி வைக்கிறாய் . . .?"

அவருடைய தர்மபத்தினி ஒரு கடிதத்தை எடுத்து நீட்டினாள்; கடிதத்தைப் படித்தார் தரகர்; கண்கள் இருள்வது போல இருந்தது; சுவரைப் பிடித்துக் கொண்டார்; அவரைப் பார்த்து அவர் மடியில் இருந்ததரகுப்பணம்எக்காளி கொட்டிச் சிரித்தது.

'நல்ல சாதிசனத்திலே, அழகான பெண்ணைப் பார்த்து, குணம் குறியோடு, நல்ல கொழுத்த சீதனத்தோடு- யாருக்குப் பெண்ணெடுக்கக் காத்திருந்தாரோ, அவருடைய அந்த இரண்டாவது புத்திர பாக்கியம் யாரையோ கலியாணம் செய்து கொண்டானாம். அவன் கலியாணம் செய்த பெண் - ஓர் ஊமை.

கந்தையாண்ணையின் இதயம் ஊமைக்கண்ணீர் வடித்தது.

(யாவும் கற்பனை)

தெய்வ வழிபாட்டிற்கும்
உங்கள் இல்லங்களில் நறுமணம் கமழ்வதற்கு
33
303 ஊதுபத்திகளை
3003
உபயோகியுங்கள்.
யாழ்ப்பாணத்தில் ஸ்டாக்கிஸ்டுகள் தேவை.
தயாரிப்பவர்கள்:
எஸ். வி. முருகேசன் அன் சன்ஸ்,
பெங்களூர்-2.
சோல் ஏஜன்டுகள்:
ஜெகஜோதி அன் கோ.
குருநேகலை.

# வகுப்பில் ஒரு குறும்புக்காரன்

(9-ம் பக்கத் தொடர்ச்சி)

கணித பாட ஆசிரியர் ஆகி இருந்தார். அவர் பிறவியிலேயே ஆசிரியனுக்குரிய அம்சங்கள் அத்தனையும் உடையவர் என்றுதான் சொல்லவேண்டும். அன்று சில கணக்குகளை வகுப்பில் கரும் பலகை மீது விளங்கப்படுத்தினர். அதன் பின்சிலஉதாரணங்களைத் தந்து வகுப்பிலேயே செய்து காட்டும்படி சொன்னர். கணக்குச் செய்து முடிந்தவுடன் எழுந்து நிற்கும்படி மாணவர்களுக்குச் சொன்னர். நான் முதலாவதாக எழுந்து நின்றேன். உபாத்தியாயர் நான் நின்ற இடத்திற்கு வந்தார், நான் ஒரு புதுப்பையன், எனது செய்கை முறையைப் பார்த்தார், சரியெனக் குறித்தார். பின்னர், ஒவ்வொரு பையனும் எழுந்து நிற்கும்போது ஒழுங்காக அவர்களின் செய்லக முறையைப் பார்த்துச் சரி பிழை கொடுத்தார். அந்தக் கணக்கைச் சரியாகச் செய்ய முடியாத மாணவர்கள் பலர் வகுப்பிலிருந்தனர். அவர்களுக்கு விளங்கப்படுத்த கரும் பலகையில் செய்து காட்டினர். இரண்டாவது கணக்குத் தரப்பட்டது. அதையும் நான் முதலாவதாகச் செய்துகொண்டு சுறுசுறுப்புடன் எழுந்து நின்றேன். ஆசிரியர் அதையும் சரியெனக்குறித்த பின்னர் என்னை ஊன்றிக் கவனமாகப் பார்த்தார். நான் மற்றெல்லாப் பிள்ளைகளிலும் பார்க்க அதிக விரைவாகச் செய்துவிட்டேன். மூன்ருவது கணக்குந் தரப்பட்டது. நானே முதலாவதாக எழுந்துநின்றேன். அவர் அதையும் சரியெனக்குறித்தார். பின்னர், நான் எந்தப் பள்ளிக்கூடத்தில் படித்தவன் என்றும் அந்தக் கணக்குகள் முன்னரே எனக்குப் படிப்பிக்கப்பட்டனவா என்றும் என்னைக் கேட்டார். அவர் கேள்விகளுக்கு நான் பதில் கூறினேன். நான் பதில் கூறி முடிந்தது முடிய முன்னர் அவர் தொடர்ந்து பின் வருமாறு சொல்லி முடித்தார். "ஆ, "பாய்", உமக்குக் கணக்குச் செய்யத்தான் தெரியும்; ஆனல் பழக்க வழக்கங்கள் ஒன்றும் தெரியாது" ("போய்" என்னும் ஆங்கிலச் சொல்லை "பாய்" என்றுதான் அவர் உச்சரிப்பது வழக்கமாகும்—"ஆ,பாய்" என்ருல் "ஓம், தம்பி" என்று கடும்படி விகடமாய் சொல்லல்) அவர் அப்படிச் சொன்னதைக் கேட்டு நான் ஏக்கமடைந்தேன். வகுப்பு முடிந்ததும், எனக்குப் பக்கத்திலிருந்த வகுப்பு நண்பரிடம் உபாத்தியாயர் அப்படிச் சொன்னதின் அர்த்தம் என்னவென்று விசாரித்தேன். என்னைப்போல் அல்லாது அவர் ஒரு பழைய மாணவர் ஆனபடியால் உடனே காரணத்தைச் சொன்னர். நான் எனது உபாத்தியாயரை "சேர்" சொல்லத் தவறியது தான் அவருக்கு மனப்புழுக்க மேற்படக் காரணமென்ருர். அதன் பிறகுதான், நல்ல பழக்க வழக்கங்களுக்குரிய பல அம்சங்களில், தன்னிலும் மேல் பதவியில் இருப்பவரையும், தனக்கு முதல்வராய் இருப்பவரையும் "சேர்" என்று கனம்பண்ணி மதிப்பாகப் பேசிப் பழகவேண்டியது மிகவும் முக்கியமானதோர் செய்கையாகும் என்ற உணர்வு எனக்கு ஏற்பட்டது. இந்த அரியதோர் பாடத்தை நான் உள்ளத்தில் பதித்து நடைமுறையில் அன்று தொட்டுக் கடைப்பிடித்தொழுகலானேன். எனது வாழ்நாள் முழுவதும் அனுசரித்து வருகிறேன்.

கணித பாடத்தில் எனக்கு இயல்பான விருப்பமும், பிறவி வல்லமையும் இருந்தது. லத்தீன்மொழி, பிரெஞ்சு மொழி, சரித்திரம், பூமிசாஸ்திரம் ஆகிய பாடங்களைப் படிப்பதில் நான் மிகவும் பிரயாசம் எடுத்தேன். இதனல் வகுப்பில் எனது போட்டி நண்பர்களையெல்லாம் நான் வென்றுவிட முடிந்தது. எனது பிரதான எதிரியாகப் போட்டி போட்டுப் படித்தவரில் ஒருவர் கத்தோலிக்க சுவாமிச் சீஷர்மார் இல்லத்தைச் சேர்ந்தவராக இருந்தார். அவர் 'ஆட்ஸ்' பாடங்களைப் பயின்றவோர் 'செமினறிஸ்ற்' மாணவன் ஆவார். லத்தீன், கிரேக்கம் ஆகிய பாடங்களில் விசேட கவனமெடுத்துப் படித்தார். இந்தப் பாடங்களை எவ்வளவு கடுமையாகப் படித்தும் சோதனையில் எத்துணைத் திறமையாகப் பதில் எழுதியும் நூற்றுக்கு நூறு வீதம் புள்ளிகள் எடுப்பது என்பது முடியாத காரியம். ஆனல் நான் பாடீகணிதம், அக்ஷரகணிதம், கேத்திரகணிதம் ஆகியமூன்று வித கணித பாடங்களிலும், ஒரு சில சந்தர்ப்பங்களில் தவிர, அநேகமாக நூற்றுக்கு நூறு வீதம் புள்ளிகள் எடுக்கத் தவறியதில்லை. நான் சென் ஜோசெப்ஸ் கல்லூரியில் படித்த நாள்வரை அலோசியஸ் பர்ணந்து என்பாரை (அதுவே அவரின் பெயராகும்) வகுப்பிலே முந்திவிடுவது வழக்கம். ஒவ்வொரு வகுப்பிலும் வருடாந்த பொதுத் திறமைப் பரிசு முதலாவது பிள்ளைக்கே கொடுப்பது வழக்கம். அலோசியஸ் பர்ணந்து 'இரண்டாம் இடம் மட்டுமே' தனது திறமைக்குக் கிடைத்த பரிசு என்று திருப்தியடைந்திருக்க வேண்டியதுதான். அவர் பின்னர் படித்துயர்ந்து பயபக்தி மிக்கவோர் கத்தோலிக்க சுவாமியானர். கொழும்பு வண. அதிமேற்றிராணியார் (ஆர்ச் பிஷப்) ஆக நியமிப்பதற்குத் தெரிவு செய்யப்பட்டிருந்த முதலாவது இலங்கையரும், இலங்கைக் கத்தோலிக்க சுவாமியும் இவரே ஆவர். பாவம்! அதிமேற்றிராணியாராக அவரை அங்கீகாரம் பண்ணி பிரதிஷ்டை செய்து பொறுப்பினை ஒப்படைக்கு முன்னர் அன்னரைக் காலன் கவர்ந்து சென்றுவிட்டான்!! மிகுந்த கவலைக்குரியவோர் காரியம் ஆகும். எத்துணைப் பெருங்குணநிறைவும், அன்புக்குரிய நண்பனும், போட்டா போட்டிக்குகந்த வகுப்பு எதிரியுமாக அவர் இருந்தார்என்பதை எனது உள்ளம் உணருகிறதே அன்றி சொல்லால் வர்ணிக்க முடியவில்லை. 'இறைவனல் நேசிக்கப்படுவோர் இளமையில் இறந்து விடுகின்றனர்'.

கிழமைப் புள்ளி விபரத்தில் மட்டுமன்றி தவணைப்பரீட்சையிலும் நான் முதலாவதாகவே வருவேன். காரணம், கணிதப் பாடங்களில் நான் நூற்றுக்கு நூறு வீதமான புள்ளிகள் எடுப்பதனலாகும். சென் ஜோசெப்ஸ் கல்லூரியின் அதிபர் அதி-வண-பிதா றெக்டர் அவர்கள் ஒவ்வொரு வகுப்பாகச் செல்வார். வகுப்பில் ஒரு கதிரையில் அமர்ந்து கொண்டு ஆசிரியரையும், பிள்ளைகளையும், படிப்பித்தல் முறைகளையும், கவனமாக அவதானிப்பார். அந்தப் பாடம் முடிய வகுப்பறையை விட்டு ஒரு பேச்சு மூச்சுமின்றி எழுந்து போய் விடுவார். இவ்வண்ணம் கிரமமாகச் செய்து வந்தார். அவர் ஒரு பிரெஞ்சுக் கத்தோலிக்க சுவாமிஆவார். அதிவண .பிதா கொலின்ஸ் என்பது அவருடைய பெயர். நான் பின்னர் அறிந்து கொண்டதின் படி, அவர் வகுப்பைவிட்டுச் சென்றதும், கடமையெனக் கருதி, குறிப்பிட்ட வகுப்பு ஆசிரியரைத் தனது அலுவலகத்திற்கு அழைத்து, அவரைப் பற்றியும், மாணவர்களைப்பற்றியும், படிப்பித்தல் முறை பற்றியும் தான் அவதானித்த நிறை குறைகளைத் தனிப்பட எடுத்து ஓதுவார் என்பது உண்மையாகும்.

முதல் வருடத்து மூன்ரும் தவணையின்போது ஒரு நாள் கல்லூரிஅதிபர்-றெக்டர் அவர்கள், என்னை ஆள்விட்டுக் கூப்பிடுவித்தார். எனக்கு உயர்தர கணித சாஸ்திரம் (அட்வான்ஸ்ட் மதெமெற்றிக்ஸ்) கற்பதில் விருப்பமுண்டா என்று அவர் கேட்டார். அத்துடன் திரிகோண கணித சாஸ்திரம் (ட்றிகெனேமெற்றி) படிப்பதில் அக்கறையுண்டா என்றும் விசாரித்தார். அந்தப் பாடம் அந்நாட்களில் அந்த வகுப்பில் அங்கு படிப்பிப்பதில்லை. எனக்கு அப்பாடங்கள் படிப்பதில் மிகவும்விருப்பமுண்டென்று தெரிவித்தேன். ஒரு இந்தியன் ஆசிரியரை அப்பாடங்களில் எனக்குத் தனிப்பட்ட முறையில் கற்பிக்கும்படி றெக்டர் அவர்கள் ஒழுங்கு செய்தார். அந்த இந்தியன் ஆசிரியர் மேல் வகுப்புகளுக்குப் பாடம் எடுத்தவர். சென்னையிலுள்ள ஒரு சர்வகலாசாலையில் படித்துப் பட்டதாரியானவர். அவர் வீட்டிலேயே பாடம் சொல்லித் தரும் ஒழுங்குகள் செய்யப்பட்டன. அதற்குரிய படிப்பித்தல் சம்பளம் நான் கொடுக்கவில்லை. கல்லூரிக் கணக்காலேயே கொடுக்க றெக்டர் சுவாமியார் ஒழுங்குகள் செய்தார். பாருங்கள்! நான் ஒரு தமிழ்ப்பிள்ளை. அதுவும் சைவ சமயப்பிள்ளை. எங்கள் கல்லூரி றெக்டர் பிரெஞ்சு தேசத்தவர்; கத்தோலிக்க சுவாமியார். எனக்கு எனது திறமையை அபிவிருத்திசெய்து படித்து முன்னேறவும், சோதனைகளில் சித்தியெய்தவும் ஏற்ற சகல வசதிகளையும் செய்து தந்து, உதவுவதற்கு, எதுவித விண்ணப்பமும், வேண்டுகோளுமின்றி வலிவே முன்வந்தார் அவர். என்னுடைய கல்வித்திறமையை வளர்த்தார், எனக்கு ஆக்கமும், ஊக்கமும் தந்து என்னை முன்னேறச் செய்தார். பிரதிபலன் கருதாத பெருநோக்கும், சேவையுள்ளமும் நிறைந்த பெரியார் அந்தக் கத்தோலிக்க சுவாமி றெக்டர் ஆவார். பள்ளிக்கூடத்திற்கு பெயரையும், புகழையும், பெற்றுக் கொடுக்கக் கூடிய விவேகம் நிறைந்த மாணவனுகவே என்னைக் கருதினர். அதாவது, ஆட்ஸ் அல்லது சயன்ஸ் பாடங்களில் திறம்படச் செய்யும் மாணவனுக்கு, அரசாங்க சர்வகலாசாலை ஸ்கொலர்ஷிப் பரிசினை பெறுவதென்ருல், அத்தகமை, இலங்கையில் ஒரு இலங்கை மாணவன் பெறும் அதியுயர்ந்த கீர்த்தியாகும். இது வருடா வருடம் கொடுக்கப்படும் கல்வித் திறமைப் பரிசாகும். இப்போது அப்படியான முறையொன்றும் இல்லை.

சென் ஜோசெப்ஸ் கல்லூரியில் ஒரு வருடம் படித்த பின்னர் 'மொன்சிஞ்ஞோர் மாவர் ஸ்கொலஷிப்' எனக்களிக்கப்பட்டது. இந்த ஸ்கொலஷிப்பினல் அந்நாட்களில் கல்லூரிக்குக் கட்டிப்படிக்க வேண்டியிருந்த பணம் செலுத்தும் நிலையிலிருந்து நான் விடுவிக்கப்பட்டேன். அதி வண. பிதா. கொலின்ஸ் அவர்களே தான் சென் ஜோசெப்ஸ்கல்லூரியின் ஆரம்பத்திலேயே றெக்டராக வந்தவர் ஆவர். சென் ஜோசெப்ஸ் கல்லூரி நான் பிறந்த வருடத்திலேயே ஆரம்பமானது என்பதையும் இங்கு குறிப்பிட ஆசைப்படுகிறேன். அவர் இறந்து போக அந்த இடத்திற்கு றெக்டராக வந்தவர் அதி வண. பிதா. விட்டன் என்னும் அயர்லாந்து நாட்டவர் ஆவர். அவருடைய ஒரு வழக்கமான செய்கை இன்றும் என் மனப் படத்தில் நன்ருகப் பதிந்து கிடக்கிறது. சென் ஜோசெப்ஸ் உதைபந்தாட்டப் பிரிவினர் வேறு பள்ளிக்கூடங்களின் கோஷ்டியினரோடு போட்டியாக விளையாடும் சமயம். பந்தடிக்கும் தரவையின் எல்லைக்கோட்டோரம் அங்குமிங்கும் ஓடியவண்ணம் காணப்படுவார். வேகமாகப் பந்தடித்துக் கொண்டிருக்கும் நேரம் எங்களின் கோஷ்டியினர் ஊன்றி நல்லதோர் 'வாய்ப்பான உதை' பந்துக்கடித்துவிட்டால், அவ்வளவும் றெக்டருக்குப் போதுமானது. தன்னையே மறந்துவிடுவார். அங்கே அதி. வண. பிதா. விட்டன் அவர்கள் எந்த இடத்தில் நின்ரேடினரோ, அருகில் நின்று பார்த்து மகிழ்ந்து கொண்டிருக்கும் 'இரசிகருக்கு உறைப்பானவோர் 'உதை' கொடுத்தே விடுவார். உடனே, மன்னிக்கவும்', 'மிகவும் வருந்துகிறேன்' என்று அநேகம் முறை இதயபூர்வமான பொறுதி விண்ணப்பங்களை உதைவாங்கி விறுவிறுப்படைந்தவருக்குத் தெரிவித்து நின்று இரங்குவார்.

பார்த்தனுபவிக்க மிகவும் சுவையான கட்டம். வயிறு குலுங்கச் சிரித்துப் பக்கத்தே நிற்கும் ஏனையோர் கண்டு மகிழ, உதை வாங்கினவர் உபத்திரவப் பட்டும் மகிழ, உதைபந்தாட்டக் கோஷ்டியினர் உற்சாகமிகுதியினல் ஊக்கத்துடன் மகிழவைப்பதே அவரின் தன்னை மறந்த செய்கையாக இருந்தது. அதி வண பிதா. விட்டன் அவர்கள் மாறிப்போக, அதிவண. பிதா நிக்கொலா என்பவர் அவ்விடத்திற்கு வந்தார். இருவரும் பிரான்ஸ் நாட்டவராவர். அவர் எனக்கு விஞ்ஞான பாடங்களைக் கற்பித்துக் கொடுத்தார். என்னிலே அவருக்கு மிகவும் விருப்பம்.

நான் வகுப்பிலே பிரசித்தி பெற்ற ஒரு குறும்புக்காரனும், பொறுக்க முடியாத குழப்படிக்காரனுமாக இருந்தேன். எங்களுக்கு மேல் வகுப்புகளில் கணித சாஸ்திரபாடம் எடுத்தவர் சைமன் ரெட்றிக்கோ என்பவராவர். அவர் பின்னர் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் கோர்ட்டு நீதிபதியாக இருந்தவர். அன்ெருரு நாள் வகுப்பில் ஒரு உதாரணத்தை விளங்கப் படுத்தினர் அதாவது: உயர்வு நிலைக் கோணங்கள் (அங்கிள்ஸ் ஒவ் எலிவேஷன்), பதிவுநிலைக் கோணங்கள் (அங்கிள்ஸ் ஒவ் டிப்பிறெஷன்) என்னும், கணித சாஸ்திரததிலுள்ள ஒரு அம்சம் பற்றியே விளங்கபபடுத்தினர். எனக்குத்தெரிந்தமட்டில் எங்கள் உபாத்தியாயர் அந்த கணித சாஸ்திர அம்சத்தை விளக்கும் மாதிரியும், அதற்கு அவர் எடுத்தாண்ட மேற்கோள் உதாரணங்களும், அவ்வளவு சிறப்பானதாகவோ மனதிற்பதியும் தன்மையுடையனவாகவோ இருக்கவில்லை. அதைப் பொறுதியுடன் சற்றுக் கிரகித்துக் கொண்டு இருந்து விட்டு, ஒருதுண்டுக் கடதாசியை எடுத்து அதில் பின்வருமாறு எழுதினேன்:—

"அன்னெஸ்லி என்பார் சந்தியாப் பிள்ளையைப் பார்த்தால், ன்னெஸ்லியின் மேல் பார்வையின் போது அவருடைய கண்விழிகள் அடிவானத்திற்கு மேற்பட்டு உயர்ந்து சென்று பார்க்கும் அங்கே அன்னெஸ்லியின் பார்வை உயர்வு நிலைக்கோணத்தை உண்டாக்குவதாகும். சந்தியாப்பிள்ளை என்பார் அன்னெஸ்லியைப் பார்த்தால் சந்தியாப்பிள்ளையின் கீழ்ப் பார்வையின் போது அவருடைய கண்விழிகள் அடிவான மட்டத்திற்கு கீழ்ப்பட்டு பதிந்து சென்று பார்க்கும். அங்கே சந்தியாப்பிள்ளையின் பர்வை பதிவு நிலைக்கோணத்தை உண்டாக்குவதாகும்" ஏனென்ருல் அன்னெஸ்லி எங்கள் வகுப்பில் மிகவும் பதிவான கட்டைப் பையன். சந்தியாப்பிள்ளை மிகவும் உயரமான நெட்டைப் பையன். அதாவது அன்னெஸ்லியிலும் ஏறக்குறையஒன்றரை மடங்கு அதிகமான உயரமுடையவர் தான் சந்தியாப்பிள்ளை ஆவர். அன்னெஸ்லி டீ சில்வா பின்னர் அரசாங்க றேிஸ்ட் இலாக்கா அதாவது உல்லாசப் பிரயாணப்பகுதி அதிபராகக் கடமையாற்றினர். சந்தியாப்பிள்ளை பின்னர், யாழ்ப்பாணம் தீவுப்பற்றுப் பகுதிக்கு மணியகாரனுகக் கடமையாற்றியவர்.

இந்தக் குறிப்பெழுதியதுண்டுக் கடதாசியை இரகசியமாக அங்கிருந்த எனது நண்பனிடம் கொடுத்தேன். அவர் அடுத்தவரிடம் கொடுக்க, இப்படியாக அந்தத்துண்டு வகுப்பு முழுவதும் மாணவ நண்பர்களிடையே சுற்றியனுப்பப்பட்டது. ஒவ்வொருவரும் "கிளு கிளு" வென்று உள்ளூறச் சிரித்துக் கொண்டனர். வகுப்பில் இந்த எக்களிப்பான நிலை ஏற்பட்டதைக் கண்டறிந்து மனக்குழப்படைந்த உபாத்தியார் சைமன் ரெட்றிகோ, வகுப்பில் குதூகல குழப்பமேற்படுத்திய இக்குறிப்புத் துண்டைக் கைப்பற்றிக் கொண்டார். ஆத்திரம் மிகுந்த குரலில்: "யார் இந்தக் குறிப்பைஎழுதியவர்" என்ருர். "அதை எழுதியவன் நான் தான்" என்று உடனே எழும்பினேன். "ஏறுவாங்கின்மேல்" என்று உரத்த குரலில் உறுக்கினர். உறுதியுடன் ஏறிநின்று கொண்டேன். நான் தான் வகுப்பில் முதலாவது பையன் என்பதை அவரும் கவனிக்கவில்லை. அன்றி நானும் கவனிக்கவில்லை.

நானும் "விட்டுக்கொடுக்கப்படாது" உடனே தீர்மானம் செய்தேன். அன்றைய தினம் தொடக்கம் ஒவ்வொருநாளும் எங்கள் ஆசிரியர் சைமன் ரெட்றிகோ என்பார் வகுப்புக்கு வரும்போது நான் காத்திருந்து ஒரு கிண்டலான, கோபம் வரக்கூடிய கேலிக்கதை ஒன்றைச்சொல்லி, எல்லா மாணவர்களையும் கலகலவென்று சிரிக்கவைத்துவிடுவேன். கேலிச்சிரிப்பு வரவேற்பால் சினம் கொண்ட ஆசிரியர் "ஏறு வாங்கின் மேல்" என்று எனக்கு உத்தரவிடுவார். நானும் அச்சமும், கூச்சமும் இன்றி ஏறிநின்றுகொள்வேன்.

இது இவ்வாருக, அதிவண. பிதா. நிக்கோலா அவர்கள் வழக்கமாக ஒவ்வொருநாளும் வகுப்பறை விருந்தை வழியாக வகுப்பு நேரங்களின் போது சுற்றிவந்து கொண்டிருப்பார். இதனல், பள்ளிக் கூடத்தில் ஒழுங்கும், ஒழுக்கமும் நிர்வாகமும் சீர்கெட்டுப் போகாமல் கண்காணிப்பதோடு, பல்வேறு வகுப்புகளிலும் படிப்புமுறைகள் துரிதமாகவும், சிரமமாகவும் நடக்கின்றனவா என்பதையும் அவதானித்து அதற்காக வேண்டியனவற்றை அவ்வப்போது செய்து சீர்ப்படுத்துவதே அவரின் நோக்கமாகும். முதல் நாளன்று நான் வாங்கின் மீது நின்றுகொண்டிருப்பதை அவர் கவனித்துக் கொண்டு தன்பாட்டில் சென்றுவிட்டார். மறுநாளும் உலாவி வரும்போது நான் அவ்வண்ணமே நின்றுகொண்டிருந்தேன். அதை வேடிக்கையாகப் பார்த்துக்கொண்டு யாதும் விளம்பாது சென்றுவிட்டார். மூன்ருவது நாள் சுற்றி வந்தார். நானும் வாங்கின்மீது நின்றுகொண்டிருந்தேன். அவர் என்னைப் பார்த்து ஒரு புன்சிரிப்பு சிரித்தார். நானும் அதற்குப் பதில் மரியாதையுடன் புன்சிரிப்புச் சிரித்தேன். சைமன் ரெட்றிகோ இந்த நிகழ்ச்சியைக்கண்டுகொண்டார். அதாவது, கல்லூரி அதிபர், றெக்டர் - வகுப்பிவ சொல்வழி கேளாத ஒரு குழப்படிகாரப் பிள்ளையைப் பார்தது அன்புடன் புன் சிரிப்புச் செய்வதைக் கண்டார். இந்தச் சுவையான சம்பவம் உடனே பள்ளிக்கூடம் முழுவதும் பரவிவிட்டது. அன்றையிலிருந்து எனது சிறு கேலிகளையெல்லாம் பொருட்படுத்தக் கூடாது என்று உபாத்தியார் முடிவு செய்துவிட்டார் ஆனல் கணித சாஸ்திர பாடத்தில் எனக்குத்

(11ம் பக்கம் பார்க்க)

# சிறுவர் பூங்கா

## கவிச்சக்கரவர்த்தி கம்பர்

— சி. சீவரத்தினம் —

ஆங்கிலமொழியிலுள்ள ஷேக்ஸ்பியர் நூலும், மில்டனுரது நூலும் உலகத்திலே சிறந்த இலக்கிய நூல்களாகக் கருதப்படுவதுபோல தமிழிலேயுள்ள இலக்கியங்களான கம்பராமாயணமும், திருக்குறளும் விளங்குகின்றன. ஆகவே கம்பராமாயணம் உலகத்துப் பிரபல மொழிகளில் உள்ள மிகச் சிறந்த காவியங்களுள் ஒன்ருகும். இதனை இயற்றியவரே கவிச்சக்கரவர்த்தி கம்பராவர்.

கம்பர் சோழநாட்டின் திருவழுந்தூரில் அவதரித்தார். உவச்சர் குலத்தைச் சேர்ந்தவர். வைணவமதத்தவர். இவரின் பெற்ருேர் சிறு வயதிலேயே மறைந்துவிட இவர் சடையப்ப வள்ளலின் ஆதரவு பெற்று கல்விகற்றும், உண்டிபெற்றும் வளர்ந்தவர். தாமியற்றிய இராமாயணத்தில் சில கவிகளில் அவரின் பெயரைச் சிறப்பித்திருக்கின்ருர். கலைமகள் வரத்தால் கவித்துவம் வரப்பெற்றவர். பல கவிகள் பாடியவர். கவிக்குரிய மொழி நயங்களும், தொடை, இசை நயங்களும் இனிதுணர்ந்தவர் இவருடைய கல்விப்பெருமையை நோக்கியன்ருே 'கல்வியிற் பெரியவர் கம்பர்' என்றும்; 'கம்பன் வீட்டுக் 'கட்டுத்தறியும் பாடும்' என்றும்; 'கவிச்சக்கரவர்த்தி' என்றும் சிறப்பித்துக் கூறியிருக்கின்றனர்.

கம்பர் என்பதற்குக் கம்பநாடுடையவரென்றும், கம்பங்கொல்லைக் காவலரென்றும், கம்பு ஒன்று கையில் வைத்திருந்தவர் என்றும் பலவாறு கூறுவர் வான்மீகர் வடமொழியில் இராமாயணத்தை 24000 சுலோகங்களாக இயற்றினர். அதனைக் கம்பர் தமிழில் 12000 விருத்தப்பாக்களில் அடக்கியுள்ளார். ஆயினும் சுலோகங்களின் குறுமையையும் விருத்தங்களின் நெடுமையையும் நோக்கில் கம்பராமாயணமே அளவில் பெரிதாம்.

கம்பர் அகளங்க சோழனுடைய அவைக்களப் புலவராக இருந்தவர். அகளங்க சோழனும், சடையப்ப வள்ளலும் வேண்டிக்கொண்டதற்கிணங்க, அவர் இராமாயணத்தைப்பாடினர். வால்மீகி இராமாயணத்தை இரவில் வடமொழிப் புலவர்களைக்கொண்டு அச்சரிதையை ஆராய்வுடன் கேட்டு, பகலில் ஒரு நாளைக்கு எழுநூறு பாடல் வீதம் பாடியருளினர்.

கம்பர் பாடிய கவிகள் சொல், பொருள், அளி ஆகிய இச்சிறப்புக்கள் ஒருங்கே அமையப் பெற்றன. இக்கவிகளைக் கற்குந்தோறும் பெருமகிழ்ச்சியடையலாம். "இராமன் திருக்கதையில் கம்பநாடன் கவிதையிற் போல் கற்ருேர்க்கிதயம் களியாதே" என ஒரு அறிஞர் கூறிய கவி இதனைச் சிறப்பை உறுதிப்படுத்துவதாயிருக்கின்றது. கற்ருேரும் மற்ருேரும் எளிதில் கற்றுணரும் வண்ணம் கதையின் போக்கு அமையப் பெற்றது மிக்க சிறப்புடைத்தாம். இக்கவிகளில் இன்பம், வீரம், சோகம் முதலிய சுவைகள் செறியப் பெற்றுள்ளன. சில கவிகளில் உலகியல் நெறி முதலியவைகளையுங் காட்டுவர். இதன் உண்மையை உணராது மாருன கருத்துக்கொள்பவரும் உளர்.

இவர் இயற்றிய இராமாயணத்தில் உலக மக்கள் பெற்ருேரின் சொல்லைக் கடவாது நடந்துவரவேண்டிய தருமத்தினையும், சகோதரபாசத்தினையும், அடைக்கலம் பூண்டாரை ஆதரிப்பதே நோன்பாகக் கொண்ட விசேடதருமத்தினையும், தம்முடைய ஒழுக்கத்தால் வெளிப்படுத்திக் காட்டினர். அன்றியும் மூத்தோர் சொல் வார்த்தை அமிழ்தம் என்பதற்கிணங்க எத்துணை சிறப்புடைத்தோராயினும் பெரியோர்களிடத்துப் பணிவுடன் ஒழுகவேண்டுமென்பதும், பெரியோர் கட்டளையை ஆராய்ச்சியில்லாமலே செய்யவேண்டுமென்பதும், தீயொழுக்கம் தீமையைத்தரும் என்பதும், செருக்குக்கொண்டவர் தாழ்வடைவர் என்பதும், தான் மேற்கொண்ட நோன்பை எக்காரணத்திலும் கைவிடலாகாதென்பதும், தன்னலங்கருதாது பிறர் குறை நீக்குதலே பெரியோர்தன்மையென்பதும், ஒருவர்க்கொருவர் நன்மை செய்தால் பின்பு அது தானே பயனைத் தருமென்பதும், நன்னெறியிற் செல்வோர்க்கு விலங்கும் பணிசெய்யும் என்பதும், அடைக்கலமடைந்தோர்க்கு ஆவன செய்தல் அறிஞர் கடன் என்பதும் போன்ற நீதிகளும் நிலவக் காணலாம்.

கம்பர் இராமபிரானிடத்துள்ள அன்பின் மிகுதியால் தாம் இயற்றிய நூலை அரசசபையில் அரங்கேற்ருது பக்தி வெள்ளம் குடிகொண்ட நெஞ்சத்தவர் பலர்கூடியுள்ள ஸ்ரீரங்கத்தில் அரங்கேற்றஞ் செய்தருளினர்.

கம்பருக்கு அம்பிகாபதி என்ஞெரு புத்திரன் பிறந்து அவனும் சிறந்த வித்துவானுகி இவரோடு இராச சபைக்குச் சென்று பெருமை பெற்றனன் என்பர். இவரியற்றிய பிறநூல்கள் சடகோபரந்தாதி, ஏரெழுபது, சிலையெழுபது, திருக்கை வழக்கம், சரசுவதியந்தாதி என்பனவாம்.

இவர் காலத்து வித்துவான்கள், புகழேந்திப்புலவர், ஒட்டக் கூத்தர், ஒளவையார் ஆகியோராவர்.

கம்பர் இயற்றிய இராமாயணம் பாலகாண்டம், அயோத்தியா காண்டம், ஆரணிய காண்டம், கிட்கிந்தாகாண்டம், சுந்தரகாண்டம், யுத்த காண்டம், உத்தர காண்டம் என ஏழு காண்டங்களாக வகுக்கப்பட்டிருக்கின்றன.

### இத்தால் சகலரும் அறிய.....

ஆசிரியர்: மணி, இரண்டாம் கணக்கின் விடை என்ன?

மணி: பதின் மூன்று சேர்.

ஆசிரியர்: கெட்டிக்காரன். அந்த விடை எப்படி வந்தது? எழுந்து நின்று சொல். எல்லோரும் அறியட்டும்.

மணி: செல்வத்தின் கொப்பியிலிருந்து, சேர்.

அனுப்பியவர்: பாலன், யாழ்ப்பாணம்.

## ஈழப்பாட்டனின் கடிதங்கள்

(10-ம் பக்கத் தொடர்ச்சி)

தர வேண்டிய ஆகக் கூடிய புள்ளிகளைத் தருவதற்கு அவர் ஒருபோதும் தவறியது கிடையாது. உரிய புள்ளிகளை மனப்பூர்வமாகவே அவர் கொடுத்து வந்தார். அவர் மனம் பரந்து நிறைந்தவோர் "ஆசிரிய உள்ளம்" ஆகும்.

பார்த்தீர்களா! ஹரீன், உங்கள் அப்பா பள்ளிக்கூட நாட்களில் குறும்பு விளையாட்டு பிரியமும், கல்விப் பிரியமும் ஒன்று சேர்ந்துள்ளவராக இருந்தார். அதாவது பல குழப்படியும், பொது விவேகமும் உடைய மாணவராய் இருந்தார். ஆங்கிலத்தில் ஒரு வாக்கியம் இருக்கிறது; "குட்டிக் குதிரை எவ்வளவு குழப்படியோ, குதிரைப் பந்தயத்திலும் அவ்வளவு சுறுசுறுப்பும், கெம்பீரமுமாக இருக்கும் என்பதுதான்.

உங்கள் அப்பா ஒருபொழுதும் சாதுவான பையனுகவே இருந்தது கிடையாது. நீங்களும் குறும்பு, தொந்தரவு செய்யும் வேளைகளிலெல்லாம் உங்கள் அம்மா உங்களைக் கடினமாகக் கண்டிப்பா. அப்போது நான் உங்களின் பக்கம் வந்து உங்களை ஆதரித்து உதவுவதின் உள் இரகசியத்தை இப்போது நீங்கள் உணர முடியுமா?

உங்களில்
மிகவும் அன்பான
அப்பா

## மதுவினை விரும்புவோர்க்கு!

மனையவள் விரோதம் ஒன்று,
மாதவன் விரோதம் இரண்டு,
தனமது விரயம் மூன்று,
சகலரும் நகைத்தல் நான்கு,
தினந்தினம் வறுமை ஐந்து,
தேகத்தில் பிணியோ டாறு,
போயுறும் நரகம் ஏழு.

பண்டிதர் — இராசையா,
வட்டுக்கோட்டை.

## விஞ்ஞானம் வளர்கிறது

—"மகான்"—

சூரியன் ஒளியைத் தருகின்ருன். ஒளியின்றி உலகில்லையென்றே சொல்லலாம். பூமியைவிட 13,00,000 மடங்கு பெரிதாகவிருக்கும் சூரியன், பூமியிலிருந்துசுமார் 9,37,00,000 மைல் தூரத்திலுள்ளது.

சந்திரனைத் தரிசித்துவிடலாம் என்று கங்கணம் கட்டிக்கொண்டிருக்கும் ரஷ்ய, அமெரிக்க விஞ்ஞானிகளின் முழு முயற்சியின் வெற்றியினல் நாளை நாம் சந்திர மண்டலத்தில் நிலம் வாங்கி, வீடுகட்டி சந்தோஷமாக வாழ்ந்தாலும் ஆச்சரியப் படுவதற்கில்லை. ஆனல், செங்கதிர்களை அள்ளி வீசிக்கொண்டிருக்கும் சூரியனைப்பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடாத்துகிருர்கள் என்ற செய்தியைக் கேள்விப்பட்டதும்தான் நமது உடம்பே சிலிர்க்கிறது.

மத்தியான வேளை பகல் 12 மணி சூரியன் உச்சநிலைக்கு வந்துவிட்டான். அப்பப்பா... என்ன வெய்யில், என்ன வெய்யில்! வீதியில் நாம் சென்றுகொண்டிருக்கிருேம். நமது கால்கள் படும் வேதனை அதிலும் வயதுபோன பாட்டிமாரும் தாத்தாக்களும் அந்த வெயிலில் நடக்க முடியாமல் படும் அவதி...... சொல்லவே முடியாது! இப்படி அக்கினியைத் தன் வசம் வைத்திருக்கும் சூரியனைப்பற்றி அமெரிக்க விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்துகிருர்களென்ருல் அது ஆச்சரியப்படக்கூடிய ஒரு விஷயம் தான்!

சூரியனைப்பற்றி ஆராய்வதற்காக, அமெரிக்கா ஒரு செயற்கைக் கிரகத்தை ஏவி இருக்கிறது. இந்தக் கிரகம் 96 நிமிடங்களுக்கு ஒருமுறை உலகை வலம்வருகிறதென தேசிய ஆகாய மார்க்கமாக வான வெளி இலாகா அதிகாரபூர்வமாக அறிவித்தது சூரியனைப் பற்றி ஆராயும் இந்தக் கிரகத்துக்கு 'ஓசோ' என்று பெயர். இதன் எடை 458 ருத்தலாகும்.

இந்தக் கிரகம், உலகைச் சுற்றிவரும். பாதை உலகிலிருந்து மிகத்தூரமான இடம் 370 மைல் என்றும், மிகச் சமீப இலக்கு 340 மைல் என்றும் சம்பந்தப்பட்ட அதிகாரிகள் தெரிவித்துள்ளனர். சூரியனை, புதிய முறையிலும் சிக்கலின்றித் தெளிவாகவும் பார்க்க மனிதனுக்கு இக்கிரகம் வகைசெய்வதற்கெனறே திட்டமிட்டுத் தயாரிக்கப்பட்டிருக்கிறதாம்.

இந்தச் செயற்கைக் கிரகம் தொடர்ந்து ஆறு மாதங்கள் வான வெளியில் சுற்றிக்கொண்டிருக்கும். 17,000 மைல் வேகத்தில் இந்தச் செயற்கைக் கிரகம் பூமியைச் சுற்றுகிறது என்று அதிகாரிகள் அறிவித்துள்ளனர்!

விஞ்ஞானமே நீ வாழ்க!

## தமிழன்

பண்டைப் பெருமை யுளோன்
பாரினில் தாழ்ந்தது மேன்
அண்டிப் பிழைப்பதுமேன்
ஆதரவு அற்றதுமேன்

மொழியிற் சிறந்தவனும்
மேதினியில் குறைந்ததுமேன்
வழி காட்டும் வள்ளுவத்தை
வைத்திருந்தும் சோர்வதுமேன்

வாழும் வழியிருக்க
வையகத்தில் தாழ்வதுமேன்
வாழ் முறை சொல் நூலதனின்
வழி நடவா இழிமுறையாம்.

—சரஸ்வதி சுவாமிநாதன்

## வஞ்சகர் அழிந்தனர்!

—மாவை. ஆனந்தன்—

ஒரு தேசத்தை விக்கிரமன் என்னும் அரசன் ஆண்டு வந்தான். மிகவும் உயர்ந்த முறையில் தனது கடமையைச் செய்யும் அரசாங்கத் தொழிலாளிக்கு மிக்க பெறுமதியான பரிசொன்றை அவன் அளிக்க விரும்பினன். ஆதலால், நேர்மையும் ஊக்கமும் நிறைந்த தொழிலாளியைத் தேட முற்பட்டான்.

வயந்தகன் என்பவனே தனது கடமையைச் சரிவரச் செய்கின்ற தொழிலாளியென்பதை நன்கறிந்து அவனை அழைத்து வயந்தகா! உனது கடமைகளைத் தவையும் சிறப்போடு செய்ததனலாதலின் இப் பரிசை உனக்கே அளிக்கிறேன். அத்தோடு உனக்கு எனது பாராட்டுதலையும் நன்றியையும் தெரிவிக்கிறேன்". என்று பரிவோடு கூறி, பரிசையும் அளித்தான் அது கண்டு வியப்பும் மகிழ்வும் அடைந்த வயந்தகன் பணிவோடு பரிசை வாங்கிக் கொண்டான். இச் செய்தி காட்டுத் தீ போல் நாடெங்கும் பரவிற்று.

செய்தியை யறிந்த முதன் மந்திரி ரகுபதியும், மற்றைய பல அதிகாரிகளும், பொருமை மிகுதியால் அரசன் விக்கிரமன் மீது சீற்றம் கொண்டனர். அவர்களனைவரும் ஒன்று கூடி விக்கிரமனின் அரசைவீழ்த்தும் வழிவகைகளையும் ஆராய்ந்தனர். விக்கிரமனின் எதிரியான அயல் நாட்டு அரசனோடு சேர்ந்து, விக்கிரமனேடு போர் தொடுப்பதென முடிவு செய்யப்பட்டது.

அயல் நாட்டரசன் முடிவையறிந்து மகிழ்ந்து, ரகுபதியோடும் மற்றும் விக்கிரமனை விட்டுப் பிரிந்த அதிகாரிகளோடும் ஆலோசித்து, போர் செய்யும் நாளையும் குறிப்பிட்டான். இதையறிந்த விக்கிரமன் மிக்க சீற்றமுற்ருன். அவன் உளளம் கொதித்தது; உடல் குமுறியது! கண்கள் சிவந்தன! போருக்கு வேண்டிய ஆயத்தங்கள் அனைத்தும் செய்யப்பட்டன.

போர் முரசு கொட்டிற்று! இரத்தவெள்ளம் ஓடிற்று! கடும் போர் நிகழ்ந்தது. கடைசியில்... விக்கிரமன் தோற்ருன். வஞ்சகரின் கை ஓங்கிற்று. அரண்மனைகளும் பல ஊர்களும் கைப்பற்றப்பட்டன! விக்கிரமன் ஓடி ஒளித்தான்.

தந்தையின் தோல்வியையறிந்தான் இளைஞனை விக்கிரமனின் மைந்தன். சீற்றமும் கவலையும் அவனை வாட்டின. யுக்தியொன்று அவனுக்கு உதித்தது.

நடுச்சாமம் பன்னிரண்டுமணியிருக்கும். எதிரிகள் மதுவுண்ட மயக்கத்தால் மதி மயங்கித் தமது கூடாரங்களில் உறங்கிக் கொண்டிருந்தார்கள். விக்கிரமனின் மைந்தன் மெதுவாக அங்கு சென்று கூடாரங்களின் நாற்புறத்திலும் தீப்பற்றும்படி செய்துவிட்டு ஓடி விட்டான். தீ கொளுந்துவிட்டு எரிந்தது! எதிரிகள் சாம்பராயினர் சிலர் மட்டும் தப்பியோடிவிட்டார்கள்.

இது கண்டு அகமிக மகிழ்ந்த விக்கிரமன்; கூடாரத்துக்கு நெருப்புமூட்டியவனுக்குப் பரிசொன்று அளிக்கப் போவதாக அறிவித்தான நெருப்புமூட்டியது தன் மைந்தனேயென்பதைப் பின்னர் அறிந்தபோது எல்லையிலா மகிழ்வடைந்தானவன்.

# கலை அரங்கம்

## ஆபாசப் படங்களுக்கு ரஷ்ய டைரக்டர் எதிர்ப்பு

### இத்தாலிய நாவலாசிரியரும் இதையே கூறுகிறார்

மறைவில் வைக்கப்படவேண்டியதை திரையில் காட்ட எண்ணுகிறார்கள் திரைப்படத் தயாரிப்பாளர்கள். உள்ளங்கள் கெட்டால் அவர்களுக்கென்ன? பணம் வந்துவிட்டால்போதும். ஏன் இதைத் தயாரிக்கிறீர்களென்றால், சமூகம் விரும்புகிறது, மக்கள் வரவேற்கிறார்கள் என விளக்கம் தருகிறார்கள். உண்மை அப்படியா? சமூகத்தைப்பற்றி உணர்ந்து அதன் உயர்வு கருதும் அறிஞர்களின் கருத்து அப்படியா?

'பால் உணர்ச்சிகளை பிரதிபலிக்கும் காட்சிகளை சினிமா திரைகளில் காட்டி கீழ்த்தர உணர்ச்சிகளுக்குத் தூபம் போடுவது வருத்தத்துக்குரிய செயல்.'

இவ்வாறுதான் ரஷ்ய திரைப்பட டைரக்டர் திரு. கிரகரி சுக்ரே ஐரோப்பிய சமூக எழுத்தாளர் சங்கத்தில் பேசுகையில் குறிப்பிட்டார்.

'த பலாட் ஒவ் ஏ சோல்ஜர்' என்ற திரைப்படத்தைத் தயாரித்த திரு. சுக்ரே மேலும் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

எழுத்தாளர்கள் தமது எண்ணங்களை வெளியிட உரிமை உண்டு. ஆனால் கீழ்த்தர உணர்ச்சிகளை எழுப்பக்கூடிய வகையில் எழுத்தை உபயோகப்படுத்தக்கூடாது. சினிமாவில் இவ்வித உணர்ச்சிகளைத் தூண்டக்கூடிய காட்சிகள் காட்டப்படுகின்றன. இதனால் மனித சமூகத்தின் செயல்கள் பாதிக்கப்படுகின்றன.


இத்தாலிய நாவலாசிரியர் பேசுகையில் மக்களின் உள்ளங்களைக் கெடுக்கக்கூடிய சினிமாக்கள் தயாரிக்கப்படுவதை சங்கம் எதிர்த்தே தீரவேண்டும் எனக் கூறினார்.


விரைவில் எதிர்பாருங்கள்!
சினிமாஸ் திரைகளில்
எம். ஆர். ராதா, மகாலிங்கம், ஈ. வி. சரோஜா
நடித்த
ஆட வந்த தெய்வம்

சினிமாஸ் திரைகளில் விரைவில் வருகிறது!
சித்திரா - அசாத்
நடித்த
ஜிம்போ
(முழு நீளக் கேவா கலர் வனந்தரக் காட்சிகள் நிறைந்த படம்)

கடைசி வாரம்!
பிளாஸா (வெள்ளவத்தை) கேப்பிட்டல் (கொழும்பு)
மனோகர், வீரப்பா, ஈ. வி. சரோஜா, ராஜசுலோசனா
நடித்த
கைதி கண்ணாயிரம்

10வது வெற்றி வாரம்!



கிங்ஸ்லி (கொழும்பு)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
சிவாஜி கணேசன், ஜெமினி கணேசன், சாவித்திரி நடித்த
பாச மலர்

மனோகரா (யாழ்ப்பாணம்)
மாலை 6-30 இரவு 9-30 க்கு
வைஜயந்திமாலா நடித்த
மதுமதி

சனி, ஞாயிறு காலை 10-30 மணிக்கும் கிழமை நாட்களில் மாலை 4-15 க்கும்
Happy Annivesary
(ஆங்கிலம்)


## பீம்சிங் டைரக்ஷனில் மற்றொரு படம்

### சிவாஜி, பாலாஜி நடிக்கின்றனர்

பாசமலரைத் தயாரித்தவர்களில் ஒருவரான எம். ஆர். சந்தானம் தொடங்கியுள்ள கமலா படநிலையத்தின் முதல் தயாரிப்பை ஏ. பீம்சிங் டைரக்ட் செய்வார். முதலில் இச்சித்திரத்தை யோகானந்த டைரக்ட் செய்வதாக இருந்தது.

சிவாஜி கணேசன், சரோஜா தேவி, பாலாஜி, தேவிகா ஆகியோர் நடிக்கவிருக்கும் இப்படத்தின் திரைக்கதையை கே. பி. கொட்டாரக்கரா எழுதுகிறார். வசனத்தை ஆரூர்தாசு எழுதுகிறார். கவிஞர் கண்ணதாசன் பாடல்கள் இயற்ற விசுவநாதன் – இராமமூர்த்தி இசை அமைப்பார்களாம்.

## சிவாஜி கணேசனுக்கு மொழிபெயர்ப்பாளர்

சிவாஜி கணேசனின் அமெரிக்க சுற்றுப் பிரயாணத்தின் போது ஆங்காங்கு தமிழில் மொழிபெயர்த்துக்கூற மொழிபெயர்ப்பாளர் ஒருவரையும் அமெரிக்க அரசாங்கம் நியமித்துள்ளது.

திரு. டென்னிஸ்குக்ஸ் என்ற இந்த அமெரிக்க அதிகாரி சென்னையிலிருந்து அமெரிக்கா செல்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது. தமிழில் நன்கு பேசும் ஆற்றல் மிக்கவர் திரு. டென்னிஸ்குக்.

## திரைப்பட இறக்குமதி

### ரூ. 60 லட்சம் இலங்கை அனுப்பியது

இந்தியாவிலிருந்து இலங்கை திரைப்படம் இறக்குமதிசெய்த வகையில் 1961, 62-ம் ஆண்டுகளுக்கான செலவுத்தொகையாக ரூ. 60 லட்சம் அனுப்பியுள்ளது.

இந்திய திரைப்பட இறக்குமதி செய்வதில் வேறெந்தநாட்டிலும்பார்க்க இலங்கையே அதிக திரைப்படங்களை இறக்குமதி செய்துவருகிறது.

### புஷ்பக விமானம்......

(7-ம் பக்கத் தொடர்ச்சி)

னும் ஒரு சில வருடங்களில், இங்கு பல பல தொழிற்சாலைகள் நிறுவவும் திட்டம் போட்டுள்ளனர்.

இயற்கை அன்னை தமிழகத்திலே பூமிக்கடியில் இது காலமாக பத்திரமாகப் புதைத்து வைத்துள்ள இச்செல்வங்கள, தமிழகத்தை மேம்படுத்தும் காலம் விரைவில் வந்து கொண்டிருப்பதைப் பார்த்தோம் கள்ளத்தோணிகள் இனி இலங்கையிலிருந்து தமிழ் நாட்டுக்குச் செல்ல வேண்டியிருக்குமென்றார் என் சிங்கள நண்பர்!

ஒரு சின்ன விஷயம். நெய்வேலியிலே யுள்ள விருந்தினர் விடுதியைப் பற்றி ஒரு வார்த்தை கூறவேண்டும். நவீன வசதிகளெல்லாம் உள்ளன. சாப்பாடு முதல் நம்பர். மறக்க முடியவில்லை. பொட்டல் காடுதான் எப்படி மாறிவிட்டது! எல்லாம் பக்கத்திலுள்ள அந்தச் சிதம்பரேசனின் திருவிளையாடல். அந்த திக்கை நோக்கிக் கும்பிட்டு விட்டு சென்னைக்குத் திரும்பினோம்.

## "மஞ்சள் குங்குமம்"

### மதுரம் பிக்சர்ஸ் தயாரிக்கிறது

மதுரம் பிக்சர்ஸ் தயாரிக்கும் "மஞ்சள் குங்குமம்" என்ற படத்திற்கான படப்பிடிப்பு சமீபத்தில் ஆரம்பமாகியது. சிவாஜி கணேசன், சாவித்திரி, எம். ஆர். ராதா, ராமராவ் ஆகியோர் நடிக்கும் இப்படத்திற்கான கதை வசனத்தை சோலைமலை எழுதுகிறார். கண்ணதாசன் பாடல்கள் எழுதும் இப்படத்திற்கு விசுவநாதன் ராமமூர்த்தி இசையமைக்கின்றனர். கைராசி டைரக்டர் கே. சங்கர் இப்படத்தை டைரக்ட் செய்கிறார்.

### முருங்கன் கொலைவழக்கு..

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

முதலாம் எதிரியின் தகப்பனை வருவித்த நீதியரசர் அவரிடம் பின்வருமாறு கூறினார்:-

"உன் போன்ற தந்தைகளுக்குப் பிள்ளைகளே இருக்கக் கூடாது. ரிசைடர் குடிவகை தயாருத்தோ விற்றோ நீ பழுதடைந்ததுமல்லாமல பிள்ளைகளையும் நாசமாக்கிவிட்டாய். சூட்கேசில் இருந்த 6240ரூபாய் ரொக்கமே நீ இந்த வியாபாரத்தை பெரியளவில் செய்திருக்கிறாய் என்பதை முடிவாகத் தெரிவிக்கிறது. இந்தக் குடிவகையைத் தயாரிப்பதாலும் விற்பனை செய்வதாலும் நீ ஊரிலுள்ளவர்களுக்கு நஞ்சையே ஊட்டியிருக்கிறாய் என்று கூறுவேன்.

இனது முன்னோர் இந்தியாவிலிருந்து குடியேறியவர்கள் என்பது எனக்குத் தெரியவருகிறது. உன் போன்ற தீயபழக்கங்களைக் கைக்கொள்ளுகிறவர்கள் எமது நாட்டுமக்களை நாசப்படுத்திக்கொண்டே வருகிறார்கள். நீ இந்த நாட்டுப் பிரஜையல்ல என்பதை அதிகாரிகள் கவனித்து நாட்டை விட்டு வெளியேற்றுவதே உகந்தது.

ரிசைடர் விற்பதுபற்றி இந்த வழக்கிலே உள்ள சாட்சியத்தோடு பொலிசார் இவரிலே உடன் நடவடிக்கை எடுக்க வேண்டும். இதையிட்டு இவரை விசாரணை செய்பவர் எவரும் இவரைக் கடுந்தண்டனைக் குள்ளாக்குவதை கவனத்தில் கொள்ளவேண்டும்."

கடந்த 1960-ம் ஆண்டு ஆவணி மாதம் 3-ம் திகதி முருங்கனைச் சேர்ந்த நாராயண் சுப்பையா என்பவரை அதே யிடத்தைச் சேர்ந்த நாகமணி பூபாலசிங்கம் என்ற ஜோனும், ஆறுமுகமும் தனித்தும் கூட்டாகவும் கொலை செய்ததாக குற்றஞ்சாட்டி இவ்வழக்குத் தொடரப்பட்டிருந்தது.

முடிக்குரிய தரப்பில் முடிக்குரிய வழக்கறிஞர் திரு. பி. நகுலேஸ்வரன் ஆஜரானார். எதிரிகள் சார்பில் திரு. எம். பாலசுந்தரம் திரு. எஸ். நாகராசாவின் உதவியுடன் திரு. எஸ். கனகரத்தினத்தின் அனுசரணையுடன் ஆஜரானார். திரு. கே. ஜெகநாதன் அரசாங்கத்தினால் எதிரிதரப்பில் ஏற்படுத்தப்பட்டிருந்தார்.

### எங்கிருந்தோவந்தான்

பாட்டின் தலைப்புகளைக் கொண்டு படங்களுக்கு பெயர் சூட்டுவது இப்போது வழக்கமாகிவிட்டது. கன்னட மொழியில் பல திரைப்படங்களைத் தயாரித்து உள்ள அய்யர் படநிலையத்தாரும் தாம் தயாரிக்கும் தமிழ்ப்படத்துக்குஇந்தரீதியில் தான் 'எங்கிருந்தோ வந்தான்' எனப் பெயர் சூட்டியுள்ளனர்.

இந்த சமூகச் சித்திரம் மெஜஸ்டிக்கில் வளரத்தொடங்கியுள்ளது. கல்யாண்குமாரும் விஜயகுமாரியும் முக்கிய பாகங்களில் நடிக்கவிருக்கும் இப்படத்தை கோபாலகிருஷ்ணன் டைரக்ட் செய்வார். முத்துராமன், எம். வி. ராஜம்மா ஆகியோரும் இப்படத்தில் நடிப்பார்களெனத் தெரிகிறது. ஜி வெங்கடேசு இப்படத்துக்கு இசை அமைத்து வருகிறார். வசனத்தை மா. ரா. எழுதுகிறார்.


தொண்டமானாறு
செல்வச்சந்நிதி ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமியின்
மகா சங்காபிஷேகம்

வரும் புதன் கிழமை காலை 10 மணி வரையில் ஸ்ரீ சுப்பிரமணிய சுவாமிக்குச் சகஸ்ர மகா சங்காபிஷேகமும் அன்றிரவு விசேஷ உற்சவமும் நடைபெறும்.

அச் சமயங்களில் யாவரும் ஆசாரசீலராய் வந்து சரிசித்து, பெருமானுடைய திருவருட் பிரசாதத்தைப் பெற்று நல்வாழ்வு அடைவீர்களாக.

இங்ஙனம்
செ. விசாகரத்தின ஐயர்
தொண்டமானாறு
செல்வச்சந்நிதி
28-2-62

வாடகைக்கு
இரு கடைகள் காங்கேசன்துறை வீதியில் வாடகைக்கு உண்டு. கந்தோராயும் கிட்டங்கியாகவும் பாவிக்கலாம். விண்ணப்பம் 418, காங்கேசன்துறை வீதி, யாழ்ப்பாணம்.

மெஷின் மைண்டர்கள் தேவை
யாழ்ப்பாணத்தில் நன்கு ஸ்தாபிக்கப்பட்டுள்ள ஒரு கம்பனிக்கு அனுபவம் வாய்ந்த சிலிண்டர்-பிளாட்டின் மெசின் மைண்டர்கள் தேவை. அச்சு இயந்திரம் பழுதுபார்க்கும் அறிவு விசேஷ தகைமையாகக் கணிக்கப்பெறும். விபரங்கட்கு: X25, C/o. ஈழநாடு, யாழ்ப்பாணம்.


## "நாடு நலம்பெற..."

### வாரப்பதிப்பில் புதிய அம்சம்

உழவும் தொழிலும் வளமுறாத நாடு நலம் பெறமுடியாது. பொருளாதார அபிவிருத்தி ஏற்படாதவரையில் நாடு சுபிட்சமடையவும்முடியாது. நளிர்மணி நீரும், நயம்படு கனிகளும், குளிர்பூந்தென்றலும், கொழும்பொழிற் பசுமையும் வாய்ந்து நன்கிலங்கும் நிலை ஏற்படவேண்டும். இந்தவகையில் நமது நாட்டில் முக்கியமாக இளைஞரிடையே பொருளாதார விழிப்புணர்ச்சி ஏற்பட்டிருக்கிறது. இதற்கு ஆக்கமும் ஊக்கமும் அளிக்கும் பொருட்டு "நாடு நலம்பெற!" என்ற பகுதி 'ஈழநாடு' வாரப்பதிப்பில் ஆரம்பிக்கப்பெறும். கைத்தொழில், விவசாயம், கோழிவளர்ப்பு, ஆகியன இப்பகுதியில் இடம்பெறும். இத்துறைகளில் ஈடுபட்டு உழைக்கும் பொது ஸ்தாபனங்களுக்கும் ஏனையோருக்கும் பயனளிக்கும் வகையில் செய்கைமுறைகளையும் அறிஞர்கள் ஆராய்ச்சி முடிவுகளையும் தாங்கி இப்பகுதி அடுத்தவாரம் தொடக்கம் வெளிவரவிருக்கிறது. இப்பகுதிக்கு சிறந்த கட்டுரைகளும் கருத்துரைகளும் வரவேற்கப்படுகின்றன.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேலைவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1962-ம் ஆண்டு மார்ச் மாதம் 18-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.